
# பிறவி வருணம் உயர்வு-தாழ்வு ஒழிந்ததா?



**நான்** 21.6.2018 வியாழன் அன்று 94 அகவையைத் தொட்டுள்ளேன்.

தந்தை பெரியார் அவர்கள் 28.10.1944-இல் பரமத்தி வேலூர் என்கிற ஊருக்கு திராவிடர் கழகத் தொடக்க விழாவிற்கு வந்திருந்தார்.

நான் முதன்முதலாக அவரைப் பார்த்ததும் அவருடைய பேச்சைக் கேட்டதும் அன்றுதான். அன்று வரையில் வடலூர் இராமலிங்க அடிகளாருடைய கொள்கைப் பற்றாளனாக இருந்த நான், தந்தை பெரியார் வழியில் "பிறவி வருணாசிரம உயர்வு-தாழ்வு இந்துக்களிடையே இருப்பதை" நன்கு புரிந்துகொண்டேன்.

1919 முதல் 1925 வரையில் தந்தை பெரியார் காங்கிரசுக் கட்சியில் இருந்தார். அப்போது திருப்பூரில் காங்கிரசுக் கட்சி சார்பில் 1922 டிசம்பர் மாதம் நடைபெற்ற கட்சி மாநாட்டில் "இந்துக்களிடையே உள்ள தீண்டாமையை ஒழிக்க காங்கிரசு பாடுபட வேண்டும்" என்று பெரியார் தீர்மானம் கொண்டு வந்தார்.

மாநாட்டுத் தலைவர் உள்பட, சி. இராசகோபாலாச்சாரியார், எஸ். சீனிவாச அய்யங்கார் உள்ளிட்ட எல்லாப் பார்ப்பனர்களும் கட்டுப்பாடாக ஈ.வெ.ரா.வின் தீண்டாமை ஒழிப்புத் தீர்மானத்தை எதிர்த்தார்கள்.

"காங்கிரசுக் கட்சி அரசியல் கட்சி. இந்தத் தீர்மானம் மதம் சம்பந்தப்பட்டது. எனவே இதை நிறைவேற்ற முடியாது" என்று கூறித் தள்ளுபடி செய்தனர்.

அன்று இரவு காங்கிரசுப் பொதுக்கூட்டத்தில் திருப்பூரில் பேசிய பெரியார், "மனுநீதியும் இராமாயணமும் சாதியையும் தீண்டாமையையும் காப்பாற்றுவன. இவற்றைத் தீ வைத்து எரிக்க வேண்டும்" என்று கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

அன்று இரவு, ஒரே மகிழுந்தில் ஈ.வெ.ரா.வும், இராசாசியும் ஈரோட்டிற்குப் பயணம் செய்தார்கள். அப்பொழுது ஈ.வெ.ரா.வைப் பார்த்து இராசாசி "நாய்க்கரே! இன்றைக்கு திருப்பூரில் டோஸ் ரொம்ப ஸ்டிராங்க்" என்று குறிப்பிட்டார்.

ஈ.வெ.ரா. உடனே, "இந்த மடப் பசங்களுக்கு இதென்ன ஸ்டிராங்? இதைவிட இன்னும் ஸ்டிராங்கா வேண்டும்" என்று அமைதியாகப் பதில் சொன்னார்.

மேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களும் தந்தை பெரியார் அவர்களைப் போலவே வருணாசிரமத்தை ஒழிக்க வேண்டி மனுஸ்மிருதியை 1927இல் மகத் நகரில் தீ வைத்து எரித்தார்.

இரண்டு தலைவர்களும் சாகும் வரையில் பிறவி வருணம்-தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபட்டார்கள்.

இந்துச் சட்டத்திலும், சாத்திரங்களிலும் வர்ணாசிரமத்துக்கும் தீண்டாமைக்கும் பாதுகாப்பு இருப்பதை இருவரும் மக்களுக்கு விளக்கிச் சொன்னார்கள்; எழுதினார்கள்.

சுவடி : 43
ஏடு : 1
சூலை 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.272/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**72992 14554**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

அவரவர் போக்கில் இவற்றை நீக்குவதற்கு முயற்சி செய்தனர்.

மேதை அம்பேத்கர், 1947இல் அரசியல் நிர்ணய அவையில், இவற்றை அடியோடு நீக்குவதற்கு ஏற்ற தீர்மானங்களை இரண்டு தீர்மானங்கள் மூலம் "இந்துச் சட்டத்திருத்த மசோதா" என்ற பெயரில் பின்கண்ட வடிவில் முன்மொழிந்தார்.

அவையாவன (அ) "இந்துச் சட்டம் பற்றிய மூல பாடம், விதி, பொருள் விளக்கம் அல்லது இந்துச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் ஏற்கெனவே நடப்பில் இருந்த எந்தப் பழக்கச் சட்டமும் வழக்கச் சட்டமும் இந்தச் சட்டம் நடப்புக்கு வந்தவுடனே நீக்கப்பட்டு விடும். இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட எந்த ஒன்றும், உடனடியாக நடப்புக்கு வந்துவிடும்."

(ஆ) "இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் இந்தச் சட்டத்திற்குப் பொருந்தாத தன்மையில் இதற்கு முன்னர் நடப்பிலிருந்த எந்தச் சட்டமும் உடனடியாக நீக்கப்பெற்று விடும்."

இந்தச் சட்டத் திருத்தத்தை அம்பேத்கர் முன்மொழிந்த உடனேயே, அவைத் தலைவர் இராசேந்திர பிரசாத் வன்மையாக அவரை எதிர்த்தார்.

தந்தை பெரியார் இந்திய அரசமைப்புச் சட்ட விதிகள் 13(1), 372(1), 25 முதலானவை அரசமைப்புச் சட்டத் திலிருந்து அடியோடு நீக்கப்பட வேண்டுமென்று 3.11.1957இல் இந்திய அரசுக்குக் கோரிக்கை வைத் தார். அது பற்றித் தமிழ் மக்களுக்குத் தொடர்வண்டி மூலமும், சிற்றுந்து மூலமும் பரப்புரை செய்தார்.

மேலே கண்ட அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்ட 1949, நவம்பர் 26 அன்று மேலே கண்ட அரசமைப்புச் சட்டப் பகுதிகள் அச்சடிக்கப்பட்ட துண்டுத் தாள்களை, 26.11.1957இல் எரிக்க வேண்டும் என்று ஆணையிட்டார்.

கருஞ்சட்டைத் தோழர்கள் பத்தாயிரம் பேர் - ஆண்களும், பெண்களும், முதியோரும், இளையோரும் அரசியல் சட்டத்தாள்களைத் தீ வைத்து எரித்தனர். நானும் பெரம்பலூரில் எரித்தேன்.

என்னைப்போல் எரித்தவர்கள் மூவாயிரம் பேர் தண்டிக்கப்பட்டனர். ஒரு மாதம் முதல் ஒரு ஆண்டு, ஒன்றரை ஆண்டு, இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு என்று கொடுந்தண்டனையை அனுபவித்தார்கள்.

இன்றும் அப்படித் தண்டனை அனுபவித்தவர்கள் உயிரோடு இருக்கிறார்கள்.

பெரியாருடைய தொண்டர்கள் மற்றும் பெரியா ருடைய பெயரை உச்சரிக்கும் வாக்குவேட்டைக் கட்சிக் காரர்கள் பெரியாருடைய பெயரைச் சொல்லுவதோடு சரி. "அவருடைய இறுதிக் குறிக்கோளை நிறை வேற்றிட நாம் உருப்படியாக என்ன செய்தோம்? என்ன செய்ய முடியும்?" என்பவை பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என எண்ணுகிறேன். நிற்க.

நான் இன்று உடல் தளர்ந்த நிலையில், ஓராண்டாக, என் மூத்த மகன் வீட்டில் தாம்பரத்தில் பாதுகாப்பாகத் தங்கியிருக்கிறேன்.

இனி, 2018 சூலையில் தொடங்கி, மாதந்தோறும் அறக்கட்டளை வளாகத்தில் 20ஆம் நாள் முதல் 10 நாள்கள் தங்கிட விரும்புகிறேன். அதுசமயம், மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை முழுவதும், இந்திய அரச மைப்புச் சட்டத்தில் உள்ள வருண உயர்வு தாழ்வு பாதுகாப்பு மற்றும் இந்துச் சட்டம் பாதுகாப்புப் பற்றி - மா.பெ.பொ.க. தோழர்கள் பெரியாரியலாளர்கள், மார்க் சியர்கள், அம்பேத்கரிய வாதிகள் திட்டமிட்டு நன்கு விரிவாக விவாதிக்க வேண்டுமென்று, 21.6.2018 அன்று முடிவு செய்தேன்.

**இத்திட்டம் வெற்றியாக நிறைவேற மேலே கண்ட கொள்கைகளில் நாட்டமுள்ள எல்லா இளைஞர்களும், பட்டம் பெற்றவர்களும், இளம் வழக்குரைஞர்களும், அரசு-தனியார் துறை அலுவலர்களும் மற்றும் பெரியார்-நாகம்மை அறக்கட்டளையினரும் மனமுவந்து முன்வர வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.**

**1.7.2018** **- வே. ஆனைமுத்து**

## மக்கள் போராட்டம் சனநாயகமா? பயங்கரவாதமா?

அறிவர் ஆயம் சார்பில் 16.6.2018 சனி மாலை 6 மணிக்கு சென்னை வடபழனி சிகரம் அரங்கத்தில் மக்கள் போராட்டம்-சனநாய கமா? பயங்கரவாதமா? என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. பேரா. பி.யோகீசு வரன் தலைமை தாங்கினார். பொறிஞர் பிரடெரிக் ஏங்கல்சு வரவேற்புரையாற்றினார். முன்னாள் நீதிபதி து. அரிபரந்தாமன், பெ. மணியரசன், பா. ஏகலைவன் ஆகியோர் உரை யாற்றினர். வே. பிரபாகரன் நெறியாள்கை செய்தார். பொறியாளர் க. யோகநாதன் நன்றி யுரையாற்றினார்.

# கச்சநத்தம் தாக்குதல் – தீர்வு என்ன?

- க. முகிலன்

“தீண்டாமை என்பது இருவேறுபட்ட வகுப்பி னருக்கு இடையிலான போராட்டம். அது சாதி இந்துக் களுக்கும் தீண்டத்தகாதோருக்கும் இடையிலான போராட்டம். அது ஒரு தனிமனிதன் மீது இழைக்கப் படும் அநீதி அல்ல. ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பின் மீது நிகழ்த்தும் அநீதி. இப்போராட்டம் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரோடு எப்படிப்பட்ட உறவைப் பேண வேண்டும் என்று வரையறுக்கிறது. எங்களை யும் மற்றவர்களைப் போல சமமாக நடத்துங்கள் என்று நீங்கள் குரலெழுப்பும் அடுத்த நொடியே இந்தப் போராட்டம் தொடங்கிவிடுகிறது.

சாதி இந்துக்களின் கோபத்திற்கான காரணம் மிக எளிமையானது. நீங்கள் அவர்களுக்குச் சமமாக நடந்து கொள்வது அவர்களை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. அவர்களுடைய பார்வையில் உங்களுடைய நிலை என்பது கீழானது. நீங்கள் தூய்மையற்ற வர்கள். அடித்தட்டிலேயே இருக்க வேண்டியவர்கள். அப்படியே இருந்தீர்களானால் அவர்கள் உங்களை நிம்மதியாக வாழவிடுவார்கள். முடியாது என்று நீங்கள் அந்தக் கோட்டைத் தாண்டினால் போராட்டம் தொடங்கி விடும்.”

(- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், “ஜனதா” இதழ், 27.06.1936)

மேதை அம்பேத்கர் எண்பது ஆண்டுகளுக்குமுன் கூறிய நிலையே இன்றும் இந்தியா முழுவதும் நீடிக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளுக் காகவும் சமத்துவத்துக்காகவும் குரல் எழுப்பும் போதெல்லாம்-அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் போதெல்லாம் சாதி இந்துக்கள் அவர்கள் மீது தாக்குதலைத் தொடுக்கின்றனர்.

28.05.2018 அன்று சிவகங்கை மாவட்டம் கச்சநத்தம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்டவர்கள் மீது சாதி இந்துக்கள் நடத்திய கொடிய தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். அய்ந்துபேர் படுகாயமடைந்தனர். அவர்களில் அய்ம்பது அகவையான ஒருவரின் உடம்பில் அறுபது இடங்களில் வெட்டப்பட்டிருந்தது என்பதிலிருந்தே இத்தாக்குதல் எவ்வளவு கொடூரமாக இருந்தது என் பதை அறியலாம்.

மதுரையிலிருந்து 47 கி.மீ. தொலைவில் உள்ள கச்சநத்தத்தில் 79 பள்ளர் குடும்பங்களும் 6 அக முடையார் குடும்பங்களும் உள்ளன. இவர்களின் கிட்டத்தட்ட 30 குடும்பத்தினர் வேலையின் பொருட்டு வெளியூர்களில் இருக்கின்றனர். பள்ளர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர். தமிழ்நாட்டில் பறையர், பள்ளர், அருந்த தியர் என்கிற மூன்று பெரும் தாழ்த்தப்பட்ட சாதிகள் உள்ளன. இந்தியாவில் 400க்கு மேற்பட்ட தாழ்த் தப்பட்ட சாதிகள் இருக்கின்றன. அகமுடையார் பிற்படுத் தப்பட்ட வகுப்பினர். முக்குலத்தோரில் ஒரு பிரிவினர். முக்குலத்தோரில் மறவர், கள்ளர், அகமுடையார் என்ற உட்பிரிவுகள் உள்ளன.

கச்சநத்தத்தில் பள்ளர் பெரும் எண்ணிக்கையி னராக இருந்த போதிலும் கச்சநத்தத்தைச் சுற்றியுள்ள மறநாடு, ஆலடிநத்தம், அரவங்காடு, திருப்பாச்சேத்தி ஆகிய ஊர்களில் அகமுடையரும், கள்ளரும் பெரும் எண்ணிக்கையினராக இருக்கின்றனர்.

**தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் எந்த வொரு “சேரி”யைச் சுற்றிலும் சாதி இந்துக்கள் பெரும் எண்ணிக்கையினராக வாழும் நிலையே இருக் கிறது. இந்துமத சாத்திரங்களின் பெயரால் தாழ்த்தப் பட்டவர்களுக்குக் காலங்காலமாக சமூக உரிமை களும், உடைமை உரிமையும் மறுக்கப்பட்டு, சாதி இந்துக் களையே சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்**



கச்சநத்தம் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு

**டிருந்த காரணத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் சாதி இந்துக்களுக்கு அடங்கி ஒடுங்கி வாழ்ந்தனர்.**

ஆனால் கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட குடும்பங்களில் கல்வி கற்று வெளியூர்களில் வேலை செய்வோரின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. கிராமங்களில் வேளாண் தொழில் நலிவுற்றதாலும், இயந்திரமயமாக்கப்பட்டதாலும், தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் நகரங்களில் கட்டட வேலை உள்ளிட்ட பல்வேறு பணிகளில் நாள் கூலி, வாரக் கூலி வேலைகளுக்குச் செல்கின்றனர்.

1991இல் அம்பேத்கரின் நூற்றாண்டு நிகழ்வு தாழ்த்தப்பட்ட இளைஞர்களிடம் உரிமை வேட்கையை, சமத்துவ உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது. இம்மாற்றங்களைச் சாதி இந்துக்களால் இயல்பாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே தாழ்த்தப்பட்டவர் மீதான வெறுப்பு, சாதி இந்துக்களிடம் நீறுபூத்த நெருப்பாக இருந்து கொண்டேயிருக்கிறது. எங்கெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைகிறதோ அங்கெல்லாம் அது தீப்பற்றி எரிகிறது. கச்சநத்தத்திலும் அவ்வாறுதான் நடந்தது.

கச்சநத்தத்தில் கருப்பண்ணசாமி கோயில் இருக்கிறது. அது முற்றிலும் தாழ்த்தப்பட்டவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆண்டுதோறும் வைகாசி மாதம் கருப்பண்ணசாமி கோயில் திருவிழா நடைபெறும். இந்த ஆண்டு மே 25 அன்று இத்திருவிழா நடந்தது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் திருவிழா வரியாக ரூ.1700 வசூலிக்கப்பட்டது. வெளியூர்களில் வாழும் கச்சநத்தம் பள்ளர் குடும்பத்தினரும் இந்த வரியைக் கொடுத்தனர்; திருவிழாவிலும் கலந்து கொண்டனர். இத்திருவிழாவிற்காக வெளியூர்களிலிருந்து உறவினர்களும் நண்பர்களும் வந்து தங்கியிருந்தனர்.

மே 26 அன்று இராணுவத்தில் பணிபுரியும் தேவேந்திரனும், மதுரை தல்லாக்குளம் காவல் நிலையத்தில் பணியாற்றும் பிரபாகரனும் கருப்பண்ணசாமி கோயில் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த அகமுடையர் சாதியைச் சார்ந்த 48 அகவையினரான சந்திரகுமார், மேல்சாதியினரான தன்னைக் கண்டபிறகும் தேவேந்திரனும் பிரபாகரனும் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருப்பதைக் கண்டு வெகுண்டார். அதுகுறித்து அவர்களிடம் வாக்குவாதம் செய்தார். இழிசொற்களால் திட்டினார். அப்போது தேவேந்திரன் "உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்" என்று கூறினார். உடனே சந்திரகுமாரின் மகன் சுமன், "எதிர்த்துப் பேசுகிறாயா?" என்று கூறியவாறு கத்தியைக் காட்டி மிரட்டினார்.

இராணுவத்தில் பணிபுரியும் தேவேந்திரனும் காவல் துறையில் பணியாற்றும் பிரபாகரனும் திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் பணியாற்றும் சந்திரகுமாரும் அவருடைய மகன் சுமனும் கத்தியைக்



கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்டவரின் குடும்பத்தினருக்கு சூன் 1 அன்று தொல் திருமாவளவன் ஆறுதல் கூறினார்

காட்டித் தங்களை மிரட்டியதாகப் புகார் அளித்தனர். காவல் துறையினர் சந்திரகுமார் வீட்டிற்குச் சென்றனர். சுமன் வீட்டில் இல்லாததால் அவருடைய தந்தை சந்திரகுமாரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். இழிவுபடுத்திப் பேசியதற்காக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)-யின் கீழ்வழக்குப் பதிவு செய்து, அன்று மாலையே சந்திரகுமாரை வீட்டுக்கு அனுப்பினர். கச்சநத்தம், பழையனூர் காவல் நிலைய எல்லைக்குள் வருவதால், இந்த வழக்கு பழையனூர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுக்கு எதிராகப் புகார் கொடுத்தது, சந்திரகுமாரைக் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தது, வழக்குப் பதிவு செய்தது ஆகியவை தங்கள் குடும்பத்தை அவமானப்படுத்திவிட்டதாக மனக் கொதிப்படைந்தனர். தங்கள் மேல்சாதிப் பெருமைக்கு இழுக்கு நேர்ந்துவிட்டதாகக் குமுறினர்.

சுமனும் அவர் தம்பி அருணும் பக்கத்து ஊர்களிலிருந்து இருபது பேரைத் திரட்டினர். மே 28 அன்று இரவு 9.30 மணியளவில் இரண்டு குழுவாகப் பிரிந்து கொடிய ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தினர். கச்சநத்தத்திற்கான மின்சாரத்தைத் துண்டித்தனர். முதலில் தேவேந்திரன் வீட்டிற்குள் ஒரு குழு நுழைந்தது. தப்பித்து வெளியே ஓடிவருபவரைத் தாக்குவதற்காக மற்றொரு குழுவினர் வெளியில் காத்திருந்தனர். தேவேந்திரன் வீட்டில் இல்லாததால் அவருடைய தந்தை 65 அகவையினரான ஆறுமுகத்தை வீட்டிலிருந்து வெளியில் இழுத்துவந்து சரமாரியாக வெட்டிக் கொன்றனர்.

அடுத்ததாக சண்முகநாதன் வீட்டிற்குச் சென்றனர். சாதி இந்துக்களில் சிலர் கச்சநத்தத்திலும் சுற்றியுள்ள

ஊர்களிலும் கஞ்சா விற்று வந்தனர். சண்முகநாதன் (அகவை 31) இதைக் கண்டித்தார். இதுகுறித்துக் காவல் நிலையத்தில் பல தடவை புகார் கொடுத்தார். சாதி இந்துக்களில் சிலர் தவறே செய்தாலும் அதைத் தட்டிக் கேட்கும் உரிமை தாழ்த்தப்பட்டவரான சண்முக நாதனுக்கு இல்லை என்று கருதினர். மேலும் திருவிழா ஏற்பாடுகள் குறித்து சண்முகநாதன் வீட்டில்தான் கூடிப் பேசினர். 2017 வரையில் திருவிழா நாளில் சாதி இந்துக்கள் கருப்பண்ணசாமி கோயிலுக்கு வந்து ''பிரசாதம்'' பெற்றுக் கொண்டனர். 2017இல் ஏற்பட்ட தகராறு காரணமாக 2018 மே 25 அன்று சாதி இந்துக் கள் திருவிழா நாளில் கோயிலுக்குச் செல்லவில்லை. இத்தகைய காரணங்களால் சண்முகநாதனை வீடு புகுந்து ஆயுதங்களால் தாக்கினர். மருத்துவமனைக் குக் கொண்டுசெல்லும் வழியிலேயே சண்முகநாதன் இறந்து போனார். இத்தாக்குதலில் படுகாயமடைந்த 22 அகவையினரான சந்திரசேகர் மே 31 அன்று மதுரை அரசு மருத்துவமனையில் இறந்தார்.

மூன்றாவதாக இச்சாதிவெறிக் கும்பல் தனசேகரன் என்பவரின் வீட்டிற்குள் நுழைந்தது. தனசேகரனையும் ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த முதுகலைப் பட்டதாரியான அவருடைய மகன் சுகுமாறனையும் சரமாரியாக வெட்டினார்கள். படுகாயங்களுடன் இவர்கள் மருத்துவமனையில் இருக்கின்றனர். இச்சாதிவெறிக் கும்பலைச் சேர்ந்தவர்கள்தான் 2017இல் கச்சநத்தத் தின் முன்னாள் ஊராட்சித் தலைவரான முருகனையும் வெட்டிக் கொன்றிருப்பார்கள் என்று கருதப்படுகிறது. வீடுகளில் இருந்த பொருள்களையும் அடித்து நொறுக் கினர்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலைக்கு எதிராக மே 22 அன்று மக்கள் நடத்திய 100ஆம் நாள் போராட்டத்தில் காவல் துறையினர் திட்டமிட்டுத் துப்பாக்கியால் சுட்டதில் 13 பேர் கொல் லப்பட்ட நிகழ்வால் தமிழகமே அரசுக்கு எதிராகக் கொதித்தெழுந்தது. அந்தச் சூழலில் மே 28 அன்றிரவு கச்சநத்தத்தில் சாதி ஆதிக்க வெறிகொண்ட ஒரு கும்பல் தாழ்த்தப்பட்டவர்கள் மீது நடத்திய கொடூரத் தாக்குதல் பற்றிய செய்தி ஊடகங்களில் வெளிவராமல் தமிழக அரசு தடுத்துவிட்டது. கைப்பேசிகளின் வாட்ஸ்-அப் மூலமே இச்செய்தி பரவியது.

மே 29, 30, 31 ஆகிய மூன்று நாள்கள் கச்சநத்தம் படுகொலையைக் கண்டித்துத் தாழ்த்தப்பட்டவர்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திரு வள்ளுவர் சிலை அருகில் ஆர்ப்பாட்டம் செய்தனர். தாக்குதல் நடத்தியவர்களுக்குத் துணையாக இருந்த பழையனூர் காவல் நிலையத் துணை ஆய்வாள ரைப் பணியிடை நீக்கம் செய்யாத வரை கொல்லப் பட்டவர்களின் உடல்களைப் பெறமாட்டோம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர். இவர்களின் கோரிக்கை யின்படி, துணை ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். அதேபோன்று பழையனூர் காவல்



கச்சநத்தத்தில் தலித்துகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து மே 30 அன்று மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

நிலைய எல்லைக்குள் இருந்த கச்சநத்தம் திருப்பாச் சேத்திக் காவல் நிலையத்தின்கீழ் மாற்றப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்புகளின் தலைவர் கள், அரசியல் கட்சிகள், முற்போக்கு இயக்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். சாதி ஆதிக்கத் திற்குப் பலியான மூவரின் உடல்கள் சூன் 2 அன்று கச்சநத்தத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், தாழ்த்தப்பட் டோருக்கான தேசிய ஆணையமும் கச்சநத்தம் வன் கொடுமைத் தாக்குதலுக்கு எளிதில் உள்ளாகக் கூடிய ஊர் என்று அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் படி, தமிழ்நாட்டில் 347 ஊர்கள் வன்கொடுமைத் தாக்குதல் நடக்க வாய்ப்புள்ளவை என்று வகைப்படுத் தப்பட்டுள்ளன. இவ்வாறு வகைப்படுத்தப்படும் ஊர் களில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சட்டம் ஒழுங்கு குறித்து ஆய்வு செய்ய வேண்டும். சிறப்புக் காவல் துறையை அப்பகுதியில் அமர்த்த வேண்டும். சாதிய மோதல் தவிர்ப்பு குறித்த விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

கச்சநத்தம் தாழ்த்தப்பட்டோர் மீது கொடிய தாக்குதல் நடத்தியவர்களில் ஆறு பேரைக் காவல் துறையினர் கைது செய்தனர். அய்ந்துபேர் மதுரை நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இவர்கள்மீது இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் 2015ஆம் ஆண்டின் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் பல பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் அனை வரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**அகமுடையரான சந்திரகுமாருக்கும் பள்ளரான தேவேந்திரனுக்கும் நடந்த வாய்ச்சண்டை மட்டுமே இக்கொடிய தாக்குதலுக்குக் காரணமல்ல; அது ஒரு தீப்பொறியாக மட்டுமே அமைந்தது. சிவகங்கை மாவட் டத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட வர்களை இழிவாக நடத்தும் போக்கு சாதி இந்துக் களிடம் மேலோங்கி வந்தது. சாதி இந்துக்களை எதிர்ப்பது என்பது தங்கள் உயிருக்கும், உடைமைக்**



குசராத் உனா நகரில் அரை நிர்வாணம் ஆக்கப்பட்டு தாக்கப்பட்ட நான்கு தலித் இளைஞர்கள்

**கும், வாழ்வாதாரத்திற்கும் ஆபத்தானதாக முடியும் என்று எண்ணி, தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் மீதான இழிவுகளுக்கு எதிர்வினையாற்றாமல் பொறுமை காத்து வருகின்றனர். ஆனால் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் மருத்துவர் கிருட்டிணசாமி, தேவேந்திரகுல வேளாளர்களான பள்ளர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் என்று பா.ச.க. தலைவர் அமித்ஷாவை அழைத்து மாநாடு நடத்தினார். அரசியல் ஆதாயத்துக்காக தன் சொந்த மக்களையே பலியிட முனைந்துள்ளார். பறையர் என்ற பிரிவினரைவிட பள்ளர் பிரிவினர் எவ்வளவுதான் முன்னேறினாலும் இந்துமதம் என்று ஒன்று இருக்கும் வரை சாதி இந்துக்கள் அவர்களைத் தீண்டப்படாதவர்களையே பார்ப்பார்கள்.**

கச்சநத்தத்தில் பள்ளர்களில் பெரும்பாலோர்க்குச் சொந்தமாக நிலம் இருக்கிறது. வைகை ஆற்று நீரைக் கொண்டு இவர்கள் நெல், கரும்பு, வாழை முதலான வற்றைப் பயிரிடுகின்றனர். சாதி இந்துக்களை எதிர்த்தால் வைகை ஆற்று நீர் தங்கள் நிலத்துக்கு வரவிடாமல் தடுத்துவிடுவார்கள் என்று அஞ்சுகிறார்கள். வெளியூர்களில் வேலை கிடைத்ததால் கச்சநத்தத்திலிருந்து கிட்டத்தட்ட முப்பது குடும்பங்கள் வெளியேறிவிட்டனர். வேளாண்மை, சட்டம், பொறியியல், கலை-அறிவியல் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டவர்களின் பிள்ளைகள் படிக்கின்றனர்.

கல்வி, பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேறிவருவதைச் சாதி இந்துக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இனி, இவர்கள் தங்களுக்கு அடங்கி ஒடுங்கி நடக்க மாட்டார்கள்; சமமாக நடக்க முயல்வார்கள; எனவே தங்கள் சாதி உயர்வை நிலைநிறுத்த தாழ்த்தப்பட்டவர்களை அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற எண்ணம் சாதி இந்துக்களிடம் கனன்று கொண்டேயிருக்கிறது. இத்தகைய நிலை கச்சநத்தத்தில் மட்டுமின்றி, இந்தியா முழுவதும் நிலவுகிறது. காலங்காலமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் இருந்து வந்தது போன்ற கீழான-இழிவான நிலையிலேயே மட்டந்தட்டி வைக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் மீதான தாக்குதல்கள் சாதி இந்துக்களால் நடத்தப்படுகின்றன.

**பிற்படுத்தப்பட்ட சாதியினர்தாம் தாழ்த்தப்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர் என்று பார்ப்பனப் படிப்பாளிகள் கூறி வருகின்றனர். இது பார்ப்பனரின் பிரித்தாளும் சூழ்ச்சி. தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் உழைக்கும் சாதியினர் - உழைக்கும் வர்க்கத்தினர். அதனால் கிராமங்களில் வயல்களில் இருபிரிவினரும் ஒன்றாக வேலை செய்கின்றனர்; அருகருகில் குடியிருக்கின்றனர். சாதியப் படிநிலையிலும் இவர்கள் அடுத்தடுத்த நிலைகளில் இருப்பவர்கள். எனவே இவர்களிடையேதான் மோதல் ஏற்படுமே தவிர, சாதிப்படிநிலைகளில் உயரத்தில் இருக்கின்ற - நேரடியாக உடலுழைப்பில் ஈடுபடாத பார்ப்பனருக்கும் மற்ற மேல்சாதியினருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே நேரடியான மோதல் ஏற்பட வாய்ப்பு இல்லை.**

பிற்படுத்தப்பட்ட சாதியினர் மட்டும் கொடுமையானவர்களா? **இல்லை! பிறப்பின் அடிப்படையில் உயர்வு-தாழ்வு கற்பித்து, இச்சாதியக் கட்டமைப்பைக் கட்டிக்காத்து வரும் இந்து மதத் தத்துவமே கொடுமையானது. நால்வருணத்தையும் அவற்றிலிருந்து ஆறாயிரம் சாதிகளையும் உருவாக்கி அவற்றுக்கிடையே உயர்வு-தாழ்வுகளைக் கற்பிக்கும் இந்து மதத்தையும், அதன் சாத்திரங்களையும் இதிகாச - புராணங்களையும், இவற்றுக்குத் தலைமை தாங்கும் பார்ப்பனர்களையும் எதிர்ப்பதன் மூலமே இந்திய சமூகத்தின் அடித்தளமாக இருக்கின்ற சாதியக் கட்டமைப்பைத் தகர்க்க முடியும்.**

இதை அம்பேத்கர் இவ்வாறு கூறுகிறார் : “இந்துக்கள் கொஞ்சமும் ஈவிரக்கமின்றியும் சட்ட விரோதமாகவும் தீண்டாமையைக் கடைபிடிப்பதற்குக் காரணம் இந்து மதம், மதக்கட்டுப்பாடு தெய்வீகமானது, புனிதமானது என்று சொல்லுவதோடு மட்டுமின்றி, இந்தக் கட்டுப்பாட்டினை ஒல்லும் வகையெல்லாம் பேணிக் காப்பது கடமை என்றும் விதித்திருப்பதுதான். அவர்கள் மனிதாபிமானத்தின் குரலுக்குச் செவிசாய்ப்பதில்லை என்றால், அதற்குக் காரணம், அவர்கள் தீண்டாதோரை மனிதர்களாகவே கருதக்கூடாது என்று இந்து மதம் கட்டளையிட்டிருப்பதுதான். தீண்டாதவர்களை அடிப்பது, அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பது, தீயிட்டுக் கொளுத்துவது மற்றும் பல்வேறு கொடுமைகளை அவர்களுக்கு இழைப்பது ஆகிய செயல்களை அவர்கள் மனசாட்சியின் உறுத்தல் கொஞ்சமுமின்றிச் செய்வதற்கான காரணம், இந்து மதம் அவர்களுக்கு இந்தச் சமூகக் கட்டுக் கோப்பினைக் கட்டிக்காக்க எத்தகைய பாவத்தையும் செய்வது தவறு அல்ல என்று கற்பிப்பதுதான்” (அம்பேத்கர் நூல் தொகுப்பு வரிசை (தமிழ்) 9, பக்கம் 136).



2018 சூன் மாதம் மகாராட்டிராவில் சாதி இந்துவின் கிணற்றில் குளித்ததற்காகத் தாக்கப்பட்ட தலித் சிறுவர்கள்

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது என்பது தண்டனைக்குரிய குற்றம் என்று எழுதப்பட்டுள்ளது. ஆயினும் தீண்டாமை காரணமாக தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பலவகையான சமூக உரிமைகள் இன்றளவும் மறுக்கப்பட்டு வருகின்றன. சில மாதங்களுக்குமுன் குசராத்தில் தன் வயலுக்குச் சென்றுவரை தாழ்த்தப்பட்ட ஒருவர் குதிரையைப் பயன்படுத்தினார் என்பதற்காகக் கொல்லப்பட்டார். திருமணத்தின்போது தாழ்த்தப்பட்ட வகுப்பு மணமகன் குதிரைமீது அமர்ந்து வருவதற்குக் கடும் எதிர்ப்பு இருக்கிறது. சாதி இந்துக்கள் தெருவில் மிதியடி அணிந்து செல்லக்கூடாது; மிதிவண்டி அல்லது மோட்டார் சைக்கிளில் செல்லக்கூடாது; பிணத்தை எடுத்துச் செல்லக்கூடாது போன்ற பல தடைகள் உள்ளன.

10.6.2018 அன்று மகாராட்டிர மாநிலம் ஜல்காவ் மாவட்டம் வகாதி கிராமத்தில் 15 அகவையினரான தாழ்த்தப்பட்ட சிறுவர் இருவர் ஈசுவர் ஜோஷி என்பவரின் கிணற்றில் குளித்தனர் என்பதற்காக அச்சிறுவர்களை நிர்வாணமாக்கிக் கடுமையாக அடித்து, ஊர்வலமாக அழைத்துச் சென்று கொடுமைப்படுத்தப்பட்டனர். நாள்தோறும் இதுபோன்ற வன்கொடுமைகள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

“இந்துக்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளை ஆய்வு செய்யும் போது, மூன்று வினாக்கள் நம் நினைவுக்கு வருகின்றன. தீண்டாமை என்பது ஏன் மறைந்து ஒழியவில்லை? தீண்டப்படாதவர்களுக்கு எதிராக இந்துக்கள் பின்பற்றும் சட்டவிரோதமான செயல்களை ஏன் அவர்கள் சட்ட பூர்வமானவை என்று கருதுகிறார்கள்? தீண்டப்படாதவர்கள் தொடர்பான விவகாரங்களில் ஓர் இந்து எனப்படுவோர் மனச்சான்று இல்லாமல் நடந்து கொள்வது ஏன்?” என்று அண்ணல் அம்பேத்கர் முன்வைத்துள்ள மூன்று வினாக்கள் குறித்து சாதி இந்துக்கள் ஆழ்ந்த அக்கறையுடன் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த வினாக்களுக்கு விடை காண்பதன் மூலமே கச்சநத்தம் தாக்குதல் போன்றவற்றை நிகழாமல் தடுக்க முடியும். உண்மையான சமூக சனநாயகத்தை நோக்கி நாம் நகர முடியும். ❖

## மனுசங்கடா! நாங்க மனுசங்கடா!

(சில ஆண்டுகளுக்குமுன் குளப்படி எனும் ஊரில் மேல்சாதிக்காரரின் பம்புசெட் தொட்டியில் தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் குளித்துக் கொண்டிருந்ததைக் கண்ட கிணற்றின் உரிமையாளரான சாதி இந்து, நீரில் மின்சாரத்தைப் பாய்ச்சி அச்சிறுவர்களைக் கொன்றார். இக்கொடுமையை எதிர்த்து அப்போது கவிஞர் இன்குலாப் எழுதிய பாடல் இது. புரட்சிகர மேடைகளில் இப்பாடல் இன்றளவும் எழுச்சியுடன் ஒலிக்கிறது. இதே தன்மையில் மகாராட்டிர மாநிலம் வகாதி கிராமத்தில் சாதி இந்துவின் கிணற்றில் 10-6-2018 அன்று குளித்த இரண்டு தாழ்த்தப்பட்டவர்கள் கொடுமையாகத் தாக்கப்பட்டனர்.)

**உன்னைப் போல அவனப் போல எட்டுசாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா
எங்களோட மானம் என்ன தெருவில கிடக்கா – உங்க
இழுப்புக்கெல்லாம் பணியறதே எங்களின் கணக்கா
உங்களோட முதுகுக்கெல்லாம் இரும்புல தோலா
நாங்க ஊடு புகுந்தா உங்க மானம் கிழிஞ்சு போகாதா
உங்க தலைவன் பொறந்த நாளு போஸ்ட்டர் ஒட்டவும்
உங்க ஊர்வலத்துல தர்ம அடிய வாங்கிக் கட்டவும் – அட
எங்க முதுகு நீங்க ஏறும் ஏணியாகவும் – நாங்க
இருந்தபடியே இருக்கணுமா காலம் பூராவும்
குளப்பாடி கிணத்து தண்ணி புள்ளய சுட்டது
தண்ணியும் தீயாச் சுட்டது – இந்த
ஆண்டைகளின் சட்டம் எந்த மிராசைத் தொட்டது
சதையும் எலும்பும் நீங்க வச்ச தீயில் வேகுது – உங்க
சர்க்காரும் கோர்ட்டும் அதுல எண்ணய ஊத்துது
எதை எதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்க – நாங்க
எரியும்போது எவன் மசுரப் புடுங்கப் போனீங்க – டேய்
மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னைப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா**

- கவிஞர் **இன்குலாப்**

# தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டமும்-துப்பாக்கிச் சூடும்! ஒரு கள ஆய்வு

**பொன். தனகரன்,** தூத்துக்குடி

இந்தக் கட்டுரையாளனாகிய நான், அரசியல் இயக்கங்கள் எதையும் சார்ந்தவன் அல்ல. பெட்டிக் கடை, தெருவோரத் தேநீர்க்கடை, பஞ்சர் ஒட்டும் கடை, முடிதிருத்தும் கடை போன்ற வயிற்றுப் பிழைப்புக்காக அதிகாலையில் 5 மணியில் இருந்து இரவு 12 மணிவரை வாடிக்கையாளர்களுக்காகக் காத்திருந்து உடல் தேய்ந்து ஓயாது உழைக்கும் கடைநிலை சிறு வணிகர்களைச் சார்ந்து, அவர்களுக் காகப் பாடுபட, குரல் கொடுக்க அமைக்கப்பட்டிருக்கும் ‘‘தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை’’ (த. வெள்ளையன்) அமைப்பின் மாநிலத் துணைத் தலைவர்களில் ஒருவன். நான் ஒரு தீவிரவாதி அல்ல. ஸ்டெர்லைட் ஆலையை அகற்றும் போராட்டங்களில் மக்களோடு கைகோத்த ஒரு சாமானியன். அவ்வளவே.

2018, மே மாதம் 22ஆம் நாள் காலை 10 மணிக்கு தூத்துக்குடி பாளையங்கோட்டை நெடுஞ் சாலையில் குழந்தை குட்டிகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாக வேப்பமரங்களின் நிழலில் குவிந்து ஸ்டெர்லைட் ஆலையை விரட்டியே தீருவோம் என்று வெறும் கைகளுடன் சென்ற பல்லாயிரக்கணக்கான என் மக்களில், 13 பேரை சுட்டுக்கொன்று, நூற்றுக்கணக் கானவர்களைத் துப்பாக்கித் தோட்டாக்களால் சுட்டு படுகாயப் படுத்தி, லத்திகளால் ஆயிரக்கணக் கானவர்களை அடித்து எலும்புகளை நொறுக்கி கோரத் தாண்டவ மாடிய காவல் துறையினர் ஒருவரைக் கூட கொல்ல வேண்டும் என்று துளியும் நினையாமல், இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தவர்களை மருத்துவமனை நோக்கி அனுப்பி வைத்து விட்டு, கோழைகளைப் போல ஓடிச் செல்லாமல் ‘‘சுடுடா எங்களை’’ என்று நெஞ்சை நிமிர்த்தி நின்ற எங்கள் வீட்டுச் செல்வங்களை இப்போது நினைத்தாலும் நெஞ்சம் சிலிர்த்து நிற்கிறது.

30.10.1994இல், ஸ்டெர்லைட்டுக்கான அடிக்கல்லை நாட்டியவர் அப்போதைய முதல்வர் செல்வி. ஜெயலலிதா. 1996இல் அதன் உற்பத்தியைத் தொடங்கிய பொழுது அனுமதி அளித்தது கலைஞர் ஆட்சி. 1994இல் இருந்தே ஸ்டெர்லைட்டை எதிர்த்து மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சட்டப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. தூத்துக்குடி மக்களோடு வை. கோபால்சாமி, தோழர். நல்லக்கண்ணு, மார்க்சிஸ்ட் கட்சித் தோழர்கள் கனகராஜ், அர்ச்சுனன் மற்றும் மீனவர்கள், வணிகர்கள், பொது மக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து போராட்டங்களைத் தொடர்ந்து வழிநடத்தினர். அத்தனைப் போராட்டங்களும் அமைதி வழியிலேதான் நடத்தப்பட்டன.

ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கப் பணி நடைபெற்ற குமரெட்டியாபுரம் மக்கள், ‘‘தாங்கள் வாழ, இனி வழியே இல்லை... ஒழிந்தோம்!’’ என்ற நிலையில் குழந்தைகளைக் கூடப் பள்ளிகளுக்கு அனுப்பாமல், ஊரின் திறந்தவெளியில் காத்திருப்புப் போராட்டம் தொடங்கிய நிலையில், தூத்துக்குடி மாநகரமே விழித்துக் கொண்டு அவர்களோடு கைகோத்தது.

இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள் தீவிரவாதிகள் என்று அரசால் சொல்லப்



ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி மே 22 அன்று தூத்துககுடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்ட பெண்கள். இவர்களைத்தான் தீவிரவாதிகள் என்று தமிழக அரசு சொல்கிறது.

படுகிறது. உண்மை நிலை என்னவென்றால், 2017 மே மாதம் ஸ்டெர்லைட் விரிவாக்கச் செய்தி கசிந்த உடனே தூத்துக்குடி மாவட்ட மக்கள் சிவில் உரிமைக்கழகம் (P.U.C.L) பேராசிரியை பாத்திமாபாபு தலைமையில் ஸ்டெர்லைட் எதிர்ப்பாளர்களை ஒன்று திரட்டும் பணியைத் தொடங்கியது. 18.06.2017-இல் ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கம், தூத்துக்குடி தன்பாடு உப்பு வியாபாரிகள் திருமண மண்டபத்தில் உருவாக்கப்பட்டது. இதில் தூத்துக்குடி நகரில் உள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் தன்னார்வத்துடன்

இணைந்து கொண்டனர். ஆட்டோ ஓட்டுநர்கள், வணிகர்கள் சங்கத்தினர், மீனவர் அமைப் பினர், விவசாய சங்கத்தினர் என இப்படித்தான் போராட்டக்குழு அமைந்தது. ஒரு நாள் கடை அடைத்தாலும் சாப்பாட்டுக்கு லாட்டரி அடிக்கும் சிறு வணிகரும், ஆழ்கடலில் வலையில் மீன் சிக்கி னால்தான் சாப்பாடு என்ற நிலையில் உள்ள மீனவர்களும், ஸ்ரீவைகுண்டம் தாமிர பரணி ஆற்றுப்படுகை யில் ஒரு நாளைக்கு 1 கோடியே 40 இலட்சம் லிட்டர் தண்ணீரை ஸ்டெர்லைட் ஆலைக்குத் தாரை வார்த்த தால், காய்ந்த வயிற்றோடு ஒய்ந்து போன விவசாயி களும் அரசின் பார்வைக்குத் தீவிரவாதி களாகத் தெரிந்திருந்தது.

**ஆட்சிகள் மாறினாலும், அதிகாரத்தில் இருந்த வர்கள் ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு விஷயத்தில் உறுதியான நிலைப்பாடு எதுவும் எடுக்காத காரணத் தினால், மக்கள் பிரதானக் கட்சிகளை நம்பி அவர்கள் பின்னால் நிற்கத் தயாராக இல்லை. அவர்களை மக்கள் வெறுத்தார்கள். "தலைமை என்று ஒன்று வேண்டாம். கூட்டுத் தலைமையாக நாம் இயங்கு வோம்" என்கிற அடிப்படையை வகுத்தார்கள்.**

ஸ்டெர்லைட் எதிர்ப்புக் குழுவினர் நடத்திய எந்தப் போராட்டமும் ஆயுதப் போராட்டமாக இருந்ததில்லை. காத்திருப்புப் போராட்டம், உள்ளிருப்புப் போராட்டம், பட்டினிப் போராட்டம், கடை அடைப்புப் போராட்டம், கடலுக்குப் படகுகள் ஓட்டாத போராட்டம் என்றுதான் இந்தப் போராட்டம் எடுத்துச் செல்லப்பட்டது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போராட்டத்தை எந்தத் தீவிரவாதக் குழுவும் வழி நடத்தவில்லை. அப்படி ஒரு வதந்தி பரப்பப்பட்டது. இங்குள்ள போராட்டக் குழுவிற்கு அமெரிக்காவில் இருந்து பணம் வருகிறது என்று சொன்னார்கள். எதற்காக அமெரிக்கப் பணம்? என்று கேட்டால் வேறு ஒரு தாமிர ஆலையின் வணிகத்திற்கு, ஸ்டெர்லைட் ஆலை ஒழிக்கப்படப் பணம் தரப்படுகிறது என்று சொல்லப்பட்டது. கூட்டத்திற்குக் கட்டப்பட்ட ஒலிப்பெருக் கிக்கு வாடகை கொடுக்க முடியாமல் மத்திய வியாபாரி கள் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தியும், பொதுச் செயலாளர் பாஸ்கரும் தவித்த தவிப்பு இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது!

24.03.2018இல் ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் போராட்டம் சிதம்பரநகர் பேருந்து நிறுத்தத்தில் வி.வி.டி. சிக்னல் அருகே நடத்தப்பட்டது. பிஞ்சுக் குழந்தைகளுடன் ஒரு இலட்சம் பேர் திரண்டனர். தூத்துக்குடி நகரமே குலுங்கியது. கடைகள் அடைக் கப்பட்டன. படகுகள் கடலுக்குச் செல்லவில்லை. எங்கும் வேலை நிறுத்தம். கிராமங்கள் எல்லாம் தூத்துக் குடிக்குப் படை எடுத்தன. ஆர்ப்பாட்டக் குழுவினர் அரசுக்குத் தங்கள் கோரிக்கையை வைத்தனர். வருடத்திற்கு 1000 கேன்சர் சாவுகள். பல நூறு ஏக்கர் விவசாய நிலங்களில் ஸ்டெர்லைட் கழிவுகளைக்



துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 17 அகவை மாணவி ஸ்னோலின்

கொட்டியதால் விளைநிலங்கள் பாழ். உப்பாறு போன்ற மிகப்பெரிய ஆறுகளில் கூட கழிவுகளைக் கொட்டு வதை விட்டு வைக்கவில்லை. ஆலையின் வேதிக் கழிவுகளை ஆலையின் வளாகப் பள்ளங்களுக்குள் கொட்டியதால் நிலத்தடி நீர் பாழ். வானமெங்கும் பரவிய கொடிய மாசுவினால் பல வருடங்கள் மழை யை மறந்து மேகங்கள்.

ஒரு ஸ்டெர்லைட் முதலாளிக்காக, பத்து இலட்சப் மக்களைக் கொண்ட தூத்துக்குடியைக் காவு கொடுப் பதா? பல ஆயிரம் கிராமங்களுக்குச் சுவையான குடிநீர் வழங்கிய தாமிரபரணியைக் காவு கொடுப்பதா? மக்கள் தங்கள் வாழ்க்கை பறிபோய்விட்டதே என்று வேகத்தில் திரண்டார்கள். அன்று காவல்துறை கை கட்டி நின்றது. ஏதாவது ஒரு அசம்பாவிதம் அன்று நிகழ்ந்தது உண்டா?

அதன்பிறகுதான் அனைத்துத் தலைவர்களும், பிரபலங்களும் தூத்துக்குடி நோக்கி வந்தார்கள். அது வரை தூங்கி வழிந்த ஊடகங்களும் பொறுப்பை உணர்ந்து மக்களுக்கான நியாயமான கோரிக்கை களை உலகோர் முன் வெளிச்சம் போட்டுக் காட்டின. ஆனால் தமிழக அரசு, மக்கள் முன் வைத்த கோரிக் கைகள் எதையும் கண்டுகொள்ளத் தயாராக இருக்க வில்லை. ஸ்டெர்லைட் ஆலையைத் தடைசெய்ய அனைத்து முயற்சிகளும் செய்வோம் என்று மக்களைச் சந்தித்து ஆறுதல் படுத்தியிருந்தால், இத்தகைய சம்ப வங்கள் நடந்திருக்காது. அவர்களுக்கு அவர்களைக் காப்பாற்றிக் கொள்ளவே நேரமில்லாமல் இருக்கும் பொழுது, மக்களைப் பற்றிச் சிந்திக்க எங்கே நேரம் இருக்கப் போகிறது?

2018 மே 22இல் இவ்வளவு மக்கள் திரள்வார்கள் என்பது அரசின் புலனாய்வுப் பிரிவிற்குத் தெரியும். தூத்துக்குடியின் அத்தனைச் சாலைகளிலும் திரண்டு வந்த மக்களைக் கைது செய்து, பேருந்துகளில் ஏற்றி மண்டபங்களில் அடைத்திருக்க வேண்டும். 144 தடை உத்தரவு என்று போட்டுவிட்டு, இன்னொரு அமைப் பிற்கு, எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்தில் கூட்டம் நடத்திக் கொள்ளுங்கள் என்று அனுமதி அளித்தது எவ்வகையில் நியாயம்? எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்திற்கு வருவதற்



காவல்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டவர்கள்

காகக் கூட அவர்கள் திரளாக வந்திருக்கலாம் அல்லவா? 144 தடை என்பது எங்கும் எவரும் நான்கு பேருக்கு மேல் கூடக் கூடாது என்று இருந்தால் எப்படி கூட்டம் நடத்துவதற்கு அனுமதி தரப்பட்டது? அங்கு வைத்துச், சுற்றி வளைத்து மக்களைப் போட்டுத் தள்ளவா?

2018 மே 22இல் காலை 10.15க்குள் நான் எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்தில் இருந்தேன். தலைவர் வெள்ளையன் தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டம். விரல்விட்டு எண்ணிவிடலாம் என்ற அளவில் கூட்டம். காவல்துறையினர் 500 பேர் எங்களுக்குக் காவல். பேசிப் பேசி எதைச் சாதித்தோம் என்று, மக்கள் கூட்டம் எஸ்.ஏ.வி. பள்ளி மைதானம் நோக்கி வரவில்லை. வந்தவர்கள்கூட மைதானம் காலியாகக் கிடந்ததைப் பார்த்து விட்டு, ஆட்சித் தலைவர் வளாகம் அமைந்திருந்த தூத்துக்குடி- பாளையங் கோட்டை நெடுஞ்சாலையில் அணி அணியாகச் செல்லத் தொடங்கியதை என் கண்களால் பார்த்தேன். இளம் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள், முதி யோர், ஊனமுற்றோர் என அனைவரும் மேற்குத் திசை நோக்கிய பயணம்.

அனைத்து மக்களுக்கும் சொல்லப்பட்டது இதுதான். ‘‘மெரினா போராட்டம் மாதிரி, நாம் ஆட்சித் தலைவர் வளாக மரங்களின் நிழலில் அமர்ந்துவிடுவோம். அரசுக்கு நெருக்கடி கொடுத்தது போல் ஆகும். எப்படி யாவது ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட வேண்டும். அரசாங்கத்தைத் தாயாகக் கருதித், தாயிடம் அடம் பிடித்துக் கேட்டதைப் பெறும் குழந்தைகளைப் போல எம் மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் அமரவே சென்றார்கள். இப்படிப் பல்லாயிரம் பேர் அமர இங்கு வேறு இடம் இல்லை. வெட்ட வெளியில் அவர்களை அமர வைக்க முடியாது. ஆயுதம் இல் லாமல் தாயின் மடி தேடி வந்தவர்களைத் துடிக்கத் துடிக்கக் கொன்றீர்களே பாவிகளே! எப்படிடா மனம் வந்தது. அதையாகச் சென்ற கூட்டத்தை அப்படியே அனுமதித்திருந்தால் போதும்! மாவட்ட ஆட்சித் தலைவர் ஆறுதலாக நான்கு வார்த்தைகள் சொல்லி, மக்களின் போராட்டத்தின் நியாயத்தை அரசுக்கு உணர்த்தி யிருந்தால் போதுமே. எம்மக்கள் கலைந்து சென்றிருப் பார்களே. அமைதியாகச் சென்ற மக்களை அடித்தார் கள். காவல்துறையினரே கல்கொண்டு தாக்கினார்கள். புழு பூச்சி கூட தாக்கப்பட்டால் வீறுகொண்டு எழுமே. அதைப் போன்று தான் பெண்கள் குழந்தைகள் மீது வீசப்பட்ட கற்கள் திரும்ப வந்தன.

தூத்துக்குடிக்கு வந்து, எம் மக்களைத் தீவிரவாதிகள் என்று சொல்லிவிட்டுச் சென்ற நடிகரின் படத்துக்கு பாலாபிசேகமாம்! என்ன கொடுமையப்பா!

தூத்துக்குடி மக்களை வேட்டையாடிய பின்னணியில் பெரும் சதி இருக்கிறது. அதற்கான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். நீதித்துறை மக்களை அரண்போல காத்தது. அவர்களுக்கு நன்றி சொல் வோம். துப்பாக்கிச் சூடு நடத்தி இத்தனை உயிர்ப்பலி வாங்கி, நூற்றுக்கணக்கான பேரைச் சுட்டுக் காயப் படுத்தி, ஒரு நபரை பல பேர் சூழ்ந்து நாயை அடிப்பது போல அடித்து வீழ்த்தி, அப்படி ஆயிரம் பேரைக் குற்றுயிரும் குலை உயிருமாக ஆக்கி, காவல்துறை இன்று வரை வீடு வீடாகச் சென்று ‘கைது செய்கிறோம்’ என்ற போர்வையில் மக்களைப் பிடித்துச் செல்கிறார் களே… இவர்களுக்கு இவ்வளவு அதிகாரத்தைக் கொடுத்தது தமிழக அரசா? மத்திய அரசா? அல்லது அமெரிக்க, இரஷ்ய அரசுகளா? என்ன நடக்கிறது இங்கே?

தூத்துக்குடியின் பிரதானக் கட்சிகள் இந்த அவலங் களுக்காகப் பொங்கி எழுந்திருக்க வேண்டாமா?

94 வயதில் அய்யா ஆனைமுத்து என்னை அழைத்துக் கேட்கிறார். உங்கள் ஊரில் படித்தவர்கள், தொழில் அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், மருத்து வர்கள், பொறியாளர்கள் என்ன செய்கிறார்கள் என்று என்னைக் கேட்கிறார். நான் என்னவென்று பதில் சொல்ல? தூத்துக்குடி நகரைக் காப்பாற்றும் பொறுப்பு சோற்றுக்கு வழி இல்லாதவர்களிடம் இருக்கிறது… அது தானே உண்மை!

தூத்துக்குடி மக்களுக்காகப் பதறித் துடித்த தமிழக மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி. எனக்குத் தெரிந்த அளவில் ஸ்டெர்லைட் நச்சு ஆலைக்கு எதிரான போராட்டங்கள் பல, அமைதி வழியில் நடைபெற்றதை அறிந்தவன் என்ற முறையில், அமைதிவழிப் போராட் டத்தை ஆதரித்தவன் என்ற முறையில் எம்மில் எவரும் தீவிரவாதி இல்லை… இல்லை என்று ஓராயிரம் முறை உரக்கச் சொல்லி இக்கட்டுரையை நிறைவு செய்யும் முன் ஒரு வார்த்தை.

**ஸ்டெர்லைட் தரும் புற்றுநோயை விட, காசுக்கு விலை போன காவல்துறையை, இதன் பின்னால் இருந்த கொடுங்கோலர்களை, பெரும் முதலாளி களின் கையாட்களைத் [ஏஜெண்டுகளைத்] தோலுரிப் போம்! தமிழகத்தில் இப்படி ஒரு கேவலமான ஆட்சிய ளர்களா? காலம் பதில் சொல்லும். காவல்துறையின் மனித வேட்டை… இணையதளம் முடக்கம்… தூத்துக் குடி, ஆட்சியாளர்களை ஒரு போதும் மன்னிக்காது! மறக்கவும் செய்யாது!** ❖

# மோடியின் நான்காண்டு ஆட்சியின் சீரழிவுகள்


- குட்டுவன்

இந்தியா விடுதலை பெற்ற பிறகு முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951இல் தொடங்கியது. இந்தியாவின் முதல் பிரதமர் நேரு சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி (Growth with Social Justice) என்ற முழக்கத்தை வெளியிட்டார். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951-56) வேளாண்மை வளர்ச்சி நீர்ப்பாசனம் கட்டமைப்புத் துறைகளுக்கு முதன்மை அளிக்கப்பட்டது. நேரு காலத்தில் அறிவிக்கப் பட்ட தொழில் கொள்கைகள் பெரும்பாலும் பொதுத் துறை வளர்ச்சியையும் அறிவியல் மேம்பாட்டினையும் வலியுறுத்தின. இதற்கென்று தனித்துறைகள் உருவாக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐந்தாண்டுத் திட்டங்களில் கலப்புப் பொருளாதாரத்தின் வழியாக சோசலிச இலக்குகளை அடையமுடியும் என்று நேரு நம்பினார். பொதுத்துறை நிறுவனங்கள்தான் இதற்கு வழிவகுக்கும் என்றும் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கினார். இன்றளவும்கூட ஏறக்குறைய 200 பொதுத்துறை நிறுவனங்கள் உற்பத்தித் துறையில் சேவைத் துறையில், இயங்கி வருகின்றன. பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டு, பொருளாதாரச் சுரண்டலின் உச்சத்தை பிரித்தானிய ஆட்சியில் கண்ட இந்தியா, எல்லாத் துறைகளிலும் பின்தங்கிய நிலையில் இருந்தது. இதை உணர்ந்துதான் நேரு சோவியத் ரஷ்யாவினுடைய திட்டமிடல் கொள்கையை இந்தியாவில் நடைமுறைப்படுத்தினார்.

இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சியையும் அதன் தாக்கத்தையும் அது மக்கள் மீது ஏற்படுத்திய விளைவுகளையும் ஆய்வு செய்து பல பொருளாதார வல்லுநர்கள் தங்களின் கருத்துகளை அண்மை காலமாக வெளிப்படுத்தி வருகின்றனர். 1950 தொடங்கி 1984ஆம் ஆண்டு வரை இந்தியாவினுடைய ஏற்றத்தாழ்வு குறைந்த நிலையில் இருந்தது என்பதுதான் இந்த ஆய்வுகளில் கண்டறியப்பட்ட உண்மையாகும். ஆனால் அன்றையப் பிரதமர் நரசிம்மராவும் அவருக்குத் துணைபுரிந்த நிதியமைச்சர் மன்மோகன் சிங்கும் 1991இல் தனியார்மயம் தாராளமயம் உலகமயம் (LPG) ஆகிய பொருளாதார வழிகளைப் பின்பற்றி, நேரு கடைப்பிடித்த சமூக நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை அடியோடு சிதைத்தனர் என்றால் அது மிகையாகாது.

கடந்த 27 ஆண்டுகளாகக் காங்கிரசும் பாஜகவும் மாறி மாறி ஒன்றிய அரசில் ஆட்சியமைத்தன. ஆனால் பொருளாதாரக் கொள்கைகளில் துளியளவு மாற்றம் கூட ஏற்படவில்லை. எந்த உயரிய நோக்கத்திற்காக ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் நேரு பல்வேறு சமூக, பொருளாதாரத் திட்டங்களைக் கட்டமைத்தாரோ அவையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக இக்காலக் கட்டத்தில் சிதைக்கப்பட்டன. அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக முழுமையாக நாட்டினுடைய பொருளாதார




பணமதிப்பிழப்பு அறிவிப்புக்குப்பின் 2016 நவம்பர் 16 அன்று புதுதில்லியில் வங்கிகளின் முன் தங்கள் பணத்தை மாற்றுவதற்காக நீண்ட வரிசையில் நிற்கும் மக்கள்

வளங்களை அந்நிய நாடுகளுக்கு அடகு வைத்தார்கள். இதன் உச்சமாக 2018இல் உலக வர்த்தக மையம் (WTO) வலியுறுத்துகிற உலக வணிகம் தொடர்பான நெறிகள், விதிகள் முழுமையாகத் தோல்வியுற்றுள்ளன. சான்றாக வர்த்தகப் போரே இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிற்கு எதிராக சீனாவும், சீனாவிற்கு எதிராக இந்தியாவும், இந்தியாவிற்கு எதிராக அமெரிக்காவும் அமெரிக்காவிற்கு எதிராக இந்தியாவும் இந்த வர்த்தகச் சண்டையைத் தொடங்கிவிட்டன.

என்றும் இல்லாத அளவிற்கு அமெரிக்க டாலருக்கு எதிரான இந்தியப் பணமதிப்பு 7.5 விழுக்காடு அளவிற்கு இந்த ஓராண்டிலேயே வீழ்ந்துள்ளது. சனவரி 2018இல் டாலருக்கான இந்திய பண மதிப்பு 63.4 ரூபாயாக இருந்தது. 24 மே 2018 அன்று இந்திய பண மதிப்பு 68.4 ரூபாயாக உள்ளது. ஐரோப்பிய நாடுகளின் பணத்தின் மதிப்பிற்கு எதிரான இந்திய ரூபாய் மதிப்பு குறைந்து வந்தாலும் டாலர் அளவிற்கு வீழ்ச்சி ஏற்படவில்லை. இந்தியாவினுடைய பெரும்பான்மையான வர்த்தகமும் அதன் வெளிநாட்டுக் கடனும் டாலர் மதிப்பில்தான் கணக்கிடப்படுகின்றன. இதன் காரணமாக இந்தியாவினுடைய வர்த்தகத் துறையில், அதனுடைய நிதி பெருமளவிற்குச் சரிந்து வருகிறது. அதிக விலையில் பெட்ரோலியப் பொருட்களை வாங்க வேண்டிய கட்டாயத்திற்கும் உள்ளாகிறது. எனவே பணவீக்கம், பொருளாதார வளர்ச்சியில் தேக்கம், அந்நிய முதலீடுகளை உரிய முறையில் பயன்படுத்தாத நிலை போன்ற பொருளாதாரத்தை வீழ்த்தும் சக்திகளை எதிர்கொள்வதற்கு கடந்த நான்காண்டுகளாக மோடி அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இந்தியப் பொருளாதாரத்தைச் சரிவுப் பாதையில் செலுத்திக்கொண்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட பேரியல் பொருளாதாரக் குறியீடுகள் (Macro Economic Indicators), நாடு சீரழிவுப் பாதையில் செல்கின்றது என்பதைத் தெளிவாகச் சுட்டுகின்றன. இந்திய வங்கித் துறையில், என்றும் காணாத அளவிற்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில் பெரும் சிக்கல்கள் தோன்றியுள்ளன. இந்த வராக்கடனை முதலாளிகளுக்கு ஆதரவாக வங்கிகள் இரண்டு லட்சம் கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்ததன் விளைவுகள் பொதுத் துறை வங்கிகளுடைய நம்பிக்கையைச் சிதைத்து வருகின்றன. பொருளாதார நிதி வங்கி நிறுவனங்களில் செயல்பட்ட நேர்மையான உயர் அலுவலர்கள் மனம் கொதித்து தங்களின் பதவிகளிலிருந்து விலகினர். சான்றாக மைய வங்கியுனுடைய தலைவராக இருந்த ரகுராம் ராஜன் ரூ.1000 ரூ.500 பணமதிப்பிழப்பு நடவடிக்கை பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் என்று வலியுறுத்தினார். மேலும் பெரும் முதலாளிகள் பொதுத்துறை வங்கிகளிடம் பெற்ற கடனைப் பெறுவதற்கு விரைவான ஆக்கப்பூர்வமான திட்டங்களை அளித்தார். ஆனால் இதற்கெல்லாம் செவி சாய்க்காமல் அவரைப் பதவியிலிருந்து நீக்குவதிலேயே மோடி தலைமையிலான அரசு அக்கறை காட்டியது. குஜராத்தைச் சேர்ந்த அம்பானி உறவினரான உர்ஜித் பட்டேல் மைய வங்கியின் ஆளுந ராக நியமிக்கப்பட்டார். இவர் பதவியேற்ற பின்புதான் உயர் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணமதிப்பிழப்பு நடவடிக்கை சிறு, குறு தொழில்களையும் சிறு விவசாயிகளையும் தற்கொலை செய்கின்ற அளவிற்குத் தள்ளி அவர்களின் வாழ்நிலை யையும் சீரழித்துவிட்டது. ஆனால் மைய வங்கி எதிர்பார்த்த கருப்பு பண நடவடிக்கை முழுத் தோல்வி அடைந்தது.

ஆனால் இந்தக் கறுப்புப் பண நடவடிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு பாஜகவிற்கு நிதி அளிக்கும் குஜராத் பெருமுதலாளிகள் பெரும் பயனடைந்தனர் என்ற செய்திகள் தற்போது வெளி வந்து கொண்டிருக்கின்றன. சான்றாக பாஜக தலைவரான அமித்ஷா தலைவராக இருந்து தற்போது இயக்குநராக உள்ள அகமதாபாத் மாவட்டக் கூட்டுறவு வங்கியில் 2016 நவம்பர் 9 முதல் 14 தேதி வரை செல்லாத தாள்களான ரூ.1000 ரூ.500 மட்டும் ரூ.745.9 கோடி அளவிற்கு டெபாசிட் செய்யப் பட்டது. ஆனால் 14ஆம் தேதிக்குப் பின் கூட்டுறவு வங்கியில் யாரும் பணமாற்றம் செய்யக்கூடாது என்று ரிசர்வ் வங்கி அறிவித்தது. இதற்கு உள்நோக்கம் இருப்பதாகத் தற்போது பலர் சந்தேகப்படுகின்றனர்.

குஜராத் மாநில முதல்வர் பாஜகவின் விஜய் ரூபானி அப்போது குஜராத் அரசின் கேபினட் அமைச்சராக இருந்தார். இதில் இவர் உட்பட பாஜகவின் முக்கிய பிரமுகர்கள் தொடர்புடைய ராஜ்கோட் மாவட்டக் கூட்டுறவு வங்கியில் ரூ.694 கோடி அளவிற்கு டெபாசிட் செய்யப்பட்டது. **மேலும் 7 பொதுத் துறை வங்கிகள், 32 மாநிலக் கூட்டுறவு வங்கிகள், 370 மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் நாடு முழுவதும் 36க்கும் மேற்பட்ட அஞ்சல் நிலையங்களில் 7.9 லட்சம் கோடி டெபாசிட் செய்யப்பட்டன. இது மைய வங்கி கூறிய ஒட்டு மொத்த வைப்புத் தொகையான ரூ.15.82லட்சம் கோடியில் 52 விழுக் காடாகும். இவையெல்லாம் மும்பையைச் சேர்ந்த மனோ ரஞ்சன் ராய் என்கிற சமூக செயற்பாட்டாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியாக அண்மையில் பெற்ற புள்ளிவிவரங்களாகும்.**

மோடி அறிவித்த வரிச் சீர்த்திருத்தம் என்ற அடிப்படையில் சரக்கு-சேவை வரி (GST) வழியாக மாநிலங்களின் நிதியியல் அதிகாரங்கள் பிடுங்கப்பட்டன. ஏற்கெனவே எல்லை மீறிய அளவில் ஒன்றிய அரசில் குவிந்து வரும் அதிகாரங்கள் பல குழப்பங்களையும் நிர்வாகச் சீர்கேடுகளையும் ஊழல்களையும் திறமையின் மையையும் பெருக்கியுள்ளன என்பதற்கு பணமதிப் பிழப்பு நடவடிக்கையே ஒரு சான்றாக உள்ளது. சரக்கு-சேவை வரியின் வழியாக எல்லா மாநிலங் களிலும் தொழில்களில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பல கோடி இளைஞர்கள் வேலையிழந் துள்ளனர்.

நரேந்திர மோடி ஆண்டிற்கு ஒரு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன் என்று உறுதியளித்து 2014ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால் புள்ளிவிவர ஆய்வுகளின்படி, கடந்த நான்காண்டுகளில் ஆண்டிற்கு இரண்டு இலட்சம் வேலைவாய்ப்புகள், அளிக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2014இல் இருந்து 3.41 விழுக்காடு வேலையில்லாத வர்கள் எண்ணிக்கை அதிகரித்து 2018இல் 6.23 விழுக்காடாக உள்ளது. உலகத் தொழிலாளர் அமைப்பு 15 வயதிற்கு மேற்பட்டவர்களின் வேலைவாய்ப்பு பெரிய அளவில் குறையும் நிலை உள்ளது என்றும் சுட்டுகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும் என்றால் ஆண்டிற்கு 80 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்கிறது.

வேளாண் தொழில் இந்தியப் பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த உற்பத்தியில் குறைந்து காணப்பட்டாலும், 60 விழுக்காட்டு மக்களுக்கு மேல் வேளாண் தொழிலைச் சார்ந்தே தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர் என்பதைப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. பாஜக தனது தேர்தல் அறிக்கையில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உற்பத்திச் செலவிற்கு மேலாக 50 விழுக்காடு இலாபத்தைப் பெற்றுத் தருவோம் என்று கூறியது. ஆனால் சராசரியான வேளாண் வளர்ச்சி 2010-14இல் 5.2 விழுக்காடாக இருந்தது, 2014-18ஆம் ஆண்டுகளில் 2.4 விழுக்காடாக குறைந்துள்ளது. இதன் காரணமாக உத்திரப்பிரதேசத்திலும் மகாராஷ்ட்ராவிலும் விவசாயிகள் இலட்சக்கணக்கில் திரண்டு அரசின் தலைமைச் செயலகத்தை முற்றுகையிடுவோம் என்று கூறிய பிறகு இந்த இரு மாநில அரசுகளும் விவசாயிகள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்ய முன் வந்துள்ளன. ஆனால் உர்ஜித் பட்டேல் இது ஏற்கெனவே நட்டத்தில்

இயங்கி வரும் வங்கித் துறைக்குப் பெரும் சோதனையாக முடியும் என்று குறிப்பிடுகிறார். இதையெல்லாம் மறைப்பதற்கு 2020-21 ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று 2018 ஜூன் திங்களில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் மோடி வெற்று முழக்கமிடுகிறார். இந்தக் கூட்டத்திற்குப் பிறகு ஓர் அதிர்ச்சித் தகவல் வெளி வருகிறது. ஒன்றிய அரசின் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியம் தனது பதவியை ராஜிநாமா செய்தார் என்பதாகும். சமூக வலைத்தளங்களில் அவரது ராஜிநாமா கடிதத்தின்படி வெளிவந்துள்ளது. அவர் கூற்றின்படி ஆலோசகரின் நல்ல ஆக்கப்பூர்வமான கருத்துகளை மோடி அரசு ஏற்கவில்லை என்பது சுட்டப்பட்டுள்ளது. அன்று ரகுராம் ராஜன்-இன்று அரவிந்த் சுப்ரமணியம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம் என்பதையும் இக்கடிதம் குறிப்பிடுகிறது. மேலும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி பல ஆயிரம் கோடிகள் குறைக்கப்பட்டதன் காரணமாக ஊர்ப்புறங்களில் வாழும் ஏழைகளின் வாழ்வில் பெரும் இருள் சூழ்ந்துள்ளது.

கல்வி, பொதுச் சுகாதாரம் ஆகிய துறைகளிலும் ஒன்றிய அரசு தேவையின்றிக் குழப்பத்தை விளைவித்து வருகிறது. மருத்துவத் துறையில் தமிழ்நாட்டினுடைய தேர்வு முறை ஏழை ஊர்ப்புற மக்களுக்கு உதவிடும் வகையில் இருந்த நிலையை மாற்றி நீட் தேர்வின் வழியாக இடஒதுக்கீட்டையும் சமூக நீதியையும் மோடி அரசு திட்டமிட்டே சீரழித்துள்ளது. அண்மையில் வெளி வந்த உலகப் பொதுச் சுகாதார ஆய்வறிக்கையின் படி ஒரு இலட்சம் மக்களுக்கு 8000 மருத்துவர்கள் கியூபாவில் உள்ளனர். எனவே மருத்துவ சேவை வழங்குவதில் உலகில் முதல் நிலையில் கியுபா உள்ளது. ஆனால் மக்கள் தொகையில் 131 கோடியை எட்டியுள்ள இந்தியாவில் ஒரு இலட்சம் மக்களுக்கு 670 மருத்துவர்கள்கூட இல்லாத சூழல் உள்ளது. விதிவிலக்காக நல்ல மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்ற தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பால் பல குழப்பங்கள் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ளன. இதற்கெல்லாம் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க தவறிய பிரதமர் உலக நாடுகளுக்கு அடிக்கடி சென்று வெறும் வெற்று முழக்கமிடுகிறார்.

மக்களாட்சியின் நான்காம் தூணாக ஊடகத் துறை இயங்கி வருகிறது. இந்த ஊடகத் துறையிலும் ஒன்றிய அரசு, தனக்குச் சாதகமான செய்திகளை, வெளியிடும் ஊடகங்களைப் போற்றுவதும் நடுநிலையோடு நேர்மையான முறையில் அரசைப் பற்றிய செய்திகளையும், விமர்சனங்களை வெளியிடும் ஊடகங்களுக்குப் பெரும் அச்சுறுத்தல்களும் தொல்லைகளும் தரப்படுகின்றன என்பதைப் பாம்பு ஆய்வறிக்கை (cobra post) வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வறிக்கையில் அரசுக்கு ஆதரவாகவும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் ஆளும் கட்சியிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு செய்திகளைச் சில அச்சு-ஒளி ஊடகங்கள் வெளியிடுகின்றன என்பதையும் இந்த ஆய்வு நிறுவனம் மெய்ப்பித்துள்ளது. அதன் காரணமாகத்தான் உலக ஊடக சுதந்தரக் குறியீட்டில் (World Press Index) 136ஆம் இடத்திற்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது. **2017இல் மட்டும் 12 பத்திரிக்கையாளர்கள் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் கொல்லப்பட்டுள்ளனர். உலகைச் சுற்றி வரும் மோடி, இதுவரை இந்தியப் பத்திரிக்கையாளர்களைப் பொதுவெளியில் சந்திக்கவே இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.**

பொருளாதார வளர்ச்சிக்கு சமூக ஒற்றுமையும், சமூக அமைதியும் பெரும் பங்கினை வகிக்கின்றன. கடந்த நான்காண்டுகளாக இந்துத்துவா அமைப்புகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இசுலாமியர், கிறித்தவர் போன்ற சிறுபான்மையினரையும், ஒடுக்கப்பட்ட சமுதாயமான தலித்துகளையும் அடித்து உதைத்து, கொன்று அது தங்களின் சாதனை என்று கூறி வருகின்றன.

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை மீறல் அறிக்கையில் காஷ்மீர் உட்பட பல மாநிலங்களில் மனித உரிமை மீறல்கள் தொடர் நிகழ்வுகளாகிவிட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றாக, தூத்துக்குடியில் நடந்த படுகொலைகள் ஒன்றிய அரசினுடைய தூண்டுதலில்தான் நடந்தது என்பதைப் பல மக்கள் ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.**

பெங்களூரில் படுகொலை செய்யப்பட்ட சமூகப் போராளி கவுரி லங்கேஷைக் கொலை செய்தது ராம் சேனா என்ற இந்து அமைப்பு என்று பெங்களூர் காவல் துறை அறிக்கை சுட்டுகிறது. இதே முறையைப் பின்பற்றித்தான் நரேந்தர தபோல்கரையும் சுட்டு வீழ்த்தினார்கள் என்ற செய்திகளும் வருகின்றன. ஒன்றிய அரசின் துணையோடு இந்தப் பயங்கரவாதச் செயல்களைத் திசை திருப்புவதற்காக அடிக்கடி பாஜகவின் தலைவர்கள், நாட்டிற்குத் தீவிரவாதிகளால் ஆபத்து வருகிறது என்ற பொய்ச் செய்திகளைப் பரப்பி வருகின்றனர். மோடியின் நான்காண்டு ஆட்சிகளில் ஏழை மிகவும் ஏழையாகவும் பணக்காரன் பெரும் பணக்காரனாகவும் மாறி வருகிறார்கள். வரிக் கட்டாதவர்கள், வங்கிக் கடனைப் பல ஆயிரம் கோடி திருப்பிச் செலுத்தாதவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்கையில் அரசு அதிகாரிகள் கண்டும் காணமால் இருந்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டும் எழுப்பப்படுகிறது. இந்த நான்காண்டுகளில்தான் பல ஆயிரம் கோடி வரை ஏமாற்றிய மல்லையா முதல் நீரவ் மோடி வரை வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றதுதான் மோடி அரசின் உச்ச சாதனையாகும்.

**மேற்கூறிய தரவுகள் இந்தியாவை, கடந்த நான்காண்டுகளில் மோடியின் நிர்வாகமும் அணுகுமுறையும் இந்தியாவின் மக்களாட்சி முறையையும் அரசமைப்பு முறையையும் நீதித் துறை அமைப்பையும் சீரழித்து வருகின்றன என்பதற்குச் சில சான்றுகளாகும்.** ❖

# 27 ஆண்டுகளாகச் சிறையில் வாடும் ஏழு தமிழர்களின் விடுதலை எப்போது?

- செங்கதிர்



முருகன் சாந்தன் பேரறிவாளன் நளினி ராபர்ட் பயாஸ் ரவிச்சந்திரன் ஜெயக்குமார்

பார்ப்பன-மேல்சாதி இந்திய ஆளும் வர்க்கம் வன்னெஞ்சத்துடன், இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு தமிழர்களின் உயிருடன் கண்ணா மூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த எழுவரின் விடுதலை, கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமல் போனதுபோல் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இராசிவ் காந்தி 1991 மே 21 அன்று திருப்பெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற போது கொல்லப்பட்டார். இந்தக் கொலை வழக்கை விசாரித்த பூந்தமல்லி தடா நீதிமன்றம் 26 பேருக்கு மரண தண்டனை விதித்தது. இயற்கை நீதிக்கு முற்றிலும் எதிரான இத்தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்சநீதிமன்றம் முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன், ஆகிய நாள்வரின் மரணதண்டனையை உறுதி செய்தது. இராபர்ட் பயாஸ், செயக்குமார், இரவிச்சந்திரன் ஆகிய மூவரின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. மற்ற 19 பேரை விடுதலை செய்தது.

பின்னர் 2000ஆம் ஆண்டில் நளினியின் மரண தண்டனையை அப்போதைய தமிழக ஆளுநர் பாத்திமா பீவி மனிதநேய அடிப்படையில் வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தார். முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் குடியரசுத் தலைவருக்குக் கருணை விண்ணப்பம் அனுப்பினர். 11 ஆண்டுகள் கிடப்பில் போட்டிருந்த பின், இவை நிராகரிக்கப்பட்டன. இந்த முடிவை எதிர்த்து முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவரும் உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். இம்மூவரின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்க வலியுறுத்தி செயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு 30.8.2011 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. இக்கோரிக்கையை வலியுறுத்தித் தமிழகம் முழுவதும் பேரணிகளும், கூட்டங்களும் நடத்தப்பட்டன.

தமிழரான சதாசிவம் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த போது, 18.2.2014 அன்று, அவருடைய தலைமையிலான அமர்வு முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. அத்தீர்ப்பின் இறுதியில், குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 432இன்படி, "உரிய அரசு (Appropriate Government) கைதிகளை விடுதலை செய்வது பற்றி முடிவு செய்யலாம்" என்று கூறி நல்லதோர் வழியையும் காட்டியிருந்தது.

இத்தீர்ப்பு வெளியான அடுத்த நாள், 19.2.2014 அன்று சட்டமன்றத்தில், முதலமைச்சராக இருந்த செயலலிதா, முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, இரவிச்சந்திரன், இராபர்ட் பயாஸ், செயகுமார் ஆகிய ஏழு பேரையும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 432இன்படி விடுதலை செய்யத் தமிழக அரசு முடிவெய்திருப்பதாகவும், இதற்கு மூன்று நாள்களுக்குள் நடுவண் அரசு தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவித்தார்.

மன்மோகன் சிங் தலைமையிலிருந்த காங்கிரசு அரசு அடுத்த நாளே - 20.2.2014 அன்று, உச்சநீதிமன்றத்தில், "இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 432இன்படி, நடுவண் அரசின் ஒப்புதலைப் பெறாமல் அந்த ஏழுபேரை விடுதலை செய்யும் அதிகாரம் தமிழ்நாட்டு அரசுக்கு இல்லை; ஏனெனில் இராசிவ் காந்தி கொலை வழக்கு மத்தியப் புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டு, நடுவண் அரசின் 'தடா' சட்டத்தின்கீழ் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்; எனவே எழுவர் விடுதலை குறித்துத் தமிழ்நாட்டு அரசின் அறிவிப்புக்குத் தடைவிதிக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தது. இதே காரணத்தைக் காட்டி உச்சநீதிமன்றம், தமிழ்நாட்டு அரசு ஏழு பேரை விடுதலை செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்தது.

இந்த வழக்கில் 2015 திசம்பர் 2 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் மத்தியப் புலனாய்வுத் துறை

யாலோ அல்லது நடுவண் அரசின் வேறொரு அமைப் பாலோ விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களை நடுவண் அரசின் ஒப்புதல் இல்லாமல் விடுதலை செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டது. இதை மறுஆய்வு செய்யுமாறு தமிழக அரசு விண்ணப்பித்தது. அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு தமிழக அரசின் மறுஆய்வு குறித்த வழக்கை விசாரித்தது. 7.2.2017 அன்று இதன்மீதான தீர்ப்பு வழங்கப்பட்டது. 2015 திசம்பர் 2 அன்று நீதிபதி கலிபுல்லா தலைமையிலான அமர்வு வழங்கிய தீர்ப்பை இது உறுதி செய்தது. அரசமைப்புச் சட்ட அமர்வு அளித்த இத்தீர்ப்பை மறுஆய்வு செய்யு மாறு தமிழக அரசு முறையீடு செய்துள்ளது.

இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் 23.1.2018 அன்று ஏழு பேரை விடுதலை செய்வது குறித்து நடுவண் அரசு மூன்று மாதங்களுக்குள் அதன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. 14.2.2018 அன்று நடுவண் அரசின் உள்துறை அமைச்சகம் ஏழு பேரின் உடல்நிலை, மனநலம், அவர்களின் பொருளாதார, சமூகப் பின்னணி உள்ளிட்ட எட்டு விவரங்கள் குறித்து அறிக்கை அனுப்புமாறு தமிழக அரசுக்கு மடல் அனுப்பியது. நடுவண் அரசு கேட்ட அறிக்கையைத் தமிழக அரசு அண்மையில் அனுப்பியது. 12.6.2018 நாளிட்ட தினத்தந்தி நாளேட்டின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில், ‘‘ராசிவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் நளினி உள்பட 7 பேர் விடுதலையாக வாய்ப்பு?’’ என்று தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டது. இது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத் தியது.

**ஆனால் 15.6.2018 நாளிட்ட ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டின் சென்னைப் பதிப்பில், ஏழு பேரை விடு தலை செய்ய வேண்டும் என்கிற தமிழ்நாட்டு அரசின் கோரிக்கையைக் குடியரசுத் தலைவர் நிராகரித்தார் என்று முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டது. இது பெரும் ஏமாற்றமாகவும் அதிர்ச்சி யாகவும் இருந்தது.**

2014இல் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையை உச்சநீதிமன்றம் வாழ்நாள் தண்டனையாகக் குறைத்த பிறகு, ஏழு பேரும் இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருப்பதால் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அரசிடம் விண்ணப்பம் அளித்தனர். இதன் அடிப்படையில் தமிழக அரசும் ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கு நடுவண் அரசு ஒப்புதல் வழங்க வேண்டும் என்று கோரி கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு தடவைகள் மடல் எழுதியது. தமிழக அரசின் இக்கோரிக்கையுடன் நடுவண் அரசு தன் கருத்தையும் இணைத்து குடியரசுத் தலை வருக்கு அனுப்பியது.

**‘‘தமிழக அரசின் முடிவை நடுவண் அரசு ஏற்கவில்லை. நடுவண் அரசின் அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில்தான் முடிவு எடுக்கப்பட வேண்டும் என்ற முறையில், தமிழக அரசின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது’’ என்று குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார், நடுவண் அரசின் உயர் அதிகாரி, ஆங்கில ‘தி இந்து’ செய்தியாளரிடம் ‘‘முன்னாள் பிரதமர் இராசிவ் காந்தியைக் கொலை செய்தவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் விடுதலை செய்யப்படமாட்டார்கள்’’ என்று கூறியதாக 15.6.2018 தி இந்து நாளேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆட்சியாளர்களைவிட, இந்திய அரசின் உயர் பதவிகளில் இருக்கும் பார்ப்பன-மேல்சாதி அதிகார வர்க்கம்தான் வன்னெஞ்சத்துடன் ஏழு தமிழர்களின் விடுதலைக்குப் பெருந்தடையாக இருக்கிறது.**

இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு பேரும் இக்கொலைச் செயலிலோ, இதற்கான சதித் திட்டத்திலோ நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்பதற்கான சான்று எதுவும் எண்ணப்பிக்கப்பட வில்லை. பேரறிவாளன் வாங்கிக் கொடுத்த பேட்டரி தான் மனித வெடிகுண்டாக வந்த தாணுவின் பெல்டில் பயன்படுத்தப்பட்டதா என்பது உறுதிசெய்யப்படவில்லை. மேலும் அந்த வெடிகுண்டு பெல்ட் எங்கு தயாரிக்கப் பட்டது என்பதுகூட புலனாய்வில் கண்டறியப்பட வில்லை. இராசிவ் காந்தி கொலையில் அயல்நாட்டுச் சதித்திட்டம் குறித்த விசாரணை, தொடர முடியாமல் முட்டுச்சந்தில் நிற்கிறது.

**சிறப்புப் புலனாய்வுக் குழுவின் உயர் அதிகாரி தியாகராசன், பேரறிவாளனின் ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ததில் முக்கியமான பகுதியைத் தவிர்த்துவிட்டதாக ஒப்புக்கொண்டார். தன் பிழை குறித்து உச்சநீதிமன்ற அமர்வு முன், பிரமாண வாக்குமூலம் அளித்துள்ளார். இவ்வழக்கில் தண்ட னையை உறுதி செய்த உச்சநீதிமன்ற அமர்வுக்குத் தலைமை தாங்கிய நீதிபதி கே.டி. தாமஸ், தங்களது தீர்ப்பில் சட்ட அறியாமை என்ற பிழை நிகழ்ந் துள்ளதை ஏற்றுக்கொண்டு, ஏழு தமிழர்களையும் விடுதலை செய்துவிடலாம் என்று வெளிப்படையாகப் பலமுறை கருத்துத் தெரிவித்து இருக்கிறார். கொலை யுண்ட இராசிவ் காந்தியின் மகன் இராகுல்காந்தி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், ஏழு பேரை விடு தலை செய்வதில் தங்களுக்கு மறுப்பேதுமில்லை என்று தெரிவித்துவிட்டனர்.**

குற்றவாளிகளைத் தண்டிப்பது என்பது வாழ்நாள் முழுவதும் அவர்களைச் சிறையில் வைத்துக் கொடு மைப்படுத்துவது அன்று. தம் குற்றத்தை - தவறை உணர்ந்து மனந்திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பை வழங்குவதே தண்டிக்கப்படுவதன் நோக்கமாகும். சனநாயக நெறிமுறைகள் போற்றப்படும் நாடுகளில்

இந்த நடைமுறையே பின்பற்றப்படுகிறது. அதனால் தான் 130க்கு மேற்பட்ட நாடுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டிருக்கிறது.

27 ஆண்டுகளாகச் சிறையில் இருந்து வரும் ஏழு பேரும் சிறை விதிகளை மீறாமல், நன்னடத்தையுடன் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேலும் உயர்த்திக் கொண்டதுடன் மற்றவர்களுக்கும் கல்வி கற்பித்துள்ளனர். ஏழு பேரும் நிரபராதிகளா? குற்றவாளிகளா? என்கிற சட்டநுணுக்கங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, 27 ஆண்டுகள் நன்னடத்தையுடன் சிறையில் இருந்தார்கள் என்கிற ஒரே அடிப்படையில் இவர்களை விடுதலை செய்து, இவர்களின் எஞ்சிய வாழ்நாளைத் தம் குடும்பத்தினருடன் கழிக்குமாறு செய்வதே இயற்கை சார்ந்த நீதியாகும்.

இப்போது எழுவரின் விடுதலைக்காக இரண்டு வழிகள் உள்ளன. உச்சநீதிமன்றத்தில் உள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 432 குறித்த வழக்கில், நடுவண் அரசு ஏழுவரையும் விடுதலை செய்யக்கூடாது என்று கருத்துரைத்தாலும், 27 ஆண்டுகள் நன்னடைத்தையுடன் இவர்கள் சிறையில் இருந்ததைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் இவர்களை விடுதலை செய்வதாக உச்சநீதிமன்றம் தீர்ப்பளிக்கலாம். இந்த அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு இருக்கிறது. இத்தகைய தீர்ப்பைப் பெறுவதற்கு தமிழ்நாட்டு அரசு இந்தியாவின் தலைசிறந்த வழக்குரைஞர்களைக் கொண்டு இவ்வழக்கில் வாதிட வேண்டும்.

மற்றொரு வழி, தமிழ்நாட்டு அரசின் அமைச்சரவையின் முடிவினை ஏற்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 161இன்படி, தமிழக ஆளுநர் ஏழு பேரையும், விடுதலை செய்யலாம். உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசு குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 432 குறித்து தொடர்ந்துள்ள வழக்கு, இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். எனவே அரசமைப்புச் சட்ட பிரிவு 161இன்கீழ் விடுதலை செய்வதற்கு ஆளுநருக்குக் கட்டற்ற அதிகாரம் உண்டு.

**தேசத்தந்தை காந்தியின் கொலை வழக்கில் வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சேவும் மற்றவர்களும் 14 ஆண்டுகள் சிறையில் இருந்த பின் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று 1961இல் உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பித்தனர். உச்சநீதிமன்றம் இக்கோரிக்கையை ஏற்க மறுத்தது. ஆயினும் மகாராட்டிர மாநில அரசு தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு 13.10.1964 அன்று காந்தியார் கொலை வழக்கில் வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்தது.**

எனவே தமிழக அரசுக்கும் அரசியலமைப்புச் சட்டம் 161ஆவது பிரிவின்கீழ் இந்த அதிகாரம் உள்ளது. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி து. அரிபரந்தாமன் அவர்களும் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார். ஆனால் காந்தியைக் கொலை செய்த குற்றவாளிகள் வாழ்நாள் தண்டனையிலிருந்து - 16 ஆண்டுகள் சிறையில் இருந்தபின் விடுவிக்கப்பட்டனர் என்கிற உண்மையை மறந்துவிட்டு, நடுவண் அரசு குடியரசுத் தலைவரின் நிராகரிப்புக் குறித்துத் தமிழக அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் ஏழு பேரை விடுதலை செய்வது மோசமான முன்னுதாரணமாகிவிடும் என்று பூச்சாண்டி காட்டியிருக்கிறது.

**எனவே தமிழக அரசு மீண்டும் ஏழு பேரின் விடுதலை குறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். ஏழு பேரை விடுதலை செய்வது என்கிற அமைச்சரவையின் முடிவை ஆளுநருக்கு அனுப்பி, அரசமைப்புச் சட்டத்தின் 161ஆவது பிரிவின் கீழ் விடுதலை செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை நிறைவேற்றும் வகையில் ஏழரைக் கோடித் தமிழர்களும் உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்.** ❖

## ஸ்டெர்லைட் படுகொலையைக் கண்டித்து தமிழக மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டம்




தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும் பெ.மணியரசன் தாக்கப்பட்டதையும் வேல்முருகன் கைது செய்யப்பட்டதையும் கண்டித்து தமிழக மக்கள் முன்னணியின் சார்பில் சென்னை தியாகராயர் முத்துரங்கம் சாலையில் 20.6.2018 புதன் மாலை 6 மணிக்குப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் பொழிலன் தலைமை தாங்கினார். செள. சுந்தரமூர்த்தி வரவேற்புரையாற்றினார். செவ்வேள் முன்னிலை வகித்தார். தோழர்கள் பழ. நெடுமாறன், தொல். திருமாவளவன், மல்லை சத்தியா, தெகளான் பாகவி, விடுதலை இராசேந்திரன், தியாகு, பெரியார் சரவணன், வாலாசா வல்லவன், அருணபாரதி, வழக்குரைஞர் அங்கயற்கண்ணி, செந்தில், பாவெல், வழக்குரைஞர் ரஜினிகாந்த் உள்ளிட்டோர் உரையாற்றினர். வழக்குரைஞர் பாவேந்தன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். செல்வமணியன் நன்றியுரையாற்றினார்.



* ஸ்டெர்லைட்டை எதிர்த்துப் போராடிய

# பேரறிவாளனின் தாயார்
# அற்புதம் அம்மாளின்
# உருக்கமான வேண்டுகோள் மடல்



வணக்கம்!

சூன் 11ஆம் தேதியோடு எனது புதல்வன் பேரறி வாளனை அரசு சிறையிலடைத்து 27 (இருபத்தே ழாண்டுகள்) முடியப் போகிறது. அவரோடுள்ள ஏனைய அறுவரும் அவ்வாறே!

எங்கள் வாழ்நாளுக்குள் எம் ஒரே புதல்வன் பேரறிவாளன் விடுதலையாகி வருவாரா எனும் அச்சம் மிகுகிறது! ஏன் கொலைக் குற்றம் சுமத்தினார்கள்? ஏன் தண்டித்தார்கள்? ஏன் 27 ஆண்டுகளாகச் சிறையில் அடைத்து வைத்துள்ளார்கள் என்று புரிய வில்லை!

ஒப்புதல் வாக்குமூலம் எழுதிய சி.பி.ஐ. அதிகாரி திரு. தியாகராசன், ஐ.பி.எஸ். அவர்கள்தான் தவறாக எழுதிவிட்டதாக உச்சநீதிமன்றத்திலேயே முறையிட்டும்,

தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் மேதகு. தாமஸ் அவர்கள், தான் தவறான தீர்ப்பளித்து விட்டதாக வருத்தம் தெரிவித்ததுடன், விடுதலை செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைத்து ஊடகங்கள் வழியேயும், சோனியா அம்மையாருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாகவும் கருத்தறிவித்த பின்னரும்- அதை உச்சநீதிமன்றமும் நடுவண் அரசும் கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனையளிக்கிறது.

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் செயலலிதா அம்மை யார் அவர்கள் விடுதலை செய்யும் தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளும் ஆமோதித்து சட்டப் பேரவை யிலேயே நிறைவேற்றி நடுவண் அரசுக்கு அனுப்பியும் நடுவணரசு பாராமுகமாக இருந்து வருகிறது!

தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்களும் விடுதலை செய்யக் குரல் கொடுத்தும் கேளாக் காதின ராக இருந்து வருகிறது நடுவணரசு! சட்ட நீதிப்படியும் இத்தண்டனை முரணானது - அரசியல் நாகரிகத்தின் படியும் ஞாயமற்றது என்று மக்கள் உணர்ந்து கொண்ட தால் பல்வேறு வடிவங்களில் ஆர்ப்பாட்டம், போராட் டங்களில் ஏழு தமிழர் விடுதலைக்கு முயற்சிக்க லாயினர்!

உச்சநீதிமன்றம் கடந்த 23.01.2018 அன்று நடுவண் அரசு எழுவர் விடுதலை குறித்தான மாநில அரசின் முடிவு குறித்து மூன்று திங்களுக்குள் முடிவு அறிவிக்க உத்தரவிட்ட பின்னரும் காலம் கடத்துகிறது நடுவண் அரசு!

அன்புக்குரியவர்களே!

தாங்கள் ஏழு தமிழர்களுக்காக மகத்தான பணி யாற்றியதை நான் மட்டுமல்ல உலகே அறியும். அந்த உழைப்பும் முயற்சியும் விழலுக்கிறைத்த நீராக வீண் தானோ என்றும்; தமிழ்நாட்டு மக்களின் போராட் டங்கள் கொச்சைப்படுத்தப்பட்டுவிடுமோ என்றும் எண்ணிச் சோர்வடையச் செய்கிறது!

எனக்கு வயது 71; என் துணைவருக்கு 77! நான் மகனை மீட்க முடியாமல் இருப்பதை எண்ணி அழுவதா; எனக்குள்ள நோய்கள் தரும் வலியைத் தாங்க முடியாமல் அழுவதா; என் முதுமையால் அலைந்து திரிய இயலாமையை எண்ணி அழுவதா; இறுதிக் காலத்தில் நோய்களாலும் முதுமையாலும் அல்லல்படும் என் துணைவருக்கு உதவிடாது அவரைப் பிரிந்து இருக்க வேண்டியதை எண்ணி அழுவதா; என்னால் இயலவில்லை! மீண்டும் உங்களை நாட வேண்டியுள்ளமைக்கு வருந்துகிறேன்.

பல்வேறு போராட்டங்கள் உங்களைச் சூழ்ந்து கொண்டுள்ளதை அறிவேன். ஒன்றின்மேல் ஒன்று வந்து முதலாவதை மறக்கடிக்கச் செய்யும் என்பதை அறிவேன்.

நாம் அவ்வாறு மறக்க வேண்டும் என்பதுதான் சூழ்ச்சியின் எதிர்பார்ப்பு, எங்கள் கண்ணீரைத் துடைக்க உங்களைத் தவிர வேறு எவருள்ளார்! விரைந்து தங்கள் கவனத்தை எங்கள் பக்கமும் திருப்பிட வேண்டுகிறேன். விடுதலை செய்வித்து எங்களைக் காத்திட வேண்டுகிறேன். நன்றி!

மிகவும் எதிர்பார்ப்புடன்,
தங்கள் அன்பின்
**தி. அற்புதம்**

# விகிதாசாரப் பங்கீடு சர்வரோக நிவாரணி அல்ல; ஒழுகலை அடைக்கும் அடைப்பான்

- இராமியா

இட ஒதுக்கீட்டைப் பற்றிப் பேசினால் பார்ப்பனர்களுக்குப் பற்றி எரிகிறது என்றால், அவாள் கொடூரமான அளவில் அயோக்கியத்தனமாகச் சுருட்டி வைத்துக் கொண்டு இருக்கும் அதிகார மண்டலங்களில் மற்றவர்கள் நுழைவதை விரும்பாதது தான். அவ்வாறு மற்றவர்கள் நுழைந்தால் நாளடைவில் அவாளில் உள்ள திறமைக் குறைவானவர்கள் உயர்நிலை வேலைகளை அடையும் வாய்ப்பு குறைந்து விடும் என்று அஞ்சுகிறார்கள்.

ஆனால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே இட ஒதுக்கீட்டிற்கு எதிராகப் பேசுவது வேதனையையும், எதிர்காலத்தைக் குறித்த அச்சத்தையும் தருகிறது. நம் மக்களில் சிலர் "இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் இட ஒதுக்கீட்டைப் பற்றியே பேசிக் கொண்டு இருப்பீர்கள்?" என்று சலிப்புடன் கேட்கிறார்கள். இட ஒதுக்கீடுத் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்படவே இல்லை என்று இவர்களுக்குத் தெரியாமலேயே வைத்து இருப்பது பார்ப்பன ஆதிக்கத்தின் விளைவுதான். இட ஒதுக்கீடு முறையில் 5% கூட நிரப்பப்படவில்லை என்று தாழ்த்தப்பட்டோர் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் மீள்பார்வையின் போது கதறிக் கதறிப் பதிவு செய்வதை நரேந்திர மோடி மட்டும் அல்ல; இதற்கு முன் இருந்த ஆட்சியாளர்களும் கண்டு கொள்வதும் இல்லை / கண்டு கொண்டதும் இல்லை. இப்படி இட ஒதுக்கீடு முறையைச் செயல்படுத்தாமலேயே இருந்துவிட்டு, அது செயல் படுத்தப்பட்டு விட்டது என்ற அனுமானத்தில் "இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் இந்த இட ஒதுக்கீடு" என்று கேட்பவர்கள் இருப்பது மிகவும் வேதனையான செய்தி.

அப்படி என்றால், இட ஒதுக்கீடு முறை முழுமையாகவே செயல்படவில்லையா? அப்படி அல்ல. தமிழ்நாட்டில் ஓரளவு செயல்பட்டு இருக்கிறது. அதன் விளைவாக வாய்ப்புப் பெற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் உயர் சாதிக் கும்பலினரைவிடத் திறமைசாலிகள் என்று அனைத்துத் துறைகளிலும் மெய்ப்பித்து இருக்கிறார்கள். இருப்பினும் மருத்துவத் துறையில் இது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் பெருமளவில் மருத்துவர்களாக உள்ள தமிழ்நாடு, மருத்துவச் சிகிச்சையில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலமாக உள்ளது. இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்து மட்டும் அல்லாமல், உலகின் பிற பகுதிகளில் இருந்தும் மருத்துவச் சிகிச்சை பெற தமிழ் நாட்டிற்கு வருகின்றனர். உயர்சாதிக் கும்பலினரே பெரும்பாலும் மருத்துவர்களாக உள்ள வட மாநிலங்களில் இத்தகைய நிகழ்வு நடைபெறவில்லை.

தமிழ்நாட்டைப் போல் பிற மாநிலங்களிலும் இட ஒதுக்கீட்டை முறையாகச் செயல்படுத்தியிருந்தால், அங்கும் தரமான மருத்துவர்கள் உருவாகி இருப்பார்கள். மருத்துவத்துறை மட்டும் அல்லாமல் பிற துறைகளிலும் திறமைசாலிகள் இடம் பெற்றிருப்பார்கள். நிர்வாகம் இன்று போல் மோசமாக இல்லாமல் நன்றாக இருந்திருக்கும்.

ஆகவே ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே! முறையாகச் செயல்படுத்தப்படாத இட ஒதுக்கீட்டுக் கொள்கை முழுமையாகச் செயல்படுத்தப்படும் வரை அதைப் பற்றிப் பேசியே ஆக வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அது மட்டும் அல்ல. இட ஒதுக்கீட்டுக் கொள்கை மேலும் விரிவாக்கப்பட்டு விகிதாச்சாரப் பங்கீடு முறையாக வளர்த்து எடுக்கப்பட வேண்டிய கட்டாயமும் உள்ளது. இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பற்றிச் சரியான புரிதல் இல்லாதவர்களுக்கு மேற்கண்ட செய்தியைக் கூற வேண்டி உள்ளது சரி தான். ஆனால் இட ஒதுக்கீடு / விகிதாச்சாரப் பங்கீட்டுக் கொள்கையைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டவர்களே கூட "இது என்ன சர்வரோக நிவாரணியா?" என்று கேட்பது வியப்பைத் தருகிறது.

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் முன்னேற்றத்திற்காக, அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக எத்தனையோ வழிகளில் போராட வேண்டியுள்ளது. அப்போராட்டங்களில் கவனத்தைச் செலுத்தும் போது விகிதாச்சாரப் பங்கீட்டில் கவனக் குறைவு ஏற்பட்டால், மற்ற போராட்டங்களால் கிடைக்கும் பயன்கள் காலப் போக்கில் மங்கி மறைந்து விடும். மங்கி மறைந்து விடும் என்பதை விட எதிரிகளால் அரித்து அரித்து பங்கீடு இல்லாமலேயே செய்யப்பட்டு விடும்.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு மருத்துவத் துறையையும், இந்தியாவின் பிற மாநிலங்களின் மருத்துவத் துறையையும் பார்ப்போம். இடஒதுக்கீடு செயல்பட்ட தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மருத்துவர்கள் மிகப் பெரும்பான்மையாக உள்ளனர். இட ஒதுக்கீடு செயல்படாத வட மாநிலங்களில் உயர் சாதிக் கும்பலினரே மிக மிகப் பெருமளவில் மருத்துவர்களாக உள்ளனர்.

அனைத்து வகுப்பு மக்களிலும் திறமைசாலிகள் இருப்பதால், அனைத்து வகுப்பு மக்களிலும் உள்ள திறமைசாலிகள் தமிழ்நாட்டில் மருத்துவர்களாக உருவாக முடிந்து உள்ளது. ஆனால் வட மாநிலங்களில் இட ஒதுக்கீடு முறையைச் செயல் படுத்தாமல், உயர் சாதிக் கும்பலினரை மட்டுமே மருத்துவப் படிப்புக்குத் தேர்ந்தெடுத்ததால், அவர்களில் உள்ள திறமை சாலிகள் மட்டும் அல்லாமல் திறமைக் குறைவானவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். ஆகவே அவர்களால் தமிழ் நாட்டு மருத்துவர்களின் அளவுக்குச் சிறந்து விளங்க முடியவில்லை. (இது பொதுப் போட்டி முறை திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்கப் பயனற்றது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.)

இந்த அனுபவம் ஏற்பட்ட உடனேயே என்ன செய்து இருக்க வேண்டும்? நாடு முழுவதும் இடஒதுக்கீடு முறையைக்

கண்டிப்புடன் செயல்படுத்தி, நாட்டில் மருத்துவத் துறையின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். ஆனால் நடப்பது என்ன?

"எங்களுக்கு மருத்துவச் சேவையின் தரம் முதன்மை அல்ல. மருத்துவச் சேவையின் தரம் குறைந்தாலும் பரவாயில்லை. உயர் சாதிக் கும்பலினரே மருத்துவர்களாக இருக்க வேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டும் உயர் சாதிக் கும்பலினர் மருத்துவச் சிகிச்சைக்காக ஒடுக்கப்பட்ட வகுப்பு மருத்துவரை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடக் கூடாது; ஆனால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் உயர் சாதி மருத்துவர் களைத் தவிர்க்க முடியவே கூடாது. எதிர்காலத்தில் அரசுக்கு எதிராக ஒரு போராட்டமே, புரட்சியோ உருவானால் போராளி களும் புரட்சியாளர்களும் மருத்துவச் சிகிச்சைக்கு உயர் சாதிக் கும்பலினரையே நம்பி இருக்க வேண்டும். அப்பொழுது போராளி களை / புரட்சியாளர்களை வளைப்பதும் ஒடுக்குவதும் எளிதாக இருக்கும். போராட்டத்தை / புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிய முடியும்." என்றெல்லாம் சிந்தித்து முடிவு செய்த பார்ப்பன ஆதிக்க அரசு, அந்த முடிவைச் செயல்படுத்தும் விதமாக "நீட்" முறையை மக்கள் மீது திணித்து உள்ளது. உயர் சாதிக் கும்பலினர் பெறும் கல்வியும், சிறப்புப் பயிற்சியும் இருந்தால் மட்டுமே வெற்றி பெறும்படியாக இம்முறை வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இதற்கு எதிராக நாட்டின் மற்ற மாநிலங்களில் மக்கள் திரளவில்லை. தமிழ்நாட்டு மக்களால் மட்டுமே பார்ப்பன ஆதிக்க அரசின் மக்கள் விரோத நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடிந்து இருக்கிறது. ஏனெனில் இங்கு மட்டும்தான் பொருட்படுத்தத்தக்க அளவிலான எண்ணிக்கையில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் கல்வி பெற்று உள்ளனர். மற்ற மாநிலங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களில் கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை; குரல் எழுப்ப முடிவது இல்லை. மீறி முயல்பவர்களின் குரல்வளை நெரிக்கப்படுவதும் வெளியில் தெரிய வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது.

தமிழ் நாட்டிலேயே கூட அதிகார மையங்களின் எல்லா நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் எண்ணிக்கை பொருட்படுத்தத்தக்க அளவில் இருப்பதால் தான் குரல் எழுப்ப முடிகிறது. முடிவெடுக்கும் / முடிவெடுக்க வைக்கும் அளவிற்கான எண்ணிக்கையில் இருந்திருந் தால் நாம் இந்நேரம் வெற்றி பெற்று இருப்போம்.

ஆகவே நமது போராட்டங்களின் வெற்றிக்கு அதிகார மையங்களில் அனைத்து நிலைகளிலும் வலுவான எண்ணிக்கையில் நமது பிரதிநிதித்துவம் தேவைப் படுகிறது. அதைப் பெறுவதற்கு இட ஒதுக்கீடு ஒரு வழியே என்றாலும், அது போதுமான வழி அல்ல. விகிதாச்சாரப் பங்கீடு இருந்தால் தான் எந்த ஒரு போராட்டத்திலும் நம் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

**அது மட்டும் அல்ல. விகிதாச்சாரப் பங்கீடு பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகார மையங்களில் அவரவர்க்கு உரிய பங்கைப் பெற்றுத் தருவதால், அவ்விரு வகுப்பினருக்கும் இடையேயான முரண்பாடுகளின் கூர்மை மழுங்கத் தொடங்கும்.**

இங்கு இன்னொரு விஷயத்தையும் நாம் சிந்திக்க வேண்டும். விகிதாச்சாரப் பங்கீடு முறை அமலில் இருந்தால் பார்ப்பன ஆதிக்க வர்க்கத்திற்கு நீட் முறையைத் திணிக்கும் யோசனை தோன்றி இருக்குமா? என்ன முறையைப் புகுத்தினாலும் அவாளுக்கு அவாளுடைய பங்கு மட்டும்தான் கிடைக்கும் என்றும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுக்கு உரிய பங்கு கொடுக்கப்பட்டே தீர வேண்டும் என்ற விதிமுறை இருந்தால் பார்ப்பன ஆதிக்க வர்க்கத்தின் அயோக்கியத்தனமான சிந்தனைகள் முடக்கப்பட்டு விடும் அல்லவா? (ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் பொருட்படுத்தத் தக்க அளவில் வாய்ப்பு பெறத் தொடங்கிய உடன் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்திலும் நுழைவுத் தேர்வு முறையை மாற்றி வேறு முறையைக் கொண்டு வரலாமா என்று யோசித்துக் கொண்டு இருக்கிறார்கள்)

ஆகவே விகிதாச்சாரப் பங்கீடு என்பது சர்வரோக நிவாரணி அல்ல; அது நமது ஒன்று திரட்டப்பட்ட உணர்வுகள் ஒழுகி, ஒழுகி இல்லாமல் ஆகிவிடாமல் போவதைத் தடுத்து அடைக்கும் அடைப்பானே ஆகும்.

நாம் எவ்வளவோ போராட்டங்களை முன்னெடுக்கிறோம். அவற்றை நடத்தும் போது விகிதாச்சாரப் பங்கீடுப் போராட்டத்தை மறந்து விடுகிறோம்; குறைந்தபட்சம் 'பின்னுக்குத்' தள்ளி விடுகிறோம், இது அதிகார மையங்களில் நமது வலிமை கூடுவதைத் தடுக்கிறது. விகிதாச்சாரப் பங்கீடு நமது இறுதி இலக்கு அல்ல. ஆனால் மற்ற போராட்டங்களில் எல்லாம் நம்மை வலிமைப்படுத்தும் முக்கியமான காரணி.

"பார்ப்பான் கிழக்கே போ என்று சொன்னால், நீ மேற்கே போ" என்று பெரியார் சொன்ன கோணத்திலும் விகிதாச்சாரப் பங்கீடு முறையை நோக்கிப் பாருங்கள்.

நாம் முன்னெடுக்கும் எந்த ஒரு போராட்டம் என்றாலும் அதை ஏற்றுக்கொண்டு நம்முடன் சேர்ந்து போராட முன் வரும் பார்ப்பனர்கள் இருப்பார்கள். கடவுள் மறுப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினை, நீட், தமிழ் வழிக் கல்வி, காவிரி, மீத்தேன், நியூட்ரினோ, ஸ்டெர்லைட் என எந்தப் பிரச்சினை என்றாலும் நம்முடன் சேர்ந்து போராட முன் வரும் பார்ப்பனர்கள் கிடைப்பார்கள். ஏன்? இட ஒதுக்கீட்டை ஆதரிக்கும் பார்ப்பனர்களும் கிடைப்பார்கள்.

ஆனால் விகிதாச்சாரப் பங்கீடுக் கருத்தியலை வளர்க்கவும், முன்னெடுக்கவும் ஒரு பார்ப்பனர் கூட முன் வரமாட்டார். எனக்குத் தெரிந்து இது வரைக்கும் ஒரு பார்ப்பனர் கூட முன் வந்தது இல்லை. இதிலிருந்தே அது நமக்கு எவ்வளவு முதன்மையானது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

# பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் விகிதாசப் பங்கை எட்டுவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும்?

அரசமைப்புச் சட்டம் பிரிவு 16(4)இல் பட்டியல் வகுப்புகள், பழங்குடிகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் ஆகிய மூன்று பிரிவினருக்கும் அரசின் வேலையில் இட ஒதுக்கீடு அளித்திட வழி செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் 26.1.1950இல் நடப்புக்கு வந்தது. பட்டியல் வகுப்புகளுக்கு இதற்கும் முன்பே 1943 முதல் ஆங்கிலேயே அரசு அளித்து வந்த விகிதாசாரப் பங்கு இச்சட்டத்தின் மூலம் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. பழங்குடிகளுக்கு இச்சட்டப் பிரிவின் மூலம் 26.1.1950 முதல் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மட்டும் 1994 வரை மய்ய அரசில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படவே இல்லை. இது வரலாற்றில் இருண்ட காலம் ஆகும்.

**ஆனைமுத்துவின் ஒளிவீச்சு**

இருளில் தள்ளப்பட்டிருந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒளியூட்ட தோழர் வே.ஆனைமுத்து தம் தோழர்களுடன் 1978இல் புதுதில்லிக்குப் புறப்பட்டார். குடிஅரசுத் தலைவர், பிரதமர், அமைச்சர்கள், கட்சிகளின் தலைவர்கள், சமுதாய அமைப்புகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரையும் சந்தித்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்தார்; வட இந்தியா முழுவதும் சுற்றினார்; பரப்புரை செய்தார்; கிளர்ச்சிகள் செய்தார். அதன் விளைவாக மண்டல் குழு 1979இல் அமைக்கப்பட்டது; அதன் அறிக்கை நாடாளுமன்றத்தில் 1982இல் வெளியிடப்பட்டது. அதன் பின்னரே மக்களும் சமுதாய அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் இக்கோரிக்கைக்காகக் களத்தில் இறங்கிப் போராடினர். பிரதமர் வி.பி.சிங் 1990இல் இதற்கு ஆணை பிறப்பித்தார். இது 1994இல் நடப்புக்கு வந்தது.

இடைப்பட்ட காலத்தில் 1990இல் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட உடனேயே உயர் சாதியினர் இந்த ஆணையை எதிர்த்து இது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்றும் அரசு இதை நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். விசாரணைக்குப் பின் 16-11-1992இல் உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. **அந்தத் தீர்ப்பில் இந்த அரசாணை அரசமைப்புச் சட்டப்படி சரியானதே என்று கூறிய உச்சநீதிமன்றம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பெருங்கேடு விளைவிக்கும் கீழ்க்கண்ட கட்டளைகளையும் பிறப்பித்து விட்டது.**

1. பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆகிய மூன்று பிரிவினருக்குமான மொத்த இட ஒதுக்கீடு என்பது 50% வரம்பை மீறக்கூடாது.
2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது.
3. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் பொருளாதாரத்தில் வளர்ந்த பிரிவினருக்கு (Creamy Loyer) இட ஒதுக்கீடு கொடுக்கக்கூடாது.
4. சில குறிப்பிட்ட படிப்புகளுக்கும் பதவிகளுக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கக்கூடாது.

**இந்த நான்கு கட்டளைகளும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை முடமாக்கி முழுமையாகச் செயல்படுத்த விடாமல் முடக்கிவிட்டது. இத்தீர்ப்பு 1994இல் நடப்புக்கு வந்தது.**

**உச்சநீதிமன்றத்தின் இச்செயல் மனிதனைச் செயல்படவிடாமல் அவனுடைய கைகளுக்கும் கால்களுக்கும் விலங்கிட்டு விட்டுச் செயல்படு என்று சொல்வதற்கு ஒப்பானது ஆகும்.**

**பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருடன் இதே விலங்குகளை மாட்டுவதற்கு உயர்சாதி உச்சநீதிமன்றம் உரிய தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.**

**மாட்டப்பட்டுள்ள இந்த விலங்குகள் இந்திய நாடாளு மன்றத்தால் உடைத்தெறியப்பட்டு இன்றுள்ள மேல்வருண நாயகம் ஒழிந்து அனைத்து வகுப்புகளையும் கொண்ட உண்**

மையான பங்கேற்பு சனநாயகம் இந்தியாவில் மலரும்படி செய்ய வேண்டும்.

### பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் முன்னேற்றம்

மய்ய அரசு அலுவலர்களின் வகுப்புவாரியான எண்ணிக்கை மண்டல் குழு அறிக்கையில் 1980ஆம் ஆண்டுக்குத் தரப்பட்டுள்ளது. மய்ய அரசின் பணியமர்த்தம் மற்றும் பயிற்சித் துறையின் இணை அமைச்சர் வி.நாராயணசாமி 18.11.2008ஆம் நாள் நாடாளு மன்றத்திற்கு அளித்த விடையில் மய்ய அரசு அலுவலர்களின் வகுப்புவாரியான எண்ணிக்கை 2008ஆம் ஆண்டுக்குத் தரப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கை விழுக்காடாக மாற்றப்பட்டு அவையிரண்டும் ஒப்பிட்டுப் பார்க்கப்படவேண்டும் என்பதற்காக பட்டியலாக இங்கே அளிக்கப்படுகிறது.

**1980 மற்றும் 2008 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள் ஒப்பிட்டாய்வு**

**முதல் நிலைப் பணிகள்**

| வகுப்பு | 1980 | 2008 | அதிகம் | குறைவு |
|---|---|---|---|---|
| உ.வ. (F.C.) | 89.6% | 77.2% | | 12.4% |
| இ.பி.வ.(OBC.) | 4.7% | 5.4% | 0.7% | |
| ப.வ.&ப.கு. (SC/ST.) | 5.7% | 17.4% | 11.7% | |
| மொத்தம் | 100.0% | 100.0% | | |

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பங்கு 0.7% அதிகரித்துள்ளது.

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு 11.7% அதிகரித்துள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு மொத்தம் 12.4% அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்பால் உயர் வகுப்பினரின் பங்கு 89.6%லிருந்து 77.2%ஆகக் குறைந்துவிட்டது. அதாவது 12.4% குறைந்துவிட்டது.

**இரண்டாம் நிலைப் பணிகள்**

| வகுப்பு | 1980 | 2008 | அதிகம் | குறைவு |
|---|---|---|---|---|
| உ.வ. (F.C.) | 71.2% | 75.4% | 4.2% | |
| இ.பி.வ.(OBC.) | 10.6% | 4.0% | | 6.6% |
| ப.வ.&ப.கு.(SC/ST.) | 18.2% | 20.6% | 2.4% | |
| மொத்தம் | 100.0% | 100.0% | 6.6% | 6.6% |

உயர் வகுப்பினரின் பங்கு 4.2% அதிகரித்துள்ளது.

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு 2.4% அதிகரித்துள்ளது.

உயர் வகுப்பு மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு 6.6% அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்பால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பங்கு 10.6%இலிருந்து 4.0%ஆகக் குறைந்துவிட்டது. அதாவது 6.6% குறைந்து விட்டது.

**3, 4, 5ஆம் நிலைப் பணிகள்**

| வகுப்பு | 1980 | 2008 | அதிகம் | குறைவு |
|---|---|---|---|---|
| உ.வ. (F.C.) | 56.6% | 68.1% | 11.5% | |
| இ.பி.வ.(OBC.) | 19.0% | 7.1% | | 11.9% |
| ப.வ.&ப.கு. (SC/ST.) | 24.4% | 24.8% | 0.4% | |
| மொத்தம் | 100.0% | 100.0% | | |

உயர் வகுப்பினரின் பங்கு 11.5% அதிகரித்துள்ளது.

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு 0.4% அதிகரித்துள்ளது.

உயர் வகுப்பு மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு 11.9% அதிகரித்துள்ளது.

உயர் வகுப்பினரின் பங்கு 11.5% அதிகரித்துள்ளது.

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு 0.4% அதிகரித்துள்ளது.

**1 முதல் 5ஆம் நிலைப் பணிகள்**

| வகுப்பு | 1980 | 2008 | அதிகம் | குறைவு |
|---|---|---|---|---|
| உ.வ. (F.C.) | 68.7% | 68.7% | | |
| இ.பி.வ.(OBC.) | 12.6% | 7.0% | | 5.6% |
| ப.வ.&ப.கு. (SC/ST.) | 18.7% | 24.3% | 5.6% | 0.0% |
| மொத்தம் | 100.0% | 100.0% | | |

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பங்கு 5.6% அதிகரித்துள்ளது.

உயர் வகுப்பினரின் பங்கு 1980இல் இருந்தது அப்படியே உள்ளது; அதிகரிக்கவும் இல்லை; குறையவுமில்லை.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பங்கு 12.6% இலிருந்து 7.0% ஆகக் குறைந்துவிட்டது. அதாவது 5.6% குறைந்துள்ளது.

### 1980 முதல் 2008 வரையான காலத்திய வகுப்பு மற்றும் பணிநிலை வாரியான செயல்பாட்டின் ஆய்வு

**1 முதல் 5ஆம் நிலைப் பணிகள்**

| பணி நிலை | உ.ப. (F.C.) | | இ.பி.வ. (OBC) | | ப.வ.&ப.வ.(SC/ST) | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் (+) | குறைவு (-) | அதிகம் (+) | குறைவு (-) | அதிகம் (+) | குறைவு (-) |
| முதல் நிலை | | 12.4% | 0.7% | | 11.7% | |
| 2ஆம் நிலை | 4.2% | | | 6.6% | 2.4% | |
| 3,4,5ஆம் நிலை | 11.5% | | | 11.9% | 0.4% | |
| 1–5ஆம் நிலை | 0 | 0 | | 5.6% | 5.6% | |

**உயர் வகுப்பினரின் செயல்பாடு :**

முதல்நிலைப் பணிகளில் உயர் வகுப்பினர் பங்கு 12.4% குறைந்துள்ளது. ஆனாலும் இந்த இழப்பை அவ்வகுப்பினர் 2ஆம் 3ஆம் 4ஆம் 5ஆம் நிலைப் பணிகளில் அதிகமான பங்கைப் பெற்று ஈடு செய்து கொண்டனர்.

2ஆம் நிலைப்பணிகளில் 4.2% பங்கு அதிகரித் துள்ளது.

3ஆம் 4ஆம் 5ஆம் நிலைப் பணிகளில் 11.5% அதிகரித்துள்ளது.

5 நிலைகளின் மொத்தப் பணிகளில் அதி கரிப்பும் இல்லை; குறையவும் இல்லை.

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் செயல்பாடு :**

முதல்நிலைப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பங்கு 0.7% அதிகரித்துள்ளது.

2ஆம் நிலைப்பணிகளில் பங்கு 6.6% குறைந்துள்ளது.

3ஆம் 4ஆம் 5ஆம் நிலைப் பணிகளில் பங்கு 11.9% குறைந்துள்ளது.

5 நிலைகளின் மொத்தப் பணிகளின் பங்கு 5.6% குறைந்துள்ளது.

**பட்டியல் வகுப்பினர் & பழங்குடியினரின் செயல்பாடு :**

முதல் நிலைப் பணிகளில் பட்டியல் வகுப்பினர் & பழங்குடியினர் 11.7% அதிகரித்துள்ளது.

2ஆம் நிலைப் பணிகளில் 2.4% அதிகரித் துள்ளது.

3ஆம் 4ஆம் 5ஆம் நிலைப் பணிகளில் 0.4% அதிகரித்துள்ளது.

5 நிலைகளின் பணிகளிலும் இவர்களின் பங்கு 5.6% அதிகரித்து உள்ளது. இது எண்ணி மகிழத்தக்கது.

**பட்டியல் வகுப்புகள் & பழங்குடிகள் முன்னேற்றம்**

மக்கள் தொகையில் 25.5 விழுக்காடு உள்ள ப.வ. & ப.கு. ஆகிய இவ்விரண்டு வகுப்பினரும் 2008இல் மய்ய அரசின் முதல்நிலைப்பணிகளில் 17.4 விழுக்காடு இடங்களும் இரண்டாம் நிலைப் பணிகளில் 20.6 விழுக்காடு இடங்களும் மூன்றாம் நிலை, நான்காம் நிலை, அய்ந்தாம் நிலைப் பணிகளில் 24.8 விழுக்காடு இடங்களும் பெற்றுள்ளனர். தங்கள் வகுப்புகளுக்குரிய **விகிதாச்சாரத்தை எட்டும் பயணத்தில் பட்டியல் வகுப்பினர் 1943இல் இருந்தும் பழங்குடியினர் 1950இல் இருந்தும் என இவ்விரண்டு வகுப்பினரும் பெற்றுள்ள முன்னேற்றம் இதுவாகும்.**

**முன்னேற்றம் எப்படிச் சாத்தியமாயிற்று?**

மய்ய அரசின் பணிகளில் 1943ஆம் ஆண்டு பட்டியல் வகுப்பினருக்கு முதன் முறையாக 8.33 விழுக்காடு இடஒதுக்கீடு நேரடி நியமனப் பதவிகளில் அளிக்கப்பட்டது. அது விகிதாசார அடிப்படையில் 1946ஆம் ஆண்டில் 12.5 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. 1950ஆம் ஆண்டில் பட்டியல் பழங்குடிகளுக்கு முதன் முறையாக 5 விழுக்காடு நேரடி நியமனப் பதவிகளில் விகிதாசார ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இன்று பட்டியல் வகுப்பினருக்கு 15.0 விழுக்காடும் பட்டியல் பழங்குடிகளுக்கு 7.5 விழுக்காடும் விகிதாசார இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. 1946ஆம் ஆண்டிலிருந்து பட்டியல் வகுப்பி னருக்கும் 1950ஆம் ஆண்டிலிருந்து பட்டியல் பழங்குடியினருக்கும் விகிதாசாரப் பங்குடனும் பின்னர் 1963ஆம் ஆண்டிலிருந்து பதவி உயர்விலும் விகிதாசாரப் பங்குடனும் இடஒதுக்கீடு அளிக்கப் பட்டு வருவதால்தான் இந்த முன்னேற்றம் சாத்தியமாயிற்று.

**பிற்படுத்தப்பட்ட மக்களின் இழிநிலைக்குக் காரணம் என்ன?**

மக்கள் தொகையில் 57 விழுக்காடு உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் 2008இல் மய்ய அரசில்

முறையே முதல்நிலைப் பணிகளில் 5.4 விழுக்காடும், இரண்டாம் நிலைப் பணிகளில் 4 விழுக்காடும், 3ஆம் 4ஆம் 5ஆம் நிலைப் பணிகளில் 7.1 விழுக்காடும் மட்டுமே பங்கு பெற்றுள்ளனர்; ஒற்றை இலக்கத்திலேயே பெற்றுள்ளனர்.

மய்ய அரசின் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு அதாவது, அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த 1950ஆம் ஆண்டி லிருந்து 44 ஆண்டுகள் கழித்துத்தான் 1994ஆம் ஆண்டில்தான் முதன்முறையாக அன்றைய விகிதாசாரக் கணக்கின்படி 52 விழுக்காடு கொடுக்காமல் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு நேரடி நியமனப் பதவிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. உச்சநீதிமன்றம் இட ஒதுக்கீட்டுக்கு விதித்துள்ள 50% உச்ச வரம்பிலிருந்து ஏற்கெனவே பட்டியல் வகுப்புகளுக்கு 15% பழங்குடிகளுக்கு 7.5% ஆக மொத்தம் 22.5% இடஒதுக்கீட்டினைக் கழித்தபின் எஞ்சியிருப்பது 27.5% மட்டுமே. இதில் 27% மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்க முடியும். மக்கள் தொகையில் 50 விழுக்காடு உள்ள இவர்களுக்கு இன்று 27 விழுக்காடுதான் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இவர்களுக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு இல்லை. இவர்களில் வளர்ந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடு இல்லை. அதனால் தான் இவர்கள் பெற்றுள்ள பங்கு மிக மிகக் குறைவானதாக சொற்ப எண்ணிக்கையிலேயே உள்ளது.

**பட்டியல் வகுப்பினருக்கு 1943 முதல் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு அதுவே 1946 முதல் விகிதாசார அளவுக்கு நடை முறைப்படுத்தப்பட்டு 1964 முதல் பதவி உயர்விலும் நடைமுறைப்படுத்தப்பட்டு இன்று 75 ஆண்டுகள் ஆகியும் பட்டியல் வகுப்பினர் இன்னும் தங்களுக்குரிய விகிதாசாரப் பங்கை அடையமுடியவில்லை. இங்கே இன்னொன் றையும் கவனிக்க வேண்டும். பட்டியல் வகுப்புகளில் பழங்குடி வகுப்புகளில் வளர்ந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக்கூடாது என்கிற தீமை இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மட்டும் அந்தத் தீமையை உச்சநீதிமன்றம் செய்துவிட்டது.**

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1990இல் இடஒதுக்கீடு ஆணை பிறப்பிக்கப்பட்டு அது 1994இல் தான் நடப்புக்கு வந்தது. அது விகிதாசாரப் பங்கான 52% அளவுக்கு அளிக்கப்படாமல் உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படி அது 27% ஆகக் குறைக்கப்பட்டும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு இல்லை என்றும் வளர்ந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடு இல்லை என்றும் சில குறிப்பிட்ட படிப்புகளுக்கும் பதவிகளுக்கும் இட ஒதுக்கீடு இல்லை என்றும் ஆக்கப்பட்டுவிட்டது. **இன்றுள்ள நிலையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இன்னும் நூறாண்டுகள் ஆனாலும், தங்களுக்குரிய விகிதாசாரத்தை எட்ட முடியாது.**

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற் படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகிய மூன்று வகுப்பினரும் தங்கள் தங்கள் வகுப்புகளுக்குரிய பங்கினை முழுதாக அடைய முடியவில்லை. அவ்வாறு அடைய முடியாத பங்கினை உயர் வகுப் பினரே அபகரித்துக் கொண்டனர்; அபகரித்துக் கொண்டு வருகின்றனர்.

மண்டல் குழு அறிக்கையில் 3743 சாதிகள் - சமுதாயங்கள் மட்டுமே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மக்கள் தொகையில் அவ்வகுப்புகளின் விழுக்காடு 52 ஆகும். இதன் பிறகு மய்ய அரசு மேலும் 600 சாதிகளை அப்பட்டியலில் சேர்த்து விட்டது. எனவே இப்போதுள்ள பட்டியல்படி மக்கள் தொகையில் எல்லா மதங்களையும் சார்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 57 விழுக்காடாக உயர்ந்து விட்டது.

### அனைத்து வகுப்புகளும் பங்காளிகள்

இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களை பட்டியல் பழங்குடிகள், பட்டியல் வகுப்புகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் என்று பிரிவினை செய்துள்ளது; பிரிவினைக்கு உள்ளாகாத எஞ்சிய அனைவரும் உயர் வகுப்பினர். இந்திய சனநாய கத்தில் பங்காளிகளான இந்நான்கு பிரிவினருக்கும் தேசத்திலுள்ள அனைத்தையும் பெரியாரும் அம்பேத்கரும் லோகியாவும் வகுத்துக் கொடுத் துள்ள விகிதாசார வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் பாகப் பிரிவினை செய்து கொடுக்கப்பட வேண்டும். மய்ய அரசில் பட்டியல்

வகுப்புகளுக்கும் பழங்குடிகளுக்கும் கல்வியிலும் வேலையிலும் அவ்வாறு விகிதாசாரப்படி பாகப் பிரிவினை செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 1994 வரையிலும் மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் அவ்வாறு பாகப் பிரிவினை செய்து கொடுக்கப்படவே இல்லை. **பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பங்கை உயர் வகுப்பினரே அனுபவித்து வந்தனர்; இன்றும் அனுபவித்து வருகின்றனர்.**

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1994இல்தான் இடஒதுக்கீடு முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் அது விகிதாசாரப் பங்காக இல்லை. மேலும் வளர்ந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு கிடையாது; பதவி உயர்வில் கிடையாது; என்கின்ற குறைபாடுகளுடன் அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எல்லா வகுப்புகளுக்கும் விகிதாசாரம் பங்கிட்டுக் கொடுத்தால்தான் இந்திய சனநாயகம் பங்கேற்பு சனநாயகமாக மலரும்.

தமிழ்நாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் 1928 முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டாலும் பிற்படுத்தப்பட்ட–மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாசாரப் பங்கு நடப்பில் இல்லை. அவற்றுக்குள்ளும் சில வகுப்புகள் சிலவற்றில் முற்றிலும் பிரதிநிதித்துவம் பெறாமலும் சிலவற்றில் சொற்ப அளவுக்கு மட்டுமே பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன.

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மய்ய அரசின் வேலையில் 1994 முதற்கொண்டும் மய்ய அரசின் கல்வியில் 2008 முதற்கொண்டும் தங்களுடைய விகிதாசாரத்துக்குக் குறைவாகவே. அதாவது, மக்கள் தொகையில் 57 விழுக்காடு உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 27 விழுக்காடு மட்டுமே இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது 57 விழுக்காடாக உயர்த்தப்பட்டு விகிதாசாரப் பங்காக அளிக்கப்பட வேண்டும்.,**

### என்ன செய்ய வேண்டும்?

**பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு விகிதாசார இடப்பங்கீடு அளிக்கப்பட வேண்டும்; பதவி உயர்விலும் இடப்பங்கீடு கொடுக்கப்பட வேண்டும். மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் வளர்ந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு இல்லை என்கிற அரசு ஆணை நீக்கப்பட வேண்டும். சில குறிப்பிட்ட படிப்புகளுக்கும் பதவிகளுக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்கின்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு இரத்துச் செய்யப்பட வேண்டும். இதற்காக இவ்வகுப்பினர் தொடர்ந்து போராட வேண்டும்.**

இதைப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

### படிப்பு வட்டம் - செயல் வட்டம்

இதன் பொருட்டு இதர பிற்பட்ட வகுப்புகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு படிப்பு வட்டம் உருவாக்கப்பட்டு விகிதாச்சார வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கல்வி அளிக்கப்பட வேண்டும்; செயல்வட்டம் அமைத்து அதை அடைவதற்கான வேலைத்திட்டம் வகுத்துப் பாடுபட வேண்டும்.

## உடல் வெப்பமும் விகிதாசாரப் பங்கீடும்

மனிதன் குளிர்மிகுந்த இடத்தில் வாழ்ந்தாலும் வெப்பம் மிகுந்த இடத்தில் வாழ்ந்தாலும் ஆண்டின் எல்லா நாள்களிலும் ஒரு நாளின் எல்லா நேரங்களிலும் அவனுடைய உடலின் வெப்ப அளவு 98.4F நிலையிலேயே மிகாமலும் குறையாமலும் பேணப்பட்டு வருகின்றது. அது மிகினும் குறையினும் நோய் எனப்படும். அது போன்றதுதான் சமுதாய வாழ்க்கை. சமுதாய வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் அந்தச் சமுதாயத்தில் அடங்கியுள்ள பல வகுப்புகளும் உரிமை, உடைமை, அனுபவிப்பு ஆகிய மூன்றிலும் மக்கள் தொகையில் தங்களுடைய வகுப்பின் விகிதாசார அளவுக்குரிய பங்கினைப் பெற்று வாழ வேண்டும். ஒரு வகுப்பு விகிதாசார அளவுக்கும் கூடுதலாகவோ குறைவாகவோ பெற்று வாழ்வது சமுதாய நோய் ஆகும்; கூடுதலாகப் பெறுவது ஆதிக்கம் செய்யும்; குறைவாகப் பெறுவது அடிமையாக்கிவிடும்; பிரதிநிதித்துவம் பெறாமலே இருப்பது வாழ்வது ஆகாது; நடைப்பிணத்திற்கு ஒப்பாகும். எனவே எல்லா வகுப்புகளும் தங்களுக்குரிய விகிதாசாரப் பங்கினைப் பெற்று வாழ்வதே சுயமரியாதை வாழ்வாகும்.

# இந்திய ஆட்சிப் பணியை ஆர்.எஸ்.எஸ். கூடாரமாக்கும் மோடி அரசு

- க. முகிலன்




புதியதாகப் பணியில் சேர்ந்த இளம் ஐஏஎஸ் அதிகாரிகளிடம் தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகிறார்

ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் இந்தியா வருவதற்குமுன், இந்தியா என்பது ஒரே நாடாக - ஒரே நிர்வாகத்தின்கீழ் வரலாற்றில் ஒருபோதும் இருந்ததில்லை, 1800இல்தான் இப்போது தனிநாடுகளாக உள்ள பாக்கித்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தியத் துணைக் கண்டம் ஒரே நாடாக ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

அதன்பின், மக்களை அடக்கி ஆள்வதற்கும், சுரண்டுவதற்கும் ஏற்றதான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் உருவாக்கியது. இதில் பணியாற்றுவதற்கான ஊழியர்களை உருவாக்குவதற்காக ஆங்கில மொழிவழிக் கல்வித் திட்டத்தை 1835இல் தொடங்கியது. அரசின் பல்துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர் போன்ற உயர் அதிகாரப் பதவிகளில் ஆங்கிலேயர் மட்டுமே இருந்தனர்.

இந்தியாவில் காலங்காலமாகக் கல்வி கற்கும் உரிமை பெற்றிருந்த பார்ப்பன - மேல் சாதியினர், "இந்தியாவில் அரசு உத்தியோகங்களை இந்தியர் மயமாக்கு" என்று குரல் எழுப்பினா. 1885இல் தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியின் முதல் கோரிக்கை முழக்கமாக இதுவே இருந்தது. பிரித்தானிய அரசு இக்கோரிக்கையை ஏற்றது. பார்ப்பன-மேல் சாதிக் குடும்பங்களின் பிள்ளைகள் இலண்டனில் இந்திய சிவில் சர்வீஸ் (ICS) படிப்பை முடித்து உயர் அதிகாரிகளாகப் பதவிகளில் அமர்ந்தனர். இந்த உயர் அதிகார வர்க்கம் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நடந்த அடக்குமுறைகளுக்கும் சுரண்டல்களுக்கும் துணை நின்றது.

சுதந்தரம் பெற்றபின் இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் பட்டேல் இந்திய சிவில் சர்வீஸ் (ICS) பதவிகள், இனி இந்திய ஆட்சிப் பணி (IAS) என்று அழைக்கப்படும் என்று அறிவித்தார். அப்போது சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இந்திய ஆட்சிப்பணி நிலையிலான அதிகாரிகளை அந்தந்த மாநிலங்களே தேர்வு செய்து கொள்ளும் உரிமை வேண்டும் என்று, வல்லபாய் பட்டேல் கூட்டிய முதலமைச்சர்கள் கூட்டத்தில் வலியுறுத்தினார். ஆனால் அக்கோரிக்கை ஏற்கப்படவில்லை. இந்திய ஆட்சிப்பணி (IAS), இந்தியக் காவல்பணி (IPS), இந்திய அயலுறவுப் பணி (IFS) போன்ற உயர் அதிகாரப் பதவிகளுக்கான ஆட்களை இந்திய அரசே தேர்வு செய்து பயிற்சி அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

கடந்த இருபது, முப்பது ஆண்டுகளாக முதல் தலைமுறையாகப் படித்தக் குடும்பங்களில் குழந்தைகளிடம் மருத்துவராக வேண்டும்; ஐ.ஏ.எஸ்.ஆக வேண்டும் என்ற கனவு ஊட்டி வளர்க்கப்படுகிறது. நீட் தேர்வு முறை மூலம் கிராமப்புற - சிறுநகர்ப்புற மாணவர்களின் மருத்துவக் கனவுகள் சிதைப்பட்டு விட்டன. அதேபோன்று பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சாதியினர், பழங்குடியினர் குடும்பங்களின் இளைஞர்களின் ஐ.ஏ.எஸ். கனவைத்தகர்க்கும் வகையிலும், ஆர்.எஸ்.எஸ். - இந்துத்துவச் சிந்தனை கொண்ட இளைஞர்களை இந்திய ஆட்சிப்பணி (IAS), இந்திய காவல் பணி (IPS) ஆகிய உயர் அதிகாரப் பதவிகளில் அமர்த்தும் நோக்கத்துடனும் நரேந்திரமோடி தலைமையிலான இந்துத்துவ நடுவண் அரசு ஒரு புதிய நடைமுறையைப் புகுத்த முயல்கிறது.

நடுவண் அரசில் 24 வகையான முதல்நிலைப் பணிகள் (GROUP-A) உள்ளன. இந்த அரசுப் பணிகள், குடிமைப்பணிகள் (Civil Services) என்று அழைக்கப்படுகின்றன. இப்பணியிடங்கள் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் தேர்வு மூலம் நிரப்பப்படுகின்றன. ஆண்டுதோறும் 600 முதல் 1000 வரையில் இப்பணிகளில் ஏற்படும் காலி இடங்களுக்கான தேர்வு நடத்தப்படுகிறது. தொடக்க நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு என்று மூன்று கட்டங்களாக இத்தேர்வு நடைபெறுகிறது. ஆண்டுதோறும் ஏறக்குறைய பத்து இலட்சம் பேர் இத்தேர்வை எழுதுகின்றனர்.

**தொடக்கநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற வர்கள் மட்டுமே முதன்மைத் தேர்வை எழுத முடியும். முதன்மைத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற மொத்த மதிப்பெண் அடிப் படையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். என்கிற பணிப்பிரிவு ஒதுக்கப்படுகிறது. பணிப் பிரிவு ஒதுக்கீடு செய்யப்படும் போது, தேர்வாளர் அவருடைய விண்ணப்பத்தில் பணிப்பிரிவு குறித்து தெரிவித்திருந்த விருப்பமும் கருத்தில் கொள்ளப்படு கிறது. குடிமைப் பணித்தேர்வில் அரசியல் தலை யீடோ, உயர் அதிகாரிகள் தலையீடோ இருப்ப தில்லை. முதன்மைத் தேர்வுத் தாளைத் திருத்து பவருக்கு அத்தேர்வாளர் யார் என்று தெரியாது. நேர்முகத் தேர்வை நடத்து பவருக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர்தான் தேர்வாளரின் பெயரே தெரியவரும். மத்திய அரசுப் பணியாளர் தேர் வாணையம் நடத்தும் குடிமைப்பணித் தேர்வு முறை குறித்து இதுவரையில் எந்தக் குற்றச் சாட்டும் எழுந்ததில்லை. இந்தியாவின் குடிமைப் பணித் தேர்வு, உலகின் மிகக் கடினமான தேர்வு களில் ஒன்றாகக் கருதப் படுகிறது.**

**குடிமைப் பணித்தேர்வின் மதிப்பெண் அடிப் படையில் மட்டுமே, பணிப்பிரிவு ஒதுக்கப்படும் போதே, எந்த மாநிலத்தில் பணியாற்ற வேண்டும் என்கிற ஒதுக்கீடும் செய்யப்படுகிறது. அதே சமயத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 விழுக் காடு, பட்டியல் குலத்தினருக்கு 15 விழுக்காடு, பழங்குடியினர்க்கு 7.5 விழுக்காடு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதன்பின் இவர்களுக்கு மிசௌரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக இயல் பயிற்சி நிறுவனத்தில் 15 வாரங் கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது ஆதாரப் பயிற்சி (Foundation Course) எனப்படுகிறது. நீண்ட காலமாக இதுவே நடைமுறை. இது இப்போது மாற்றப்படுகிறது.**

நடுவண் அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறை 17.5.2018 அன்று எல்லா அமைச்சகங் களுக்கும் ஒரு மடல் அனுப்பியது. அதில், ''பிரதமர் அலுவலகம் குடிமைப் பணித் தேர்வின் மதிப்பெண் மற்றும் ஆதாரப் பயிற்சியின் மதிப்பெண் ஆகியவற் றின் கூட்டு மதிப்பெண் அடிப்படையில் தேர்வாளர் களுக்குப் பணி ஒதுக்கீடும், மாநில ஒதுக்கீடும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறது; இதுகுறித்து உங்கள் கருத்தை ஒரு வாரத்திற்குள் தெரிவிக்க வேண்டும்; இந்த ஆண்டு முதலே இப்புதிய திட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டும் என்று பிரதமர் அலுவலகம் விரும்புகிறது'' என்று கூறப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகம் முன்மொழிந்துள்ள இத்திட்டம் அரசியல் சட்டத்துக்கும் சனநாயக நெறிமுறைக்கும், உண்மையான திறமையுள்ளவர்களைக் கண்டறிவ தற்கும் சமூக நீதிக்கும் எதிரானதாகும். இந்துத்துவச் சிந்தனை கொண்டவர்களை-ஆர்.எஸ்.எஸ். இயக்கத் தோடு தொடர்புடையவர்களை இந்திய ஆட்சிப்பணி (IAS), இந்திய காவல் பணி (IPS) போன்ற அதிகாரம் கொண்ட பணிப்பிரிவுகளில் அமர்த்தவும், பிற்படுத்தப் பட்ட, பட்டியல் குல, பழங்குடி வகுப்புகளின் இளைஞர் களுக்கு முதல்நிலைப் பணிகளில் (Group-A) அதிகாரம் இல்லாத அல்லது அதிகாரம் குறைவான பணிகளை ஒதுக்கவும் இத்திட்டத்தை நரேந்திர மோடியின் அலு வலகம் தீட்டியிருக்கிறது. 2019இல் நாடாளுமன்றத் தேர்தல் நடப்பதற்கு முன்பே சூதான இத்திட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்று நரேந்திர மோடி ஆட்சி துடிக்கிறது.

**அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 315 முதல் 323 வரை மத்திய மற்றும் மாநிலங்களுக்கான அரசுப் பணியாளர் தேர்வாணையம் பற்றிக் கூறுகின்றன. ''மத்திய மற்றும் மாநிலங்களுக் கான பணிகளுக்குத் தேர்வு நடத்துவது என்பது, சம்பந்தப்பட்ட மத்திய அல்லது மாநிலங்களுக் கான அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடமை'' என்று அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 320(1) திட்டவட்டமாகக் கூறுகிறது. எனவே குடிமைப்பணிக்கான தேர்வு நடத்தும் பொறுப்பு முற்றிலும் தேர்வாணையத்தைச் சார்ந்ததாகும். தற்போது பிரதமர் அலுவலக முன்மொழிவில் குடிமைப்பணித் தேர்ச்சிக்கு ஆதாராப் பயிற்சி நிறுவனத் தேர்வின் மதிப்பெண்ணையும் சேர்த் திருப்பது பிரிவு 320(1)க்கு எதிரானதாகும்.**

தேர்வாணையத்தின் தலைவரும் உறுப்பினர் களும், அரசமைப்புச் சட்டப்படி (Constitutional Posts) நியமிக்கப்படுகின்றனர். சட்டப்பிரிவு 316 அவர்களுக்குப் பணிப்பாதுகாப்பு வழங்குகிறது. பிரதமர் நினைத்தாலும் அவர்களின் பணிக்காலம் முடிவதற்கு முன்பாக அவர் களைப் பணியிலிருந்து நீக்க முடியாது. அவர்கள் பணிக்காலம் முடிந்தபின், எந்தவொரு அரசுப் பதவி யையும் வகிக்கக்கூடாது என்று 319ஆவது சட்டப்பிரிவு கூறுகிறது. இச்சட்டப் பிரிவுகளின் நோக்கம் தேர்வா ணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் எத்த கைய அரசியல் தலையீட்டையும் புறக்கணித்துவிட்டு, சுதந்தரமாகச் செயல்பட வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

முசௌரியில் உள்ள ஆதாரப் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநரும், பயிற்சி அளிப்பவர்களும் தேர்வாணை யத்தினரைப் போல் அரசமைப்புச் சட்டப்படி பணி நியமனம் பெற்றவர்கள் அல்லர், இவர்கள் அயல்பணி முறையில் (Deputation) அரசுப் பணியில் இருக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் கல்வியாளர்கள் ஆவர். ஆதாரப் பயிற்சி நிறுவனத்தில் அயல்பணி முறையில் பணியாற்றும் இவர்களை நடுவண் அரசு நினைத்த போதில் பணி மாற்றம் செய்ய முடியும். இவர்கள் ஆட்சி யாளர்கள், அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள் பரிந்

துரைக்கும் பயிற்சியாளர்களுக்குத் தேர்வில் கூடுதல் மதிப்பெண் வழங்குவதற்கான வாய்ப்புண்டு. ஆதாரப் பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றிய பின், பதவி உயர்வு, அதிகாரம் மிக்க பதவி அளிக்கப்படும் என்கிற உறுதிப்பாட்டின் அடிப்படையில் குறிப்பிட்ட பயிற்சி யாளர்களுக்குக் கூடுதல் மதிப்பெண் அளிப்பார்கள். பெருந்தொகையைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு கூடுதல் மதிப்பெண் வழங்குவார்கள்.

2014இல் பா.ச.க. தனிப்பெரும்பான்மையுடன் நரேந்திரமோடி தலைமையில் ஆட்சியை அமைத்தது முதல் நடுவண் அரசில் அதிகாரங்களைக் குவிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. அரசு நிறுவனங்களை, பல்கலைக்கழகங்களை இந்துத்துவமயமாக்கி வருகிறது. பிரதமர் நரேந்திர மோடி பாசிச - சர்வாதிகாரப் போக்குடன் செயல்பட்டு வருகிறார். உச்சநீதிமன்றத்திலும் நடுவண் அரசு தலையிடுகிறது என்றும், இதற்காக தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவைப் பயன்படுத்துகிறது என்றும் 2018 சனவரி 12 அன்று உச்சநீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகள் செய்தியாளர் கூட்டத்தில் கூறினர். இத்த கைய பாசிச நரேந்திர மோடி, மத்திய அரசுப் பணி யாளர் தேர்வாணையம் அரசமைப்புச் சட்டப் பாது காப்புடன் சுதந்தரமாகச் செயல்படுவதைக் குலைக் கவும், இந்துத்துவச் சிந்தனை கொண்டவர்களை உயர் அதிகாரப் பணிகளில் அமர்த்தவும் இப்புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த முனைந்துள்ளார்.

15 வார ஆதாரப் பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பே, தேர்வாணையம் நடத்திய தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் பணிப்பிரிவு ஒதுக்கீடு செய்யப்படு கிறது. பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் குலத்தினர், பழங்குடியினர் ஆகியோருக்கான மொத்த இடஒதுக்கீடு 49.5 விழுக்காடு போக மீதியுள்ள பொதுப் பிரிவினர்க் கான 50.5. விழுக்காடு இடங்கள் மதிப்பெண் தரவரிசை அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன. அந்நிலையில் அதிக மதிப்பெண் பெற்ற பிற்படுத்தப்பட்ட - பட்டியல் குல - பழங்குடி இளைஞர்களுக்குப் பொதுப் பிரிவில் (Open Competition) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிப்பிரிவுகள் கிடைக்கும். ஆனால், ஆதாரப் பயிற்சித் தேர்வின் மதிப்பெண்ணையும் சேர்த்த பின்னரே பணிஒதுக்கீடு செய்ய வேண்டும் என்கிற பிரதமர் அலுவலக முன்மொழிவு நடைமுறைப்படுத்தப்பட்டால், பிற்படுத்தப்பட்ட, பட்டியல் குல - பழங்குடி இளைஞர் கள், பொதுப்பிரிவில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிப் பிரிவுகளைப் பெற முடியாதவாறு, பயிற்சித் தேர்வில் அவர்களுக்குக் குறைந்த மதிப்பெண் வழங் கப்படும். மேலும் பார்ப்பன - மேல்சாதி பயிற்சியாளர் களுக்குக் கூடுதல் மதிப்பெண் வழங்குவதன் மூலம் பொதுப்பிரிவில் உள்ள 50.5 விழுக்காடு இடங்களை யும் இவர்களே கைப்பற்றிக் கொள்ளும் நிலை ஏற்படும். பொதுப் பிரிவில் உரிமை மறுக்கப்பட்டு இடஒதுக்கீட்டுப் பிரிவுக்குள் மட்டுமே முடக்கப்படும் நிலை உண்டாகும்.

இது பிற்படுத்தப்பட்ட வகுப்பு இளைஞர்களுக்குப் பேரிடியாக அமையும். பட்டியல் குலத்தினருக்கும் பழங்குடியினருக்கும் மொத்த மக்கள் தொகையில் அவர்களின் விகிதாசாரப்படி இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் தொகையில் 57 விழுக்காட்டினராக உள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மண்டல் பரிந்துரைப்படி 27 விழுக்காடு தான் ஒதுக்கீடு தரப்பட்டுள்ளது. அரச மைப்புச் சட்டத்தில் பிரிவு 16(4)இல் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு அரசு வேலைகளில் இடஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் காகா கலேல்கர் என்பவர் தலைமையில் முதலாவது பிற்படுத்தப்பட் டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. 1955இல் கலேல்கர் ஆணையம் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. பார்ப்பன நேரு அதை நடைமுறைப்படுத்தாமல் 1961 மே மாதம் குப்பைக் கூடையில் வீசி எறிந்தார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி யின் பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து 1978இல் நடுவண் அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெற்றே தீருவது என்ற குறிக்கோளுடன் தில்லிக்குச் சென்றார். பீகார் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராம் அவதேஷ் சிங் அவர்களுடன் இணைந்து, தில்லியிலும் வடஇந்திய மாநிலங்களிலும் மேற்கொண்ட நடவடிக்கைகள், போராட்டங்களின் விளைவாக பி.பி. மண்டல் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப் பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரையின் அடிப்படையில் பிரதமர் வி.பி. சிங் 1990 ஆகத்து மாதம் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கினார். இது 1994இல் தான் நடப்புக்கு வந்தது. ஆயினும் 2008இல் நடுவண் அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்தபடி, பிற்படுத்தப் பட்டோர் முதல்நிலைப் பணிகளில் 5.4 விழுக்காடும் இரண்டாம் நிலைப் பதவிகளில் 4 விழுக்காடும் மட்டுமே உள்ளனர். எனவே பிரதமர் அலுவலகத்தின் புதுத் திட்டம் பிற்படுத்தப்பட்டவர்கள் உயர் அதிகாரம் கொண்ட பதவிகளைப் பெறவிடாமல் தடுக்கும் சூழ்ச்சியே ஆகும். நிர்வாக அதிகாரப் பதவிகளைக் கைப்பற்று வதில் பார்ப்பன - மேல்சாதியினர், பிற்படுத்தப்பட்டவர் களையே தங்கள் போட்டியாளர்களாகக் கருதுகின்றனர்.

குடிமைப் பணித் தேர்வைத் தமிழில் எழுதி தேர்ச்சி பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவர்கள் கிராமப்புறங்களின் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் குல குடும்பங்களின் பிள்ளைகளாவர். இரண்டு, மூன்று ஆண்டுகள் கடுமையாக உழைத்து - ஒன்றிரண்டு முறை தோல்வியுற்றபின் தேர்வில் வெற்றி பெறு கின்றனர். இவர்களைப் போல் இந்தி அல்லாத மற்ற தாய்மொழிகள் மூலம் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற வர்கள் முசௌரியில், பயிற்சிக் காலத்தில் இந்தி தெரியாத காரணத்தாலும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் இயலாததாலும் புறக்கணிப்புக்கு

ஆளாகின்றனர். இந்நிலையில் நடத்தப்படும் தேர்வில் இவர்களால் நல்ல மதிப்பெண் பெற முடியாது; அல்லது இவர்களுக்குக் குறைந்த மதிப்பெண் வேண்டு மென்றே வழங்கப்படும். தேர்வாணையத் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்றிருந்த போதிலும் பயிற்சி நிறுவனத் தேர்வில் குறைவான மதிப்பெண் பெறு வதால், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற உயர் அதிகாரப் பணிப்பிரிவுகள் இவர்களுக்குக் கிடைக்காமல் போகும். இது இவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

**நாடாளுமன்ற சனநாயக ஆட்சி முறையில் அமைச்சரவை தான் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டதாகும். ஆனால் இந்திராகாந்தி காலம் முதல் பிரதமர் அலுவலகம் அமைச்சரவையை விட அதிக அதிகாரம் கொண்டதாகச் செயல்பட்டு வருகிறது. இப்போக்கு நரேந்திரமோடி ஆட்சியில் உச்சநிலையை எட்டியுள்ளது. அதனால்தான் குடிமைப்பணித் தேர்வு முறையை அரசமைப்புச் சட்ட நெறிமுறைக்கு எதிராக மாற்றிட பிரதமர் அலுவலகம் முனைந்துள்ளது. பிரதமர் அலு வலகத்தின் இந்த முன்மொழிவைத் திரும்பப் பெறவேண்டும் என்று மக்களாட்சி நெறி முறை யில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் அழுத்தமாகக் குரல் கொடுக்க வேண்டும்.**

பிரதமர் அலுவலகத்தின் முன்மொழிவுக்குக் கடும் கண்டனங்கள் எழுந்த நிலையில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் நடுவண் அரசு 10.6.2018 அன்று ஒரு விளம்பரத்தை வெளியிட்டுள்ளது. அதில், நடுவண் அரசின் பத்து அமைச்சகங்களில் இணைச் செயலாளர் நிலையிலான பத்துப் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக இம் கூறப்பட் டுள்ளது. தனியார் நிறுவனங்கள், கன்சல்டன்சி நிறு வனங்கள், சர்வதேச மற்றும் பன்னாட்டு நிறுவனங் கள், மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழுங்கள் போன்ற வற்றில் 15 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் 3 ஆண்டுமுதல் 5 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் இணைச் செயலாளராக நியமனம் பெறுவதற்காக விண் ணப்பிக்கலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிமைப்பணித் தேர்வில் தேர்ச்சி பெற்று ஐ.ஏ.எஸ். ஒதுக்கீடு பெற்று சார்பு செயலாளர் (துணை ஆட்சியர்) துணைச் செயலாளர் பதவிகளில் 15 ஆண்டுகள் பணிசெய்த அனுபவம் பெற்ற பிறகே இணைச் செய லாளர் என்ற நிலையை அடைகின்றனர். இந்தியாவில் இருக்கின்ற 5000 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் 500 பேர் இணைச் செயலாளர் நிலையில் பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் மோடி அரசு விரும்புகின்ற கல்வித்தகுதியும் அனுபவமும் கொண்ட பத்து பேர் இல்லையா? வெளியிலிருந்து பத்துப் பேரை இணைச் செயலாளர்களாக நியமிக்க வேண்டும் என்று மோடி அரசு விரும்புவதன் நோக்கம், தனக்கு நெருக்கமான இந்துத்துவ-ஆர்.எஸ்.எஸ். ஆட்களை உயர் பதவியில் அமர்த்த வேண்டும் என்பதே ஆகும்.

**நடுவண் அரசிலும் மாநில அரசுகளிலும் குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரதமராகவோ, முதலமைச்சர்களாகவோ, அமைச் சர்களாகவோ ஆட்சியில் இருந்தாலும் அவர் களின் பதவிக்காலம் அய்ந்தாண்டுகள் மட்டுமே ஆகும். ஆனால் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பை இயக்குபவர்களாக இருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி களின் பணிக்காலம் கிட்டத்தட்ட 30 ஆண்டு களாகும். எனவே உண்மையான செயல்படு அதிகாரம் இவர்களிடம்தான் இருக்கிறது. இவர் களில் 77 விழுக்காட்டினர் பார்ப்பனர்களாகவும் பிற மேல்சாதியினராகவும் இன்று உள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ். அதிகார வர்க்கம் பல வகையிலும் சீரழிந்துவிட்டது. இந் நிலையை மாற்றியமைக்க முனையாமல், குடிமைப் பணித் தேர்வு முறையை மாற்றியமைப்பதன் மூலம் இந்துத்துவ விசுவாசிகளை உயர் அதிகார பீடத்தில் அமர்த்த முயல்கிறது, மோடி அரசு இது இந்திய குடிமைப் பணித் திறமைக்கே இழுக்கு சேர்ப்பதாகும்.**

சனநாயக நெறிமுறைக்கும், சமூக நீதிக்கும், மதச் சார்பின்மைக்கும், இந்தியாவின் பன்முகத் தன்மைக் கும் எதிரான பிரதமர் அலுவலகத்தின் முன்மொழி நடுவண் அரசு கைவிடும் வரையில் இவற்றை எதிர்த்துப் பல தளங்களிலும் போராடுவோம். ❖

## தாம்பரத்தில் புதியக் கல்விக் கொள்கையைக் கண்டித்துக் கூட்டம்

"சமய நல்லிணக்கம்" என்ற நோக்கத்திற்கான சந்திப்பு நிகழ்ச்சி 18.6.2018 மாலை 7 மணிக்குப் பொதுக் கூட்டமாக கல்லிடைக்குறிச்சி பெரிய ஜும்மா பள்ளிவாசல் அருகில் நடைபெற்றது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் சமய நல்லிணக்கத் தூதர் 70 ஆண்டுகால மக்கள் தொண்டு செய்தவர், 12 முறை சிறைவாழ்வை அனுபவித்தவர் கொடிக் கால் ஷேக் அப்துல்லா சிறப்புரையாற்றினார். இதில் சமய நல்லிணக்க இந்தியப் பயணி ஜனாப் இனாமுல் அசன் அவர்களும் சீரிய உரையாற்றினர்.

இதில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி கலந்துகொண்டு உரையாற்றினார்.

## மடல் பகுதி

அன்பார்ந்த ஐயா, வணக்கம்.

94ஆம் பிறந்த நாள் பற்றியறிந்தேன். தங்களின் குமுகாயப் பணி, நூற்பதிப்புப் பணி, பரப்புரைப் பணி, இதழ்ப்பணி, கொள்கையுரம் போன்றவை மிகவும் பெருமைக்குரியவை. என் மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துகள்! நூற்றாண்டு நீடு வாழ்க!

அன்புடன் : **க. தமிழமல்லன்,** புதுச்சேரி

# மா.பெ.பொ.க. வரலாற்றில் புதுமை படைப்போம்!

அன்புத் தோழர்களே, தோழியர்களே!

அன்பு வணக்கம்.

நலம். இதுவரை மனமார ஏற்றுக்கொண்ட கட்சி மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி. அரசியல், சமுதாயவியல், பொருளியல் கோட்பாடுகளை மார்க்சியப் பெரியாரிய நெறியில் கொண்டுள்ள முதன்மையான இயக்கம் நம் கட்சி. நம் கட்சியும், கட்சியின் ஏடான சிந்தனையாளன் ஏடும் ஏறத்தாழ 50 ஆண்டுகால வரலாறு கொண்டதாகும்.

**சிறப்புக் குழு :**

நம் கட்சி இதற்கு முன் எத்தனையோ செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களை நடத்தியுள்ளது. ஆனாலும், கடந்த 20.6.2018 அன்று நடத்திய உயர்மட்டக்குழு சிறப்புக் கூட்டம் மா.பெ.பொ.க. வரலாற்றில் மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். கட்சி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மிகவும் முக்கிய முடிவுகளை மேற்கொண்டுள்ளது. இந்த முடிவுகள் அனைத்தும் நமக்கு புதுத் தெம்பையும், திடமான நம்பிக்கையையும் ஊட்டுகிறது.

**கட்சியை வடிவமைத்தல் :**

கட்சியை முறைப்படி செப்பமாக வடிவமைத்தல் என்பதை முதல் வேலையாகக் கொள்ளப்பட்டது. கட்சி உறுப்பினர்களை முறைப்படி பதிவு செய்து உறுப்பினராக்குதல் முதல் வேலை. இதற்காக ஒவ்வொரு மாவட்டமும் மாவட்டக் குழுவைக் கூட்டி, உறுப்பினர்களைப் பதிவு செய்வது. இதனை ஊக்கப்படுத்தும் வகையில் 8.7.2018 முதல் கட்சித் தலைமை இடத்தில் இருந்து இரண்டு, மூன்று பொறுப்பாளர்கள் மாவட்டக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடிவு செய்யப்பட்டது.

**நம்பிக்கை :**

காஞ்சி, வேலூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் மிகக் குறைந்தது மாவட்டத்துக்கு 50 உறுப்பினர்களைப் புதிதாகச் சேர்ப்பது என்றும், பிற மாவட்டங்களில் குறைந்தது 25 உறுப்பினர்களை யாவது சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த நோக்கத்தைத் திட்டமிட்ட அளவுக்கும் அதிகமாக நிறைவேற்ற நாம் ஒவ்வொருவரும் போட்டி போட்டுச் செயல்பட்டு சாதிப்பது நம் கட்சிக்கும், நாட்டிற்கும் நன்மை பயப்பதோடு, நம் கட்சியின் பொதுச் செயலரின் மனம் நிறைவு அடையவும், புதுத்தெம்பைப் பெறவும் வழி வகுக்கும் என்று நாம் மனமார நம்பிச் செயல்படுவோம்.

**பொதுச் செயலாளரின் பங்கு :**

இந்தப் பயணப் பணியில் நம் பொதுச் செயலர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் நேரில் கலந்து கொள்ள இயலாத நிலையில், அவர் தனக்கு நேரிடையாகத் தொடர்புடைய தோழர்களுக்குத் தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு உறுப்பினர் சேர்க்கைக்கு உறுதுணையாக இருக்க உறுதி அளித்துள்ளார். இது, நாம் ஏற்றுள்ள வேலையை எளிதாக்கும்.

மாநாடு : உறுப்பினர்களைச் சேர்க்கும் முதல் சுற்றுப் பணி முடிந்ததும், கட்சியின் சட்டதிட்டப்படி கிளை அமைப்புகளை அமைத்த பிறகு, கட்சியின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாநில மாநாடு நடத்திடத் திட்டமிடப்பட்டது.

பயிற்சி : இனி வருங்காலங்களில் கொள்கைப் பயிற்சி வகுப்பு என்பது நம் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமே நடக்கும்.

மக்கள் நலப் போராட்டங்கள் : வெகுமக்களின் நன்மைக்கான களப் போராட்டங்களை நம் கட்சியே நடத்துவது என்றும்; சூழ்நிலைக்கு ஏற்பத் தோழமைக் கட்சிகள் நடத்தும் போராட்டங்களில் நம் கட்சித் தோழர்கள் ஒரு குழுவாகக் கலந்துகொள்வது என்றும் முடிவானது.

சிந்தனையாளன் : நம் கட்சியின் உறுப்பினர் சேர்க்கும் பணி முதல் கட்டம் முடிவடைந்து, உறுப்பினர்களின் மாநாடு முடிந்த பிறகு, நம் கட்சியின் கொள்கை ஏடான சிந்தனையாளனை வெகுமக்கள் ஏடாக ஆக்க மக்களிடம் செல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

இன்றைய நிலை : கடந்த கால ஏற்ற இறக்கங்களை மனதில் கொண்டு, இனிவரும் காலங்களில் நாம் மிகவும் சிறப்பாகச் செயல்பட வேண்டிய, முன் எப்போதும் இல்லாத கட்டாயம் இப்போது அரசியல், சமுதாய, பொருளியல் தளங்களில் உள்ளது. அதே நேரத்தில் முன்பு இல்லாத நல்ல வாய்ப்பு, சூழ்நிலை நமக்கு - நம் தோழர், தோழியர்களுக்கு இப்போது உள்ளது. படிப்பு, பணி, குடும்பப் பொறுப்பு என்பதெல்லாம் முன்பைவிட இப்போது மிகவும் குறைவே. இப்போதும் நாம் செயல்படாவிட்டால் நமக்கு வேறு வாய்ப்புக் கிடைப்பது மிகவும் அய்யமே. நாம் செயல்பட வேண்டிய களங்களை, நம் எதிரிகளே அடையாளம் காட்டி நம்மை அறைகூவி அழைக்கின்றனர்.

நாம் மார்க்சியப் பெரியாரியப் புரிதல் உள்ளவர்கள், தோழர் வே.ஆனைமுத்து அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள், சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள் என்பதை எண்பிக்க இதுவே சரியான நேரம். இன்றுமுதல் நம் கட்சிக் கோட்டையை வலுவாக அமைத்திட நாளும் எண்ணிச் செயல்படுவோம் என்று அன்புடன் அழைக்கிறேன்.

வள்ளுவத்தை நெஞ்சில் நிறுத்தி,
மார்க்சியப் பெரியாரியத்தைக்
கண்களாகக் கொண்டு
மானிட நேயத்தை
நோக்கமாகக் கொண்டு
களம் காண்போம்,
வெற்றி பெறுவோம்.
வணக்கம், நன்றி!

**- சி. பெரியசாமி**
துணைப் பொதுச்செயலாளர்

# "இருப்பனவற்றையெல்லாம் சமரசமின்றி விமர்சனம் செய்" - காரல்மார்க்சு

- பெர்னாட் டி-மெல்லோ

"சமரசமற்ற விமர்சனம்" என்பதே காரல்மார்க்சின் அறிவுநெறிக் கோட்பாடாக இருந்தது. மூலதனம் மற்றும் முதலாளியம் குறித்த அவருடைய தீவிரமான விமர்சனப் பகுப்பாய்வில், அவற்றை நிலைகுலையச் செய்யும் வகையில் சமரசமற்ற விமர்சனக் கோட்பாட்டைக் கையாண்டார். இதன் காரணமாகவே, காரல்மார்க்சு பிறந்து 200 ஆண்டுகளுக்குப் பிறகும், உலக அளவில் செல்வாக்குச் செலுத்துகின்ற அறிவாளர்களுள் ஒருவராகத் திகழ்கிறார்.

காரல் மார்க்சு அவருடைய கருத்துகளையும் சமரசமற்ற விமர்சனத்துக்கு உட்படுத்தி, அவற்றுள் எது உண்மை, எது தவறு என்று தன் நுண்ணறிவாற்றலால் ஆராய்ந்து கொண்டேயிருந்தார். எடுத்துக்காட்டாக, 1853இல் காரல் மார்க்சு, பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் எழுதியவற்றை ஆதாரமாகக் கொண்டு, பிரித்தானியக் காலனிய ஆட்சி தன்னையறியாமலேயே இந்தியாவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாகக் கருதினார். பின்னாளில், 1881இல் நடைமுறை உண்மைகளின் அடிப்படையில் பிரித்தானிய ஆட்சி பழிவாங்குவது போல் இந்தியாவை ஒட்டச் சுரண்டியது என்று எழுதினார். நடைமுறை ஆதாரங்களின் அடிப்படையில் தன் கருத்துகளை உருவாக்குபவராக மார்க்சு எப்போதும் விளங்கினார். அவருடைய எண்ணங்களும் கோட்பாடுகளும் வரலாற்று வழியில் நிகழும் மாற்றங்களுக்கும் புதிய நிலைமைகளுக்கும் முகங்கொடுக்கக் கூடியனவாகவே இருந்தன.

காரல்மார்க்சு தன் இளமைக் காலத்தில், கருத்தியல் கோட்பாட்டாளராக இருந்த போது, ஹெகலையும், லூத்விக் ஃபாயர் பாக்கையும், பிற தத்துவவியலாளர்களையும் விமர்சனம் செய்தார். அவரைச் சுற்றியிருந்த சமூக நடைமுறை வாழ்வில் இருந்த கடுமையான பொருளாயத நிலைமைகளை ஆழ்ந்த கவலையுடன் கூர்ந்து ஆராய்ந்தார். அதன் அடிப்படையில் அவருடைய இயக்கவியல் பொருள் முதல்வாதம், வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாடுகளை உருவாக்கினார். அதன்பின் அவருடைய சிந்தனைக் கோட்பாட்டு அணுகுமுறையில் குறிப்பிடத்தக்கதான மாற்றம் ஏற்படாமல் தொடர்ந்தது. உண்மையில் ஒருவரால் இளம் மார்க்சுக்கும், பின்னைய மார்க்சுக்கும் இடையிலான சிந்தனை வளர்ச்சியின் உறவை உய்த்துணர முடியும். மார்க்சியக் கோட்பாட்டின் உருவாக்கத்தில் செருமானியதத்துவமும் பிரெஞ்சு சோசலிசமும், பிரிட்டனின் அரசியல் பொருளாதாரமும் தாக்கத்தை ஏற்படுத்தின. இறுதிக் காலத்தில் இரஷ்யாவில் எழுச்சி பெற்றிருந்த மக்கள் நலம் சார்ந்த அரசியலும் மார்க்சின் கவனத்தை ஈர்த்தது.

காரல்மார்க்சு "மூலதனம்" நூலில் பொதுவான கருதுகோள் என்பதிலிருந்து குறிப்பிட்ட ஒன்றை ஆராய்ந்து அதன் மெய்ப்பைக் கண்டறிதல் என்கிற ஆய்வுமுறையைக் கையாண்டிருப்பார். இந்த ஆய்வு முறையானது பின்னாளில் அடுத்தடுத்த ஆய்வுகள் மூலம் மேலும் மேலும் மெய்மைக்கு மிக நெருக்கமாகச் செல்லுதல் (Successive approximations) என்று அழைக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டமாக நகரும் இந்த ஆய்வு முறையானது பொதுவான கருதுகோள் என்பதிலிருந்து ஒரு திட்டவட்டமான மெய்மையைக் கண்டறிகிறது. இந்தப் பகுப்பாய்வின் ஒவ்வொரு படிநிலையிலும் பொதுவான கருதுகோள் கைவிடப்படுகிறது. அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு ஆய்வும் இயற்கையில் அல்லது சமூகத்தில் காணப்படும் மெய்ம்மையை அல்லது நிகழ்வை விளக்குவதற்கான கோட்பாடு உருவாக்கத்தை உந்திச் செலுத்துகிறது. இத்தகைய பகுப்பாய்வு, நடைமுறை வாழ்வில் முதன்மையான கூறுகளைக் கண்டறிந்து, அவற்றை மேலும் தீவிர ஆய்வுக்கு உட்படுத்த உதவுகிறது. எடுத்துக்காட்டாக, இந்த முறையில் காரல்மார்க்சு மூலதனம் முதல் பாகம் நூலில் மூலதனத்துக்கும் கூலி உழைப்புக்குமான உறவை ஆராய்ந்திருக்கிறார். முதன்மையானது என்னவெனில், மார்க்சின் ஆய்வு முறையின் அச்சாணியாக இருப்பது, அது வரலாற்று ரீதியானதாக இருப்பதே ஆகும்.

ஒரு குறிப்பிட்ட-திட்டவட்டமான சமுதாய உறவு நிலவும் சமுதாயத்தில், மாற்றத்திற்கான நடைமுறை மனிதர்களின் செயல்பாடுகளால் உண்டாக்கப்படுகிறது. கடந்த காலத்திலிருந்து பெறப்பட்ட சமுதாயத்தின் சூழ்நிலையின் வரம்புகளுடனேயே சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். வரலாற்று ரீதியில் முதலாளியம் எவ்வாறு உருவானது என்பதை ஆராய்ந்தறியாமல், முதலாளியம் என்பது தனியான ஒன்றாக இருக்க முடியாது. மேற்கு அய்ரோப்பாவில் முதலாளியம் குறித்த மார்க்சின் மூலக்கருவாக இருப்பது, முதலாளியம் எவ்வாறு உருவானது, தற்போது எவ்வாறு அது செயல்படு கிறது, அதன் எதிர்காலம் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றியதாகும்.

சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற சக்திகளுக்கும் மாற்றத்தை எதிர்க்கின்ற-தற்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும் என்கிற சக்திகளுக்கும் இடையில் எப்போதும் பதற்றமான முரண்பாடு நிலவுகிறது. இந்த இரண்டு சக்திகளுமே வரலாற்று ரீதியில் சமூகத்தில் உருவானவைகளாகும். இதுவே போராட்டமும் அய்க்கியமும் எனப்படுகிறது. இந்தப் போராட்டம் முற்றி, மாற்றத்துக்கான சக்திகள் வெற்றி பெறும் போது, சமூகத்தில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றங்கள் நிகழ்கின்றன. காரல்மார்க்சு 1860களில் மூலதனம், முதலாளியம் குறித்து செய்த விமர்சனப்பகுப்பாய்வுகள் இன்றும் புரட்சிகரமான வைகளாக நீடிக்கின்றன. ஆயினும் அதன்பிறகு சமூகத்திலும் பொருளாதாரத்திலும் பெருமளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தொடர்ந்து மீளாய்வு செய்வதன் மூலம் மேம்படுத்தல் என்று காரல் மார்க்சு கையாண்ட ஆய்வு முறையை நாம் பின்பற்ற வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. வறட்டுச் சூத்திரமாக மார்க்சு தன்னுடைய கோட்பாட்டை வகுக்கவில்லை. மாறுகின்ற வாழ்நிலைக்கு முகங்கொடுத்து மறுஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்பதே அவருடைய கோட்பாட்டின் உட்கிடக்கை ஆகும். எனவே மார்க்சியக் கோட்பாட்டை மேலும் செழுமைப்படுத்துவதற்காக, மார்க்சியக்

கண்ணோட்டத்துடன் மார்க்சியத்தை நாம் விமர்சனம் செய்ய வேண்டும் என்பதே மார்க்சின் எதிர்பார்ப்பாகும்.

**மூலதனம் முதல் பாகம் வெளியிடப்பட்டு 150 ஆண்டு களாகிவிட்டன. அதன்பின் குறிப்பிடத்தக்க வகையில் மாற் றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் மார்க்சு உருவாக்கிய கோட்பாடுகளில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய தேவை உள்ளது. முதலாளியம் உண்மையில் இப்போது உலகளாவிய நிலையில் செயல்படுகிறது. உலக முதலாளிய அமைப்பில் வளர்ச்சி பெற்ற நாடுகள் அதன் மய்யப் பகுதியாக உள்ளன. விளிம்பு நிலை நாடுகளும், மய்யத் திற்கும் விளிம்புக்கும் இடையில் உள்ள நாடுகளும் பொரு ளாதாரம், அரசியல், இராணுவம் ஆகியவற்றில் வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளுக்குப் பணிந்து நடக்கும் நிலையிலேயே இருக்கின்றது. விளிம்பு நிலை நாடுகளிலும், இடைநிலை நாடுகளிலும் மூலதனத்தின் சுரண்டல் மிக அதிக அளவில் இருக்கிறது. முதலாளிய உற்பத்தி முறையின் உபரியில் பெரும்பகுதியை ஆளும் வர்க்கத்தினரும் படித்த மேட்டுக்குடியினருமே பெறுகின்றனர். இந்தச் சுரண்டல் அமைப்பின் அச்சாணியாக இவர்கள் இருக்கின்றனர்.**

வளர்ச்சி பெற்ற மய்ய நாடுகளில் ஏற்படும் பொருளா தாரத் தேக்கம் (பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைதல், வேலையின்மை அதிகரித்தல் அல்லது ஊதியம் குறைதல்), பெருமளவிலான வணிகத்தையும் தொழிலையும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் உலக அளவில் பரவுதல், மூலதனக் குவிப்பு நடவடிக்கை என்பது வெறும் பணத்தின் குவிப்பாக மாறுதல் ஆகிய வற்றின் காரணமாக பெரிய, கிட்டத்தட்ட இறையாண்மை கொண்டது போன்ற நிதி நிறுவனங்கள் உலக அளவில் உண்மையான பொருளாதாரத்தையும், நாடுகளின் நிறுவனங் களையும் மேலாதிக்கம் செய்யும் வல்லமையைப் பெறுகின்றன. இவ்வாறான நிதி நிறுவனங்களின் மேலடுக்கானது உண்மையில் உலகப் பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்கிறது. நிதி பங்குச் சந்தையின் ஊகங்களை இவைகளே உருவாக்குகின்றன. இவற்றின் வருவாயை மேலும் இலாபம் தரக்கூடிய வகையில் முதலீடு செய்ய முடியாத நிலையில், ஊக விளையாட்டான பங்குச் சந்தை போன்றவற்றில் முதலீடு செய்கின்றன.

அதேசமயம், உலகின் உண்மையான பொருளாதார நடவடிக்கையில், விளிம்பு நிலை மற்றும் இடைநிலை நாடுகளிலிருந்து தொழிலாளர்கள் வளர்ச்சி பெற்ற நாடு களுக்குச் செல்வதற்குக் கடுமையான தடைகள் விதிக்கப் படுகின்றன. ஆனால் பன்னாட்டு நிறுவனங்களின் மூலதனம், ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இருந்துகொண்டு விளிம்பு நிலை - இடைநிலை நாடுகளின் தொழில்களுடன் கூட்டு வைத்துக் கொண்டு, அவற்றில் பணிபுரியும் தொழிலாளர் களின் உழைப்பை மலிவான கூலியில் சுரண்டி கொள்ளை இலாபம் ஈட்டுகிறது. உலக அளவில் நுகர்வோரை மய்யப் படுத்தி இயங்கும் பன்னாட்டு நிறுவனங்களின் சங்கிலிப் பிணைப்பில் உழவர்களும் சிக்கிக் கொண்டுள்ளனர். உழவர்களால் சந்தையில் எத்தகைய செல்வாக்கும் செலுத்த முடியாது என்ற நிலையைப் பயன்படுத்தி, உழவர்களைப் பலவகையிலும் மூலதனத்துக்கு அடிபணியச் செய்து பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டுகின்றன.

தற்போது மூலதனத்தின் செயல்பாடும், மூலதனம் மற்றும் முதலாளியம் குறித்த விமர்சனப் பகுப்பாய்வும், காரல்மார்க்சின் மூலதனம் முதல், இரண்டாம், மூன்றாம் பாகங்களில் கூறப்பட்டுள்ளதிலிருந்து வேறுபட்டதாக இருக் கின்றன. இவை பற்றி விரிவாக எழுத இடமில்லாத காரணத் தால், மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய கூறுகள் பட்டியலாகத் தரப்படுகிறது:

உலக அளவில் வர்க்கங்கள் பற்றிய ஆய்வு; தொழிலாளர் சக்தியின் மதிப்பு மற்றும் மய்ய, இடைநிலை, விளிம்பு நாடுகளில் தொழிலாளர்களின் கூலியில் உள்ள பெரிய வேறுபாடுகள்; ஏகாதிபத்தியக் கட்டமைப்பு கொண்ட சந்தையில் உபரிமதிப்புப் பங்கிடப்படல் அடிப்படையிலான மதிப்புக் கோட்பாடு, ஏழை உழவர்களும் சிறு உற்பத்தியா ளர்களும் மூலதனத்தால் சுரண்டப்படல்; சரக்கை மறு உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்ட கூலி தரப்படாத வீட்டு வேலை உழைப்பு, பாட்டாளி வர்க்கமாக்குவதால் பெரும் பான்மையினரை அதிகாரமற்ற நிலைக்குத் தள்ளுதல், குறைந்த கட்டணத் தொகை செலுத்தி இயற்கை வளங் களைக் கைப்பற்றல், இயற்கை நீடித்து நிலைத்திருக்க இயலாத வகையில் அதைச் சுரண்டுவதும் உற்பத்தியின் கழிவுகள் - நுகர்வின் கழிகளை இயற்கை மீது குவிப்பதும்; சூழலியல் ஏகாதிபத்தியம்; நிதி சார்ந்ததாக்குவது, நிதியியல் மேல் கட்டுமானம் மற்றும் 'உண்மையான' பொருளாதாரத் துடன் அதற்குள்ள உறவும் அதன்மீது ஏற்படுத்தும் தாக்கமும்; மூலதனக் குவிப்புக் கோட்பாடு - அது மூலதனப் பொருள்கள் நிதி மூலதனம் ஆகிய இரண்டையும் கணக்கில் கொள்வதுடன், அவற்றின் இடையுறவையும் கருத்தில் கொள்வதாயிருத்தல்; மூலதனத்தின் மீது அரசியல் அதிகாரம் செலுத்தக் கூடிய அரசு என்பதன் நிலை; குடிமை அரசு; இராணுவ மயமாக்கலும் ஏகாதிபத்தியமும்; முதன்மையான முரண்பாடும் மிக முதன்மையான முரண்பாடும்; சோசலிச சமுதாயப் புரட்சி.

**மார்க்சு பிறந்து இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு, மார்க்சின் சிந்தனை முறையை, ஆய்வு முறையை-அதாவது இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாத அடிப்படையில் இந்த உலகிற்கு மறு விளக்கம் செய்ய வேண்டி யது நம்முன் உள்ள சவாலாகும். இந்த நடைமுறையில் நாம் பெற்றுள்ள பழைய விளக்கங்கள் குறித்தும் திறனாய்வு செய்ய வேண்டும்.**

**வரலாறு நெடுகிலும் பொருளாதார அடித்தளமே தீர்மானிக்கும் ஆற்றலாக இருந்து வந்துள்ளது என்கிற வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாட்டை எந்திரத்தன மாகப் பின்பற்றும் போக்கைக் கைவிடுவதற்கான உரிய நேரம் இது. இந்த உலக உருண்டையில், மனித இனம் வாழ்கின்ற வரையில் வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாடு பொருந்தும் என்கிற கூற்று ஏற்க முடியாததாகும்.**

**இந்த உலகம் குறித்து மறு விளக்கம் செய்வதும், சோசலிச சமூகப் புரட்சி மூலம் மாற்றியமைப்பதும் நம்முன் உள்ள பெரும் அறைகூவலாகும். இதை எதிர்கொண்டு, உடனடியாக செய்து முடிக்க வேண்டியது நம் கடமையாகும். ஏனெனில் மூலதனமும் முதலாளியமும் எந்த எதிர்ப்பும் இல் லாமல் தன் போக்கிலேயே போனால் மனித சமுதாயத்துக்கு மற்றொரு 200 ஆண்டுகள் கிடைக்காமல் போகக்கூடும்.**

(நன்றி : எக்கனாமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி, 2018 மே 5. தமிழாக்கம் : க. முகிலன்)

# "நுழைபுலம்" போட்டித் தேர்வு பயிற்சி மையம் தொடக்கவிழா



நுழைபுலம் என்னும் பெயருடன் போட்டித்தேர்வு மற்றும் திறனூக்கப் பயிற்சி மய்யத்தின் தொடக்கவிழா, சென்னை மாடம்பாக்கம் பத்மாவதி நகரில், 2018 சூன் 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல், மய்யத்தின் நிறுவுநரும் இயக்குநருமான ஏ.இரமேஷ் தலைமையில் நடைபெற்றது. அவர்தம் உரையில் இந்தியப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தம்முடைய தன்னலம் கருதாத் தொண்டின் மூலம் இடஒதுக்கீடு பெற்றுத்தந்த அய்யா வே.ஆனைமுத்து அவர்களுக்கு நன்றி பாராட்டும் நிகழ்வாக அவரை இங்கு அழைத்திருக்கிறோம். நுண்ணறிவும் விழிப்புணர்வும் மிக்க இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் எளிதில் வெற்றி பெற நுழைபுலம் வழிகாட்டும் என்று கூறினார். இந்திய வருவாய்ப் பணி அலுவலர் சங்கர் கணேஷ் தம் உரையில் வாசிப்பது, எழுதுவது, பேசுவது இம்மூன்றும் திறன்கள். போட்டித் தேர்வுக்கு மட்டுமல்ல அதற்குப் பிந்திய காலப் பணிக்கும் வாழ்க்கைக்கும் இம் மூன்றும் முக்கியம் என்று கூறினார். இந்தியக் காவல் பணி அலுவலர் கா.சிவசுப்பிர மணி தம் உரையில் ஒடிசா மாநிலத்தில் பணியாற்றும் நான் இன்று இங்கு வந்தது சமுகநலன் கருதியே. இ.ஆ.ப., இ.கா.ப., ஆகிய பதவிகள் பெறுவது அதிகாரம் செலுத்து வதற்காக அல்ல; மக்களுக்குப் பணி செய்வதற்குக் கிடைத்த வாய்ப்பு. முதல்நிலைப் பதவி பெறக் குடிமைப்பணிகள் தேர்வு எழுதும் நம் இளைஞர்கள் அது கிடைக்காதபோது கூடவே இரண்டாம் நிலைப் பதவிகளைப் பெறும் நோக்கில் பணியாளர் தேர்வு ஆணையம், இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் இன்னும் இதுபோன்ற மய்ய அரசின் பணிகளுக்கான தேர்வுகளை எழுத வேண்டும். இரண்டாம் நிலைப் பதவி பெற்றுப்பின் பதவி உயர்வில் முதல்நிலைப் பதவிகளைப் பெற முயற்சிக்க வேண்டும் என்று கூறினார். நிகழ்ச்சியில் வணிகவரி உதவி ஆணையர் சுந்தரராசன், போட்டித்தேர்வு ஆலோசகர் வசந்தகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சங்கர் பாண்டியன் நன்றி கூறினார்.

# முற்போக்கு சமூக நீதிப் பேரவை நடத்திய வி.பி.சிங் பிறந்தநாள் விழா!



காஞ்சிபுரம் பாலாறு அருகே உள்ள அப்துல்லாபுரம் ரிஸ்க் உரையரங்கில் கடந்த 24.6.2018 ஞாயிறு மாலை முற்போக்கு சமூக நீதிப் பேரவை சார்பாக மேனாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

விழாவுக்குப் பேரவைத் தலைவர் க.கோதண்டன் தலைமை வகித்தார். மாணவர்கள் பங்கேற்கும் பேச்சுப் போட்டி வழக்கம்போல இடம் பெற்றிருந்தது. தமிழ்நாட்டில் சமூக நீதிக்கான முன்னெடுப்புகள், மண்டல்குழு பரிந்து ரைகளும் அறிஞர் வே.ஆனைமுத்துவின் அயராத உழைப்பும் என்கிற தலைப்புகளில் மாணவர்கள் உரை யாற்றக் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர். புஞ்சை. பூ.வில்லவன் மற்றும் முத்து.அருணன் நடுவர்களாக அமர்ந்து பேச்சுப் போட்டியை நடத்தினர்.

காஞ்சிபுரம் பி.டி.வி.எஸ். பள்ளி மாணவர் சு.கார்த்திகேயன் (9-ஆம் வகுப்பு) முதல் பரிசாக ஆயிரம் ரூபாயும், வெம் பாக்கம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி கே.ஆனந்தி (9-ஆம் வகுப்பு) இரண்டாம் பரிசாக ஐந்நூறு ரூபாயும் பெற்றனர்.

காஞ்சிபுரம் திராவிடர்க்கழக மாவட்டச் செயலாளர் டி.ஏ.ஜி.அசோகன் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி வி.பி.சிங் அவர்களின் தன்னம்பிக்கையை நினைவு கூர்ந்தார். பேரவை நிறுவனர் டாக்டர் விமுனா மூர்த்தி சமத்துவபுரம், கிராமப்புற இடஒதுக்கீடு, மண்டல் பரிந்துரைக் கான வே.ஆனைமுத்துவின் பயணங்கள் குறித்து தன் நிறைவுரையில் குறிப்பிட்டார்.

கவிஞர். தங்கப்பனின் எழுச்சிப் பாடலுடனும், பொன்மதி க.முருகன் வரவேற்புரையுடனும் தொடங்கிய விழா கவிஞர் வ.வெங்கடேசன் நன்றியுரைடனும் நிறைவுற்றது.

திருவள்ளுவர் அறக்கட்டளை ஆட்சிப் பொறுப்பாளர் தமிழ்முகிலன், திருக்குறள் பேரவை குறள் அமிழ்தன், ஆசிரியர் இல.முனுசாமி, பூ.கா.பொன்னப்பன், ப.வேலாயுதம், சி.ஏழுமலை மற்றும் இரா.சாடையன் வாழ்த்துரை வழங்கினர்.

- செய்தி : **ஜீவா ரவிச்சந்திரன்**
திம்மராசன்பேட்டை

## கன்னியாகுமரியில் நல்லிணக்கக் கலந்துரையாடல்



கன்னியாகுமரியில் கோவளம் சாலை அமைதி இல்லத்தில் பல்வேறு சமுதாய மற்றும் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சமுதாய நல்லிணக்கம் தேவை - வருங்கால செயல்பாடு பற்றி கலந்துரையாடினர். இந்த நிகழ்ச்சியிலும் இதே முகவரியில் மாலையில் சிறப்புக் கூட்டமும் நடைபெற்றது.

கொடிக்கால் ஷேக் அப்துல்லா பொறுப்பேற்று நடத்திய துடன் மாலையில் ஈகைப் பெருவிழா விருந்தும் அளித்தார்.

இவ்விரு நிகழ்ச்சிகளிலும் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி கலந்துகொண்டு உரையாடினார்.

## கல்லிடைக்குறிச்சியில் 'சமய நல்லிணக்கம்' - ஒரு சந்திப்பு



கன்னியாகுமரியில் கோவளம் சாலை அமைதி இல்லத்தில் பல்வேறு சமுதாய மற்றும் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சமுதாய நல்லிணக்கம் தேவை - வருங்கால செயல்பாடு பற்றி கலந்துரையாடினர். இந்த நிகழ்ச்சியிலும் இதே முகவரியில் மாலையில் சிறப்புக் கூட்டமும் நடைபெற்றது.

கொடிக்கால் ஷேக் அப்துல்லா பொறுப்பேற்று நடத்திய துடன் மாலையில் ஈகைப் பெருவிழா விருந்தும் அளித்தார்.

இவ்விரு நிகழ்ச்சிகளிலும் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி கலந்துகொண்டு உரையாடினார்.

## ஒன்றேனும் செய்

அந்தோ அவலம் மிகப்பெரும் அவலம்
இந்தக் கொடுமை எங்கே உண்டு
இராசிவ் காந்தி இறப்பு வழக்கு
மோசடி யாக முடிவின்றி நீள்வதோ?
உலக உத்தமர் காந்தியின் உயிரைப்
பறித்தவர் பெற்ற பாவ மன்னிப்பு
ஏழு பேர்க்கு இல்லாமற் போவதேன்?
தமிழராய் இருப்பதே தகுதி இழப்பா?

முருகன் சாந்தன் பேரறி வாளனுடன்
மற்றவர் சிறையில் மடிந்தே போவதா?
நடுவில் அமையும் எந்தநாய் அரசும்
கொடுங்கரத் தோடே தமிழனைக் கொல்லும்
அமைதிப்படை என்ற அழிவுப் படையால்
எமதினம் அழித்தவர் இராசிவ் காந்தி
பாழும் அந்தப் படுகொலைக் காக
ஈழமே சிதைந்து இடுகா டானது

ஆனாலும் மறப்போம் மன்னிப்போம் என்று
சோனியா இராகுல் சொல்லி விட்டனர்
இதற்குப் பின்பும் இந்திய வன்மம்
குதறி எடுக்கும் எந்தமிழ்க் குலத்தை!
அகவை மூத்த எம்தாய் அற்புதம்
உகுத்திடும் கண்ணீர் உயிரையே பிசையும்
தப்பான ஒப்புதல் வாக்குமூலம் பற்றிக்
காவல் அதிகாரி தியாக ராசன்

நீதி நாயகம் தாமஸ் மொழிகள்
திருட்டு தில்லியின் செவிட்டுக் காதில்
ஏறாது என்றால் என்ன இதன்பொருள்?
எடுபிடி வேலையில் எந்நேரம் இருக்கும்
எடப்பாடி அரசே செயலில் இறங்கு!
ஆளுநர் வழியே அரசியல் சட்ட
உறுப்பு நூற்று அறுபத்து ஒன்றால்
உடனே இவரை விடுதலை செய்யலாம்

செருப்படி தில்லிக்கு வீழும் செயல்போல்
உருப்படி யாய்இது ஒன்றேனும் செய்கவே!

- **தமிழேந்தி**

# கொள்கை மறவர் ஏ.டி.பன்னீர்செல்வம்

மரு.க. சோமாஸ்கந்தன்

இன்று அரசியலும், பொது வாழ்க்கையும், நேர் மையும் ஒழுக்கமும் இன்றி யாவரும் வெறுத்து ஒதுக்கும் நிலைக்குக் கேடுற்ற நிலையை அடைந்துள்ளது

அந்நாளில் நெஞ்சுரமும், நேர்மைத் திறமும் கொண்டு கொள்கைக் குன்றாய் நின்று தூய அரசியலுக்குச் சொந்தக்காரராய் விளங்கிய திராவிட இயக்க முன்னோடி சர். ஏ.டி.பன்னீர்செல்வத்தின் களங்கமில்லா பொது வாழ்க்கைப் பயண வரலாறிது.

நாடும் ஏடும் போற்றிய அந்த மாமனிதர் திருவாரூ ருக்கு அருகிலுள்ள செல்வபுரத்தில் 01-06-1888 அன்று பிறந்தார். தஞ்சையில் தொடக்கக் கல்வி கற்றார்.பின்னர் திருச்சி புனித வளனார் உயர் நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் பட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

கல்லூரியில் பட்டம் பெற்றதும், சட்டம் பயில விரும்பி இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். சட்டம் பயின்றதோடு ஆங்கிலேயர் போன்றே ஆடை அணியும் வழக்கத்தையும் மேற் கொண்டார். பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து,சிலகாலம் சென்னையில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார் சில காலம் கழித்து தஞ்சைக்கே வந்து வழக்கறிஞராகப் பணியைத் தொடர்ந்தார். திருச்சியில் கல்லூரி மாண வராக இருந்தபோதே பொன்னு பாப்பாள் என்பவரை திருமணம் செய்துகொண்டார்.வழக்கறிஞர் தொழிலைச் செல்வம் குவிக்கும் தொழிலாகக் கருதாமல் நேர்மையாகத் தொழில் புரிந்து ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுமாறு நடந்து கொண்டார். பல இளைஞர் மன்றங்களோடு இணைந்து சாதி, மத வேறுபாடு களின்றி அனைவரின் நலத்திற்காகவும் பொதுப் பணி யாற்றினார்.

**நீதிக்கட்சியில்**

சென்னையில் 1916 நவம்பர் திங்கள் 20 ஆம் நாள் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டது.அன்றே பார்ப்பனரல்லாதார் கொள்கைப் பிரகடனம் வெளியாயிற்று. அந்தப் பார்ப்பனரல்லாதார் கொள்கைப் பிரகடனம், பார்ப்பனர் ஆதிக்கம் செழித்திருந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.டி.பன்னீர்செல்வத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை. அந்த ஆண்டின் இறுதியில் நீதிக்கட்சியில் இணைந்து செயல்பட்டார்.

கரந்தை தமிழ்ச்சங்கத்தை உருவாக்கிய த.வே.உமா மகேசுவரம் பிள்ளை, பட்டுக்கோட்டை வேணுகோபால் நாயுடு, நெடும்பலம் ஆர்.சாமியப்ப முதலியார், அய்.குமார சாமிப் பிள்ளை, நாகை வி.பி.பி.காயாரோகணம் பிள்ளை, கும்பகோணம் கந்தசாமி மூப்பனார் ஆகிய தன் தோழர்களையும் நீதிக்கட்சியில் இணைத்து அவ்வியக் கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். இயக்கத்தின் தஞ்சை மாவட்டத் தலைவராகப் பொறுப்பேற்றார்.



மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் குறித்து இந்தியத் தலைவர்கள் கருத்தறிய மாண்டேகு சென்னை வந்தார் அவரைப் பல கட்சியினரும் சென்று சந்தித்தனர் நீதிக்கட்சியின் சார்பில் திரு.பி.இராஜரெத்தின முதலியார் மாண்டேகுவைச் சந்தித்து, எந்தச் சீர்திருத்தமும், பிராமணரல்லாத மக்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதாயிருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தலைவர் டி.எம். நாயர் தலைமையில் ஒரு குழு இங்கிலாந்து சென்று அந்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் பத்திரிக்கையாளர்களிடமும் நீதிக்கட்சியின் கொள்கைகளுக்கு வலு சேர்க்க ஆதரவு திரட்டினர்.

ஆனால் நீதிக்கட்சியின் கோரிக்கையான வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்கப்படவில்லை. மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தைச் செயல்படுத்த சௌத்பரோ தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் வகுப்புவாரி பிரதிநிதித்து வத்திற்கு எதிரான இருவர் இடம் பெற்றிருந்தனர், அவர்கள் சென்னையைச் சேர்ந்த வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியும், வங்காளத்தைச் சேர்ந்த சுரேந்திரநாத் பானர்ஜியும் ஆவர். இவ்விருவரின் நியமனத்தை நீதிக்கட்சி வன்மையாகக் கண்டித்தது.; நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்துமாறு அறிவித்தது. கட்சியின் கட்டளையை சிரமேற்கொண்டு, 06-10-1918 அன்று தஞ்சையில் கந்தப்பச் செட்டியார் சத்திரத்தில் சிறப்பாகக் கண்டனக் கூட்டத்தை பன்னீர்செல்வம் நடத்தித் தலைவர்கள் பாராட்டைப் பெற்றார். 1918ஆம் ஆண்டின் இறுதியில் தஞ்சையில் கட்சியின் மாநாட்டைச் சிறப்புற நடத்தித் தலைவர்களின் கவனத்தைக் கவர்ந்தார்

**தஞ்சை நகராட்சித் தலைவர்-கல்விப்பணி**

1918 ஆம் ஆண்டில் நடைபெற்ற தஞ்சை நகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற பன்னீர்செல்வம் தஞ்சை நகராட்சி

மன்றத் தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டார்; 1920 ஆம் ஆண்டு வரை சிறப்பான நிர்வாகத்தைக் கொடுத்தார். மாவட்டக் கல்விக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 40 பள்ளிகளே செயல்பட்டுக் கொண்டிருந்த தஞ்சை மாவட்டத்தில் பள்ளிகள் எண்ணிக்கையை 170 ஆகப் பன்னீர் செல்வம் உயர்த்தி பார்ப்பனரல்லாத குழந்தைகள் பள்ளிக்கல்வியைப் பெற வழிவகை செய்தார். பள்ளிகளே இல்லாத முத்துப்பேட்டை, கூத்தா நல்லூர் போன்ற இடங்களில் நடுநிலைப்பள்ளிகளைத் தோற்றுவித்தார், திருவாரூர், பாபநாசம் பள்ளிகளை மாவட்டக்கழகத்துடன் இணைத்து அப்பள்ளிகளின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார். தஞ்சையில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்கிப்படிப்பதற்கு வசதியாக மாணவர் விடுதியைக் கட்டுவித்தார்.

**ஜில்லாபோர்டு தலைவர்-பணிகள்**

1924 ஆம் ஆண்டு ஜில்லாபோர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1930ஆம் ஆண்டு வரை சிறப்பாகப் பணியாற்றினார் பன்னீர்செல்வம். மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஒரத்த நாடு, இராசாமடம் போன்ற பகுதிகளில் வழிப்போக்கர்கள் தங்கி, சாப்பிட்டுச் செல்ல அன்னச் சத்திரங்கள் கட்டி அதற்கான நிதியும் வழங்கியிருந்தனர். பின்னர் அச் சத்திரங்கள் அனைத்தும் ஜில்லாபோர்டின் நிர்வாகத்தின் கீழ் செயல்படத் தொடங்கின.

ஜில்லா போர்டின் தலைவராக வி.கே.இராமானு ஜாச்சாரி இருந்த காலத்தில் அந்தச் சத்திரங்களில் பார்ப்பனக் குழந்தைகள் தங்கிக் கல்வியும் உணவும் பெற்றுவந்தனர்.பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு அங்கு இடமளிக்கவில்லை.

தஞ்சை ஜில்லாபோர்டு தலைவராக சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் பதவி யேற்ற பின், பார்ப்பனர்களின் ஆதிக்கத் திலிருந்து சத்திரங்களை மீட்டு எல்லோருக்கும் உணவு வழங்கவும், கல்விகற்கவும் ஏற்பாடு செய்தார். திருவை யாறில் இருந்த சமஸ்கிருதக் கல்லூரியில் பார்ப்பன மாணவர்களைத் தவிர மற்ற மாணவர்களைக் கல்வி கற்க அனுமதிப்பதில்லை.அந்தக் கல்லூரியை அரசர் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்து பார்ப்ப னரல்லாத மாணவர்கள் தமிழில் கல்வி கற்கும்படிச் செய்தார். கரந்தை உமா மகேசுவரம்பிள்ளையும் பன்னீர்செல்வத்துக்குத் துணையாக நின்றார். சமஸ்கிருதக் கல்லூரியில் இன்று தமிழ் கற்பிக்கப்படுவதற்கு இவர்கள் இருவருமே காரணம். சர்.ஏ.டி.பன்னீர் செல்வத்தின் சமுதாயப் புரட்சிக்கு எதிராக பார்ப்பனர்கள் குரல்கொடுத்தபோது, தந்தை பெரியார் பன்னீர்செல்வம் அவர்களை ஆதரித்துத் துணை நின்றார்.

பார்ப்பனர்களும், அவர்களின் பத்திரிக்கைகளும் ஏ.டி.பன்னீர்செல் வத்திற்கு எதிரான பரப்புரைகள் செய்து கொண்டிருந்த வேளையில் தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல் வந்தது. பன்னீர்செல்வத்தைத் தேர்தலில் தோற்கடிக்க பல்வேறு வியூகங்களை அமைத்துப் போராடினர் எதிரணியினர்.

எதிரிகள் இந்தத் தேர்தலைத் தடை செய்யுமாறு அமைச்சரிடம் கோரினர்.அமைச்சர் மறுத்துவிட்டார். பின்னர் தேர்தலுக்கு முதல் நாள் முனிசீப் கோர்ட்டில் தடை ஆணை கேட்டார்கள். அந்த முனிசீப் முதல் நாள் வழக்கை விசாரித்துவிட்டு தேர்தல் தினத்தன்று 11 மணிக்குத் தீர்ப்புக் கூறுவதாகச் சொல்லிவிட்டார். தேர்தலுக்கு எல்லா உறுப்பினரும் வந்துவிட்டனர். இறுதியாக 11மணிக்கு முனிசீப் தடை ஆணை தர முடியாது; தேர்தல் நடத்தலாம் என்று தீர்ப்பளித்தார்.

இதோடு விட்டார்களா?இல்லை.12 மணிக்கு ஜில்லா ஜட்சிடம் அப்பீல் செய்தார்கள். ஜில்லா ஜட்ஜு 1 மணிவரை வழக்கினை விசாரித்துக் கடைசியாக அப்பீலை செலவுடன் தள்ளிவிட்டார். பின் 2மணிக்குத் தேர்தல் தொடங்கியது.

பன்னீர்செல்வம் பெயரை முன்மொழிந்தனர். உடனே ஒரு முகமது கனவானைவிட்டு, சட்டப்படி பன்னீர்செல்வம் போட்டியிடுவது ஒழுங்கல்ல என்று ஆட்சேபனை சொல்லச் செய்தார்கள்.தேர்தலுக்குத் தலைமைவகித்த துணைத் தலைவர் அவ்வாட்சேபனையைப் புறந்தள்ளி விட்டார்.

எதிரிகள் மருதவாணம் பிள்ளையைப் போட்டியாளராக முன்மொழிந்தனர்.

தேர்தல் முடிந்து வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது, மருதவாணம் பிள்ளை 10 வாக்குகள் பெற்றார்.பன்னீர் செல்வம் 27 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் என்று முடிவு அறிவிக்கப்பட்டதும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு அளவில்லை.

தஞ்சை ஜில்லாபோர்டில் எல்லா நிலைகளிலும் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்திவந்தனர். பன்னீர்செல்வம் தலைவராக ஆனபின்னர் அவர்களது ஆதிக்கம் சிதைந்தது.

ஜில்லாபோர்டில் அலுவலர்கள் 100க்கு 90 பேர் பார்ப்பனரல்லாதாராக ஆகும் வரையில், பார்ப்பனருக்கு உத்தியோகம் கொடுக்கக் கூடாது என்று ஒரு தீர்மானம் பட்டுக்கோட்டை ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடு அவர்களால் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருந்தது அதனாலேயே அவாள் அவர்மீது கடுங்கோபம் கொண்டிருந்தனர். பன்னீர் செல்வத்திற்கு அதனாலேயே பல இடர்ப்பாடுகளையும், சங்கடங்களையும் செய்து வந்தனர். இருந்தபோதிலும், பன்னீர்செல்வம் அவாளிடத்தில் பெருந்தன்மையுடனே நடந்து கொண்டார். வேணுகோபால் தீர்மானம் இருந்த போதிலும் பன்னீர் செல்வம், பார்ப்பனருக்கு உத்தியோகம் தருவதில் எந்தக்குறையும் வைக்கவில்லை. எடுத்துக்காட்டாக, பார்ப்பனரல் லாதாரை விரோதியாகவே பார்த்தவர், நடத்தியவர் ஸ்ரீமான் சூரிய நாராயண ஐயர். அவருடைய மூன்று பிள்ளை களுக்கும் பன்னீர்செல்வம் ஜில்லாபோர்டில் உத்தியோகம் கொடுத்திருக் கிறார் என்றால் அவர் இதேபோன்று துவேஷ மின்றி தகுதியுள்ள பார்ப்பனர்கள் எத்தனை பேருக்கு உத்தியோகம் கொடுத்திருப்பார் என்று எண்ணிப் பாருங்கள்!

பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிய பன்னீர் செல்வம், பார்ப்பனரல்லாத மக்களிடையே இருந்த சாதியத் தையும், தீண்டாமைக் கொடுமையையும் வெகுவாக எதிர்த்து சமத்துவத்தையும், சுயமரியாதையையும் நிலை நாட்டிப் புகழ் கொண்டார்.

தஞ்சை ஜில்லா போர்டு தலைவராகப் பன்னீர் செல்வம் இருந்தபோது, பட்டுக்கோட்டை வட்டக் கழகத் திற்கு தாழ்த்தப்பட்ட

சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை உறுப்பினராக நியமனம் செய்தார். பட்டுக்கோட்டை வட்டக் கழகத்திற்குத் தலைவராக யிருந்த வி.நாடிமுத்துப் பிள்ளை, அந்த நியமனத்தை ஏற்க மறுத்தார்.அதற்கு அவர் சொன்ன காரணம் சாதி ஆதிக்கத் தீண்டாமையின் வெளிப்பாடாக அமைந்திருந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரை வட்டக்கழக உறுப்பினராக நியமனம் செய்து மற்றவர்களுடன் சரிசமமாக அமர வைக்கமுடியாது என்றார். எனவே, அவரது நியமனத்தை ரத்து செய்ய வேண்டும், என்றார். பன்னீர்செல்வம், தன்னுடைய நியமன ஆணையை மாற்றமுடியாது என்பதில் உறுதியாக இருந்தார். இந்த விஷயம் முதல்வர் டாக்டர் சுப்பராயன் கவனத்திற்கு வந்தது. அவர்,ஜில்லா போர்டால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் நியமனத்தை பட்டுக் கோட்டை வட்டக் கழகம் ஏற்றுக் கொள்ளவேண் டும். மறுத்தால் பட்டுக்கோட்டை வட்டக் கழகம் கலைக்கப்படும், என்று எச்சரித்தார்.அதனால் நாடிமுத்துப் பிள்ளை, பன்னீர்செல்வம் நியமித்த உறுப்பினரை ஏற்க வேண்டியதாயிற்று.

சனாதனவாதிகளின் ஆதிக்கத்தையும், அவர்களுக்கு அடிபணிந்து கிடந்த பார்ப்பனரல்லாத மேல்சாதியினரின் ஆதிக்கத்தையும் அஞ்சாது எதிர்த்துப் பணியாற்றினார் பன்னீர்செல்வம்.

பார்ப்பனரல்லாத மக்கள் எவருக்கும் அடிமையாக இல்லாது சுயமரியாதையுடன் வாழ்ந்திட சுயமரியாதை இயக்கம் நடத்திவந்த தந்தை பெரியாருடன் பன்னீர்செல்வம் கொண்ட தோழமை கொள்கையின் பாற்பட்டது; இயல்பானது; ஆழமானது!

வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்மாகாண மாநாடு செங்கல் பட்டில் 1929 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17,18, தேதிகளில் நடைபெற்றது. அம்மாநாட்டின் இரண்டாம் நாள் பார்ப்பன ரல்லாத வாலிபர் மாநாட்டிற்கு பன்னீர் செல்வத்தைத் தலைமையேற்க வைத்துச் சிறப்புச் செய்தார், பெரியார்.

1930 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தஞ்சை, திருச்சி கிறிஸ்துவத் தொகுதியில் நீதிக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியடைந்து சட்டமன்றம் சென்றார்,

**1919 இல் நடைமுறைக்கு வந்த மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள் குறித்து ஆய்வு செய்ய சைமன் கமிஷன் 18-2-1929 இல் சென்னை வந்தது.காங்கிரஸ் சைமன் கமிஷனைப் புறக்கணித்தது. அப்போது நீதிக்கட்சியின் சார்பில் சைமன் கமிஷனைச் சந்தித்த குழுவில் சர்.ஏ. இராமசாமி முதலியா ருடன் சர்.ஏ.டி. பன்னீர்செல்வமும் பங்கேற்றார். இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து அளித்திடல் வேண்டும்; வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்ந்திடவேண்டும் என்று வலியுறுத்தப் பட்டன. ஆனால் நீதிக்கட்சியின் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது**

**இந்த நிலையில் இந்தியத் தலைவர்களை இங்கிலாந் திற்கே அழைத்து ஆலோசிக்க முடிவு செய்து வட்டமேஜை மாநாட்டை இங்கிலாந்தில் கூட்டியது. முதல் மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தி பங்கேற்றார் இரண்டு மாநாடுகளிலும் இந்தியக் கிறிஸ்துவர்கள் சார்பாக சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் கலந்துகொண்டார். சர்.ஏ.இராம சாமி முதலியார், ஏ.பி.பாத்ரோ, ஆர்.சீனிவாசன் ஆகியோர் நீதிக்கட்சியின் சார்பில் பங்கேற்றனர்.**

புதிய அரசியல் சீர்திருத்ததின்படி 1937 இல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் 159 தொகுதிகளில் வெற்றிபெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க முன்வரவில்லை. நீதிக்கட்சி 17 தொகுதிகளில் மட்டுமே வெற்றியடைந்தது. சர்.ஏ.டி.பன்னீர் செல்வம், கே.வி.ரெட்டி நாயுடு, எம்.சி.இராஜா, பி.கலிபுல்லா சாகிப், முத்தையா செட்டியார் ஆகியோர் நீதிக்கட்சியில் வெற்றி பெற்ற முக்கியமானவர்கள். காங்கிரஸ் அமைச்சரவை அமைக்க முன் வராததால் ஆளுநர் நீதிக்கட்சியினரை இடைக்கால அரசை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். கே.வி.ரெட்டி நாயுடு தலைமையில் மந்திரிசபை பொறுப்பேற்றுக் கொண்டது அந்த அமைச்சரவையில் நிதி, உள்துறை பொறுப்புகளை ஏற்று அமைச்சரவையில் இரண்டாம் இடம் பெற்றார் ச.ர்.ஏ.டி.பன்னீர் செல்வம். அவரோடு எம்.சி.இராஜா, பி.கலிபுல்லா சாகிப், ஆர்.எம்.பாலட் ஆகியோர் மந்திரி சபையில் இடம் பெற்றனர். 01.04.1937 அன்று பதவியேற்றனர். 14-07-1937 அன்று பதவி விலகினர்.

நீதிக்கட்சி அரசு பதவி விலகியதும் இராஜகோபாலாச் சாரியார் தலைமையில் காங்கிரஸ் மந்திரிசபை பதவி யேற்றுக் கொண்டது. ஆச்சாரியார் 11-08-1937 இல் இந்தியைக் கட்டாயப் பாடமாகத் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் புகுத்தினார். தமிழகம் கட்டாய இந்தியை எதிர்த்துப் போர்க்களம் கண்டது. திருச்சியில் சென்னை மாநில தமிழர் மாநாட்டை கி.ஆ.பெ.விசுவநாதம் 26-12-1937 அன்று கூட்டினார். அம்மாநாட்டில் தந்தை பெரியார், முத்தையா முதலியார், கருமுத்து.தியாகராஜ செட்டியார் ஆகியோருடன் சர்.ஏ.டி.பன்னீர்செல்வமும் கலந்து கொண்டார். இந்தித் திணிப்பை எதிர்த்து முழக்கமிட்டார். தமிழகம் முழுதும் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார்.

**நீதிக்கட்சி நேரடியாக இந்தி எதிர்ப்புக் களத்தில் இறங்க வில்லை, காரணம் கட்சிக்குச் சரியான தலைமை இல்லாத தேயாகும். கட்சிக்கு புத்துயிர் ஊட்டப் புதிய தலைமை வேண்டும் என்று 12-06-1938இல் இராம நாதபுரத்தில் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் பன்னீர் செல்வம் வெளிப்படையாக அறிவித்தார். 28-11-1938 அன்று நீதிக்கட்சியின் செயற்குழு கூடி தந்தை பெரியாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தனர். இதற்கிடையில் இந்தி எதிர்ப்புப்போர் தீவிரமடைந்தது. இராஜாஜி கடும் சட்டங்களைப் பயன்படுத்தி பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள் என அனைவரையும் கைது செய்து சிறையில டைத்து வந்தார்.**

06-12-1938 அன்று பெரியாரும் கைது செய்யப்பட்டார். சென்னை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு நடைபெற்றது. பன்னீர்செல்வம் பெரியாருக்காக வழக்காடினார். பெரியாருக்கு தண்டனை உறுதியானதும் பன்னீர்செல்வம் நீதிமன்றத்திலேயே பெரியாரைக் கட்டிப்பிடித்து கண்ணீர் விட்டார். பெரியாருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரியார் சிறை சென்ற பின்னரும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் குறைவின்றித் தமிழகம் முழுவதும் நடை பெற்றன. வேலூரில் 27-12-1938 இல் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் பன்னீர்செல்வம் ஆற்றிய தலைமை உரை தமிழர்களின் சிந்தனையைத் தூண்டியது; எழுச்சி கொள்ளச் செய்தது. தமிழர்களின் அரசியல் களம் தங்களுடைய நாட்டை மொழியைக் காக்கும் இனப் போராட்டமாக மாறிப்போயிற்று!

தந்தை பெரியார் தலைமையில் நீதிக்கட்சி மாநாடு 29-12-1938 இல் சென்னை தீவுத்திடலில் நடைபெற்றது. ஆனால் மாநாட்டுத் தலைவர் சிறையில்; அவருக்குப் பதிலாகப் பன்னீர்செல்வம் தலைமை ஏற்றார். பன்னீர் செல்வத்திற்கு இட்ட மாலையை, என் தோளுக்கிட்ட மாலையை தலைவர் பெரியாரின் தாளுக்கு இடுகிறேன், என்று தந்தை பெரியார் படத்திற்கு அணிவித்தார். மக்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். அதன் பின் தந்தை பெரியாரின் தலைமை உரையை பன்னீர்செல்வம் வாசித்தார். பன்னீர் செல்வத்திற்கு பெரியாரிடம். இருந்த நட்பையும், மதிப்பையும் உணர்த்துவதாக இம்மாநாட்டு நிகழ்வுகள் அமைந்திருந்தன.

பெரியாரின் விடுதலைக்காக கண்டனக் கூட்டங் களும், ஆர்ப்பாட்டங்களும் தமிழகம் முழுதும் நடை பெற்றன, சிறையில் பெரியாரின் உடல்நிலை கேடுற்று வருவதால் உடன் அவரை விடுதலை செய்யவேண்டும் என்று தமிழக அரசிற்கு பன்னீர் செல்வம் தந்தி அடித்தார்.

பன்னீர்செல்வம் சட்டமன்றத்தில் எதிர்கட்சித் தலைவர், முதல்வர் ஆச்சாரியார் இந்தி எதிர்ப்புப் போராளிகளை கொடுமையாக ஒடுக்க முற்படுகிறார் என்றும் மிகப் பெரிய அளவில் மக்கள் ஆதரவுடன் இந்தி எதிர்ப்புப் போர் நடைபெறுகின்றது எனவே கட்டாய இந்தி ஆணையைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் பேசினார்.

**முதல்வர்: பாரதியாரும் பெரியாரும் தானே இந்தியை எதிர்க்கின்றனர், வேறெவரின் ஆதரவும் இல்லை என்னும் கருத்து தொனிக்கக் கூறினார்.**

**பன்னீர்செலவம்: அப்படியானால் இந்தியை நீங்கள் ஒருவர்தானே ஆதரிக்கின்றீர்கள் என்று பதிலளித்தார்.**

இந்தி எதிர்ப்புப் போராளிகள், நடராஜன், 15-1-1939 அன்றும், தாளமுத்து 12-3-1939 அன்றும் சிறையில் மரணமுற்றனர். அவர் மரணமடைந்ததைப் பற்றி பன்னீர்செல்வம் வினா எழுப்பியபோது முதல்வர் இராஜாஜி, ஜாதி உணர்வோடும் ஆணவத்தோடும் பதிலுரைத்தார். கல்வி அறிவில்லாததால் நடராஜன் இந்து தியாலாஜிகல் பள்ளி முன் 5-12-1938 அன்று மறியல் செய்தார். ஆதிதிராவிடரிடையே கல்வி அறிவின்மை பரவலானது என்றார். தமிழரின் உரிமைப் போராட் டத்தை கேவலப்படுத்தினார். பன்னீர்செல்வம், தங்கள் பதிலில் சாதிவெறி தெரிகின்றது, என்று சீற்றத்துடன் பதிலுரைத்தார்.

பின்னர் உடல் நலக் குறைவு காரணமாகப் பெரியார் 22-5-1939 அன்று சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

**1939 செப்டம்பரில் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. இந்தியர்களின் விருப்பத்தை அறியாமல் இந்தியாவைப் போரில் பிரிட்டிஷ் அரசு ஈடுபடுத்தியதை 23-10-1939 இல் வார்தாவில் கூடிய காங்கிரஸ் செயற் குழு கண்டித்ததுடன் அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகவேண்டு மென்றும் அறி வுறுத்தியது. அதைத் தொடர்ந்து 30-10-1939 அன்று இராஜகோபாலாச்சாரியார் அமைச்சரவையும் பதவி விலகியது. பெரியாரும் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்துவிட்டு அரசின் போர் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு கொடுத்தார். அரசு நல்லெண்ண நடவடிக்கையாக 1939 நவம்பர் திங்கள் மத்தியில் இந்தி எதிர்ப்புப் போரில் கைதான வர்களை விடுதலை செய்தது.**

போர் குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் பேசமுடிவெடுத்த கவர்னர் ஜெனரல் நீதிக்கட்சியின் சார்பாகப் பேச பன்னீர்செல்வத்திற்கு அழைப்பு விடுத்தார். பன்னீர்செல்வம், தன்னுடன் பேசுவதைவிடத் தலைவர் பெரியார் அவர்களுடன் பேசினால் நீதிக்கட்சி யின் முழு ஆதரவையும் கிடைத்திடச் செய்வார் என்று தெரிவித்தார். அதன்பின் தலைவர் நீதிக்கட்சியின் சார்பாகப் பேச பன்னீர்செல்வத்தையே அனுப்பி வைத்தார்.

**பின்னர் போர்க்கால அமைச்சரவை உருவாக்கப்பட்டது. இந்திய அமைச்சருக்குத் துணையாக அமைக்கப்பட்ட குழுவில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.**

**பன்னீர்செல்வத்தின் நியமனம் தமிழக மக்களிடையே மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது**

சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்திற்கு பாராட்டும் வாழ்த்தும் குவிந்தன.சென்னை கன்னிமரா ஓட்டலில் அவருடைய நண்பர் நெடும்பலம் சாமியப்ப முதலியார். விருந்து கொடுத்தார். அவ்விருந்தில் தந்தை பெரியார், பி.டி. இராஜன், எம்.சி.ராஜா, முத்தையா முதலியார் போன்றோர் கலந்துகொண்டு பன்னீர்செல்வத்தைப் புகழ்ந்து பேசினார்கள்.

பெரியார், பன்னீர்செல்வம் அவர்களுக்கு ஏற்பட்ட உத்தியோகத்திற்கு நாம் பெருமைப்பட வேண்டும். நாட்டிற்கு இன்னும் நலன்கள் செய்வார். என்னைப் பொறுத்தவரை நீதிக்கட்சிக்குச் சரியான அஸ்திவாரமாகவும் அதிக உதவியாகவும் இருந்தவர். இந்த நெருக்கடியான சமயத்தில் இந்தியாவை விட்டுப் பிரிந்து செல்கிறார் என்றே வருத்தப்படுகிறேன். இந்த உத்தி யோகம் நம் கட்சிக்கு நல்லதோ கெட்டதோ தெரியாது. என்று தம் மனதில் ஏதோவொரு சஞ்சலத்துடன் பேசினார்.

1940 பிப்ரவரி 25 ஆம் நாள் தன் ஊரைவிட்டு விற்குடி இரயில் நிலையத்திலிருந்து சென்னைக்குப் புறப்படுகிறார். சென்னை சென்ட்ரலில் அவரைச் சூழ்ந்து பெரியார், அவரது ஆத்ம நண்பர் சாமியப்பா, அவரது மூத்தமகன் ஜார்ஜ் ஆகியோர் நின்றிருந்தனர். எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டார். மகனைக்கட்டித் தழுவி முத்தமிட்டுவிட்டுப் பெரியாரை நோக்கினார். இருவரும் பேசமுடியாது தத்தளித்தனர்.

சென்னையிலிருந்து சென்ற பன்னீர்செல்வம் கராச்சி சென்றடைந்தவுடன் பெரியாருக்கு ஒருகடிதம் எழுதினார்.

விமான நிலையம் கராச்சி 29-2-1940

எனது அன்புள்ள தலைவர் அவர்களுக்கு,

நேற்று மாலை பம்பாயிலிருந்து இங்கு வந்து சேர்ந்தேன். இன்று காலை நான் எந்த பிளேனில் போகிறதாயிருந்தேனோ, அந்த பிளேன் இன்னும் இங்கு வந்து சேரவில்லை. அநேகமாய் இன்று மாலை இங்கு வந்துசேரும். நாளை காலை 7 மணி சுமாருக்கு நான் இங்கிருந்து கிளம்புவேன். ஆகவே வரும் திங்கள் கிழமை லண்டன் போய்ச் சேருவேன் என்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு, தங்களன்புள்ள,
**பன்னீர்செல்வம்**

அதற்குப் பின் அவரது மரணச் செய்திதான் தமிழர் களின் காதுகளில் தீயாகப் பாய்ந்தது.

மார்ச் 1, 1940 அதிகாலை நேரம் அனிபால் இராணுவ விமானத்தில் பன்னீர் செல்வத்துடன் நான்கு இராணுவ அதிகாரிகளும்,ஆங்கில அதிகாரிகள் மூவரும் சென்றனர். ஓமன் தீபகற்பத்தில் விமானம் விபத்துக்குள்ளாகியது. அதில் பயணித்தவர் யாரும் உயிர் தப்பவில்லை. இச்செய்தி இடியெனத் தமிழ் மக்களைத் தாக்கிற்று.

தலைவர் பெரியாருக்கே தாங்கமுடியாத பேரிழப்பு! பெரியாரின் கண்ணீர் உரை:

என் மனைவி முடிவெய்திய போதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை. ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை. என் தாயார் இறந்த போதும், இயற்கை தானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா, இது பேராசை அல்லவா என்றுதான் கருதினேன். 10 வயதிலேயே லண்டனுக்கு அனுப்பி படிக்க வைத்த ஒரே அண்ணன் மகன் படித்துவிட்டு இந்தியா வந்து சேர்ந்து சரியாக 20ஆவது வயதில் இறந்து போனதற்காகவும் பதறவில்லை; கதறவில்லை. பன்னீர் செல்வத்தின் மறைவு மனதை வாட்டுகிறது. தமிழர்களைக் காணுந்தோறும், தமிழர் நிலையை எண்ணுந்தோறும் நெஞ்சம் பகீரென்கிறது.

காரணம் முன்சொல்லப்பட்ட மனைவி, தாயார், குழந்தை ஆகியவர்கள் மறைவு என் தனிப்பட்ட சுகத் துக்கத்தைப் பொறுத்தது. தந்நலம் மறையும் போது, அவர்களது மறைவின் நினைவும் மறந்து போகும். பன்னீர்செல்வத்தின் மறைவு பொதுநலத்தைப் பொறுத்தது. எனவே தமிழர்களைக் காணுந்தொறும், நினைக் குந்தோறும் பன்னீர்செல்வம் ஞாபகத்திற்கு வருகிறார். இது என்று மறைவது. இவருக்குப் பதில் யாரென்று மனம் திகைக்கிறது என்று எந்த இழப்பிற்கும் எளிதில் கலங்காத தந்தை பெரியார் உணர்ச்சி வயப்பட்டு, மனம் பதைக் கிறது நெஞ்சு திக் திக் என்று அடித்துக்கொள்கிறது கண் கலங்கி மறைக்கிறது என்று பதற்றத்தோடு எழுதுகிறார்.

பன்னீர் மறைந்த 1-4-1940 ஆம் நாளை துக்கதின மாக அனுஷ்டிக்குமாறுச் சொல்கிறார்,

பன்னீர்செல்வம் அவர்களின் நினைவைப் போற்றுவோம்! அவர் போல் கொள்கையில் உறுதி கொண்டவராக வாழ்வோம்!

அவர் போல் தன் நலம் கருதாத் தொண்டராய் வாழ்வோம்!

**1-6-2018 பன்னீர்செல்வம் பிறந்த நாள்** ❖

## பெங்களூரில் புரட்சிக்கவிஞர் விழா



பெங்களூரு திருவள்ளுவர் சங்கத்தில் புரட்சிக் கவிஞர் கனக. சுப்புரத்தினம் அவர்களின் சிறப்புப் பற்றி 28.5.2018 முற்பகல் நடைபெற்ற கூட்டத்தில் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலர் சி. பெரியசாமி சிறப்புரையாற்றினார்.

மா.பெ.பொ.க.வின் நீண்டநாள் ஆதரவாளர் தோழர் கி.சு.இளங்கோவன் தலைமை தாங்கினார்.

மார்க்சியப் பெரியாரிய அறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களுக்கு அன்பு கனிந்த இனிய வணக்கம்.

சிந்தனையாளன் இதழ் சுவடி 42, ஏடு 12 - 94ஆவது பிறந்த நாள் 21.6.2018 செய்தியோடு ஒரு சிறப்பான வரலாற்றுச் செய்தி ஒன்றினை இருள்சூழ்ந்த இடத்தில் ஒளியேற்றி இருளைப் போக்கியுள்ளீர்கள்.

1865இல் வடலூர் இராமலிங்க அடிகளார் வாழ்க்கை நெறி நூல் நம்முடைய திருக்குறளே என்றும், முதன் முதலில் குறள் வகுப்பு நடத்தியவரும் பின்னால் வரு பவர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும் ஆணையும் இட்டு உள்ளார்கள். இந்தச் சிறப்பான செய்தியினை 94ஆம் பிறந்த நாளில் வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்துள்ள தூய திருப்பணிக்கு எங்கள் அன்பு கனிந்த இனிய வணக்கத்தினைத் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

இன்று தமிழ்நாட்டில் எல்லாப் பள்ளிகளிலும் ஆரம்ப முதல் உயர்நிலை வரை கற்பிக்க வேண்டி பேசா நிலை (மௌனம்) 77ஆவது நாளாக தொடர்கிறது. இந்தச் செய்தி உங்களுக்கும் அனுப்பியுள்ளோம்.

வள்ளலார் அகவலில் ''அருள்பெறின் துரும்பும் ஓர் அய்தொழில் புரியும் அவர் அருளைப் பெற்றதால்தான் எந்த ஞானியுமே செய்யாத தூய திருப்பணிகளைச் செய்து முடித்து வழிகாட்டினார். அவர் காட்டிய அருள்நெறி வழியில் தமிழ்வழி கல்வி மீட்டெடுக்க பயணத்தில் உள்ளோம். உங்கள் வாழ்த்துகள் உடன் வெற்றி பெறுவோம்.''

**க.இரா. முத்துச்சாமி,** திருப்பூர்

# இராமியாவின்

# "பகுத்தறிவுச்சுடர் எஸ்.ஆர்.இராதா" நூல் வெளியீடு



ஆன்மிக வட்டத்தை விட்டு வெளியில் எட்டிப்பார்க்கவே அஞ்சும்/கூச்சப்படும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சௌராஷ்டிர சமூகத்தில், தந்தை பெரியாரின் கெள்கையில் பற்றுறுதி கொண்ட மனிதராக எஸ்.ஆர்.இராதா இருப்பது சிறப்பினும் சிறப்பு ஆகும். அவர் தன் பதின் மூன்றாவது வயதி லேயே பெரியாரின் கொள்கைகளால் கவரப்பட்டார். தி.மு.க. தெடங்கப்பட்ட போது அக்கட்சியில் இணைந்தார். தி.மு.க.வினர் யாருமே பெரியாரைப் பொதுக் கூட்டத்தில் பேச அழைக்காத போது, இவர் தன் சொந்த ஊரான கும்பகோணத்தில் பெரியாரை அழைத்துப் பேசவைக்கும் அளவிற்கு அரசியல் தெளிவும், கருத்தியல் தெளிவும் பெற்று இருந்தார்.

தி.மு.க., அதன்பின் அ.இ.அ.தி.மு.க. என அரசியல் வாழ்க் கையில் பயணித்த அவர் தொழிற் சங்கத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், சட்டமேலவை உறுப்பினர், வாரியத்தலைவர், அமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எனப்பல பெறுப்புகளில் மிகவும் திறமையாகவும், ஊழலின் நிழலே படாமலும் செயலாற்றி உள்ளார். இவரால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் பல நன்மைகளை அடைந்து உள்ளனர். அவ்விதத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பினரான சௌராஷ்டிர மக்களும் பயன் அடைந்து உள்ளனர்.

அளவிலும் குணத்திலும் இவருடைய மகத்தான தொண்டு, ஆன்மிக வட்டத்தை விட்டு வெளியே எட்டிப்பார்க்கவே அஞ்சும்/கூச்சப்படும் சௌராஷ்டிர மக்களையே அவ்வட்டத்தில் இருந்து வெளியே வந்து அவருக்குப் பாராட்டுவிழா எடுக்கவேண்டும் என்று தோன்ற வைத்து இருக்கிறது. அதன் பயனாக வெளி வந்ததுதான் இராமியா எழுதிய "பகுத்தறிவுச் சுடர் எஸ்.ஆர். இராதா (முன்னாள் அமைச்சர் எஸ்.ஆர்.இராதாவின் வாழ்க்கை வரலாறு)" எனும் நூல்.

இந்நூலை சௌராஷ்டிர கல்சுரல் அகாடெமியினர் பதிப்பித்து உள்ளனர்; 10.6.2018 அன்று வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வாதன் வெளியிட, பெருநகரச் சென்னையின் முன்னாள் மேயர் சைதை. துரைசாமி முதல்படியைப் பெற்றுக் கொண்டார்.

வரவேற்புரை ஆற்றிய நீதிபதி சத்தியமூர்த்தி இந்நூலின் நாயகன் எஸ்.ஆர்.இராதாவின் சிறப்புகளை எடுத்துரைத்தார். மேலும் இந்நூலைச் சுவைபடப் படைத்த நூலாசிரியரையும் அவருக்கு உற்ற துணையாகவும் உந்து விசையாகவும் செயல்பட்ட நூலாசிரியரின் துணைவியார் இராமியா சுமதி யையும் பாராட்டினார்.

**நூலை வெளியிட்டுப் பேசிய வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன், இந்நூல் இராதாவின் அரசியல் வாழ்க் கையை மிகத் தெளிவாக விளக்குகிறது என்றும், எஸ்ஆர். இராதா அரசியலில் நேர்மைக்கும் எளிமைக்கும் வழிகாட்டி என்றும், இந்நூல் காலத்தின் தேவை என்றும் கூறினார்.**

நூலின் முதல் படியைப் பெற்றுக் கொண்ட முன்னாள் மேயர் சைதை. துரைசாமி, திராவிட இயக்கத்தின் பல வரலாற்று நிகழ்வுகள் இந்நூலில் இடம்பெற்று உள்ளதாகவும், அவையும் மிகச்சுவைபட விளக்கப்பட்டு இருப்பதாகவும் கூறினார். மேலும், இதுகாலத்தின் தேவை என்று கூறிய அவர் இந்நூலை அனை வருக்கும் அளிக்கும்படியும், அதற்கான தொகையைத் தன் மனித நேய அறக்கட்டளையின் மூலம் கொடுப்பதாகவும் கூறினார்.

முன்னாள் அமைச்சர் கே.கே.கலைமணி பேசுகையில் எஸ்.ஆர்.இராதா தமது சமூக மக்களுக்கு நன்மை செய்யும் போது, அதுபிற சமூக மக்களைப் பாதித்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார் என்று குறிப்பிட்டார். முன்னாள் அமைச்சர் ஆனூர் ஜெகதீசன் பேசுகையில் இந்நூலைப் படிக்கத் தொடங்கினால், படித்து முடிக்கும் வரையில் கீழே வைக்கத் தோன்றாத அளவுக்கு விறுவிறுப்பாகவும் சுவையாகவும் உள்ளது என்று கூறினார்.

மருத்துவர் ஆர்.எம்.ஆர். சாந்திலால் பேசுகையில், நூலில் இடம் பெற்றுள்ள பல நிகழ்வுகளைத் தொட்டுக்காட்டி, அவற்றை எல்லாம் நூலாசிரியர் விறுவிறுப்பாகவும் சுவையாகவும் எழுதி யுள்ளார் என்று கூறி நூலைத் தவறாமல் படிக்கும்படி கேட்டுக் கொண்டார். திரைப்பட இயக்குநர் கே.பாக்கியராஜ் பேசுகையில் இந்நூல் காலத்தின் தேவை என்றும், இதை நூலாசிரியர் மிகச்சிறப்பாகப் படைத்து இருக்கிறார் என்றும் கூறினார்.

இறுதியில் எஸ்.ஆர்.இராதா ஏற்புரை ஆற்றினார். இந் நிகழ்ச்சியைப் பட்டிமன்ற நாயகன் தா.கு.சுப்பிரமணியன் தொகுத்து அளித்தார்.

## மக்கள் விரோதிகள்

இப்பொழுது பல வழிகளில் எளிதில் பொது மக்களை ஏமாற்றுகின்றனர். குறிப்பாக உழவர்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். மானியம் என்பது உழவர்களுக்கு இன்றுவரை முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆளும் கட்சிக்காரர்களே பல வழிகளில் மானியத்தைக் கொள்ளை யடித்துவிடுகின்றனர். உழவுக்கு நீர்நிலைகள் மிக முக்கியம். அனைத்து நீர்நிலைகளையும், நீர்வழிகளையும் நம்மை ஆண்ட- ஆளும் கட்சிக்காரர்களே ஆக்கிரமித்துள்ளனர். நீர் நிலைகளை ஆக்கிரமிப்பது பல உயிரினங்களைக் கொலை செய்ததற்குச் சமம். இப்படிப்பட்டவர்களைத் தண்டிக்காத அரசும் அதிகாரிகளும் மக்கள் விரோதிகளே.

இலவசமாகத் தேர்தல் காலங்களில் பணம் மற்றும் பொருள்கள் கொடுத்து வாக்கு கேட்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் மக்கள் விரோதிகளே. இலவசமாகக் கொடுக்க வேண்டிய மருத்துவம், கல்வி, குடிநீர் போன்ற அத்தியாவசியமானவற்றை வியாபாரமாக்கிய அனைவரும் மக்கள் விரோதிகளே.

வியாபாரப் பொருட்களை வாங்கும் பொழுது அதிக எடை வைத்து வாங்குவதும், விற்கும் பொழுது எடை குறைவாக வைத்து விற்பதும், இதைக் கட்டுப்படுத்தாத அதிகாரிகளும் அரசும் மக்கள் விரோதிகளே. மருத்துவம் மற்றும் கல்வி நிறுவனங்களை வியாபாரமாக நடத்துபவர்களும், காடுகளை- இயற்கை வளங்களை அழிப்பவர்களும் மக்கள் விரோதிகளே.

பொது நலனுக்குப் போராடும் போராளிகளைப் பாராட்டாமல், அவதூறாகத் தீவிரவாதி என்று விமர்சிக்கும் ஊடகங்களும், விமர்சகர்களும் மக்கள் விரோதிகளே.

நதிகளை இணைக்காமல், கொள்ளையடிக்கும் திட்டங்களை மட்டும் தொடர்ந்து செயல்படுத்தும் அரசுகள் மக்கள் விரோதிகளே.

**- உழவர் மகன் ப.வ.**

## வாழ்க்கை ஒப்பந்த விழா



### ரோசலின்-பிரபு

சிந்தனையாளன் ஏட்டின் ஆர்வலரும், தொடர் வண்டித் துறையில் பணியாற்றுபவருமான தோழர் சே. ஆஸ்காரின் அன்புத் தங்கை ஏ.எஸ்.ரோசலின் மேரி அவர்களுக்கும்; எம்.பிரபு அவர்களுக்கும் 25.5.2018இல் GBJ-447/4, 13ஆம் குறுக்குச் சாலை, மரந்தவரல்லி, பெங்களூரு 37இல் உள்ள ஹீப்ரான் மாதா கோயிலில் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி மணமக்களை வாழ்த்தினார்.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சூலை-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **மு.அரங்கநாதன்** | மறைமலைநகர் | 1000/- |
| **வி.எஸ்.சானகிராமன்** | மறைமலைநகர் | 1000/- |
| **தி.ச.குணசேகரன்** | திருக்கழுக்குன்றம் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **ச.சம்பந்த சிவக்குமார்** | காஞ்சிபுரம் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சூலை-2018

| | | |
|---|---|---|
| **ச.சம்பந்த சிவக்குமார்** | காஞ்சிபுரம் | 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி .... | 100/- |

**பெரியார் ஈ.வெ.ராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" நூல் தொகுப்புக்கு வங்கி வழியே பணம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட வங்கிக் கணக்கிற்கு விடுக்கலாம்.**

**PERIYAR E.V.RAMASAMY-NAGAMMAI EDUCATION & RESEARCH TRUST**

Bank Name : **BANK OF BARODA**
A/c. No.: 06780200000274 IFSC Code : BARB0TIRUVA
Branch : Tiruvateeswaranpet Branch, Triplicane, Chennai-600 005


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**